# யாவும் கற்பனையல்ல



செங்கதிரோன் சிறுகதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாவும் கற்பனையல்ல

(செங்கதிரோன் சிறுகதைகள் )

செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்

வெளியீடு

'செங்கதிர்' இலக்கிய வட்டம், மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாவும் கற்பனையல்ல**

| | |
|---|---|
| ISBN | : 978-624-931-370-5 |
| ஆசிரியர் | : செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் |
| | இல:607, பார்வீதி, மட்டக்களப்பு. தொ.இல: +94771900614 |
| வகை | : சிறுகதைகள் |
| மொழி | : தமிழ் |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கே |
| முதற்பதிப்பு | : செப்டம்பர் 2023 |
| பக்கங்கள் | : 80 |
| விலை | : ரூபா. 500.00 |
| படிகள் | : 500 |
| அளவு | : A5 |
| வடிவமைப்பு | : ச.பா மதன் |
| கதைச்சித்திரம் | : கலைஞர் A.O.அனல் |
| அச்சுப் பதிப்பு | : காந்தள் அச்சகம், புதுக்குடியிருப்பு 065 222 67 22 |

**YAAVUM KATPANAIYALLA**

| | |
|---|---|
| ISBN | : 978-624-931-370-5 |
| Author | : Senkathiron T.Gopalakrishnan |
| | No:607, Bar road, Batticaloa. T.P : +94771900614 |
| Type | : Short stories |
| Language | : Tamil |
| Copyright | : Author |
| 1st Edition | : September 2023 |
| Pages | : 80 |
| Price | : LKR 500.00 |
| Copies | : 500 |
| Size | : A5 |
| Layout | : Sa.Pa.Mathan |
| Story art | : Kalaignar A.O.Anal |
| Print | : Kaanthal Printers, Batticaloa. 065 222 67 22 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முன்னீடு-1

செங்கதிரோன் எழுதியுள்ள "யாவும் கற்பனையல்ல" என்ற இச் சிறுகதைத் தொகுப்பு சமகால ஈழத்து இலக்கியச் செல்நெறியிலிருந்து விலகிநிற்கின்ற வித்தியாசமான செல்நெறிசார்ந்த தொகுப்பாகின்றது. இதுபற்றி எடுத்துரைப்பது இவ்வேளை பொருத்தமானது என்று கருதுகிறேன்.

சமகால ஈழத்துச் சிறுகதைகள் பெரும்பாலானவற்றின் பேசு பொரு ளான போர்க்கால அனுபவங்கள், போருக்குப் பிற்பட்ட அனுபவங்கள், பெண்கள் வாழ்க்கை நிலை, பாலுணர்ச்சி வேட்கை, தொன்மங்களின் மறுவாசிப்பு, பின்நவீனத்துவ நோக்கு, புகலிட வாழ்க்கையில் ஏற்பட்டு வரும் பண்பாட்டு மாற்றங்கள் முதலியனபற்றிப் பேச முற்படுவது இலக்கிய ஆர்வலர்களறிந்த விடயமே. இத்தொகுப்பிலுள்ள நான்கு சிறுகதைகள் தவிர்ந்த ஏனையவை "இவையும் சிறுகதைப் பொருளாகுமோ" என்று கருதக்கூடிய அளவிற்கு நாளாந்த வாழ்க்கையின் சாதாரண விடயங்கள் பற்றிப் பேச முற்படுகின்றன.

"குடை கவனம்" என்ற சிறுகதை குடும்ப வாழ்க்கையிலீடுபட்ட ஆண்கள் பலரும் அன்றாடம் அனுபவிக்கும் விடயம் பற்றி - சந்தைக்குச் சென்று பொருட்கள் வாங்கிவிட்டு வீட்டிற்கு வரும்போது எதிர்கொள்கின்ற சுவாரஸ்யமான சவால்கள் பற்றி - பேச முற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் கவிஞர் சண்முகம் சிவலிங்கமும் இதுபற்றிச் சில தடவைகள் உரையாடியிருப்பது இவ்வேளை நினைவில் நிழலாடுகின்றது. எனினும் அவரோ வேறெவருமோ இத்தகைய சிறுகதை எழுதியிருப்பதாக நினைவுகூர முடியவில்லை.

'கரப்பத்தான்பூச்சி'யும் நாளாந்தம் ஏற்படும் மற்றொரு அனுபவம் பற்றிப்பேசுகின்றது. நடிகைகளின்பேட்டிகளில் மட்டும் இடம்பெற்றிருந்த அந்த ஜீவன் இப்போது வித்தியாசமானதொரு குடும்பக் கதையில் இடம்பிடித்திருப்பது கவனத்திற்குரியது.

'ஒரு குழந்தையின் அழுகை' குழந்தைகள் அழுவதற்கான காரணத்தைப் புரிந்துகொள்வது இலகுவான விடயமல்ல என்பதை எடுத்துக்காட்டுகின்றது. நீண்டகால அனுபவமுள்ள தாய்மாரால் மட்டுமே சில சந்தர்ப்பங்களில் குழந்தையின் அழுகைக்கான காரணத்தைப் புரிந்து கொள்ள முடியும். எவ்வாறாயினும் இச்சிறுகதையின் ரிஷிமூலம் பற்றி அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

'துறவு' இன்னொருவிதமான அனுபவ வெளிப்பாடு. "ஊருக்குழைத் திடல் யோகம்" என்று பாடினான் பாரதி. துறவிற்கு புதியதொரு விளக்கமளித்திருக்கிறார் செங்கதிரோன். இத்தொகுப்பிலுள்ள சிறந்த உருப்படிகளில் இதுவுமொன்று.

ஜப்பான் தேசத்துப் புகையிரதநிலையமொன்றிலே தினமும் வழியனுப்பி வைக்கும் எஜமான் மரணித்ததை அறியாது காத்திருந்து உயிர்விட்ட ஒரு நாய்க்குச் சிலை வைத்திருப்பதாக தகவலொன்றுண்டு. இத் தொகுப்பிலுள்ள 'லயன்' அவ்வாறானதொரு நாய்க்குச் சிறுகதையூடாகச் சிலை வைத்துள்ளது.

கற்பனை செய்யமுடியாத முற்றிலும் வித்தியாசமான மூன்று சிறுகதைகளிலொன்று "யாவும் கற்பனையல்ல" என்பது. பேய்கள் பற்றி நவம், ஏ.இக்பால், இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் முதலானோர் எழுதியுள்ள சிறுகதைகள் சிலவற்றை நினைவுகூர்ந்து நோக்கும்போது எடுத்துரைப்பு முறை காரணமாக இச் சிறுகதை தனித்துவம் பெற்றிருப்பது வெளிப்படுகின்றது. "பேய்களில் எனக்கு நம்பிக்கை இல்லை, ஆனால் பேய்களுக்கு நான் பயம்" என்று புதுமைப்பித்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருதடவை குறிப்பிட்டிருப்பதை வாசகர் சிலரறிந்திருப்பர். அன்னாரது சிந்தனைக்கு இச்சிறுகதையும் 'அந்த ஏவறைச்சத்தம்' மும் 'கூடுவிட்டு' ஆகியனவும் சிறுகதையின் தடத்தில் செல்கின்றவைதாம். "எங்கே சமயம் முடிகின்றதோ அங்கே விஞ்ஞானம் தொடங்குகின்றது" என்றொரு அறிஞன் குறிப்பிட்டிருப்பதை மேற்குறிப்பிட்ட மூன்று சிறுகதைகளும் நினைவுபடுத்துகின்றன என்பதிலும் தவறில்லை.

சமூக, போராட்ட, அரசியல் சார்ந்த முக்கியமான சில விடயங்களைத் துணிவுடன் ஆரோக்கியமான விமர்சனக் கண்ணோட்டத்தில் சிறுகதைகளாக 'ராஸ்கல்ஸ்', 'சகோதரத்துவம்', 'ஊர்மானம்', 'துரோகி' ஆகிய சிறுகதைகள் காணப்படுகின்றன. இத்தகைய அணுகுமுறையில் எழுதுகின்ற எழுத்தாளர்கள் சிலரேயுள்ள வரிசையில் இப்போது செங்கதிரோனும் இச் சிறுகதைகளூடாக இணைந்து கொள்கிறார்.

இறுதியாக ஒன்று. சிந்தனைக்கு விருந்தான சிறுகதைகள் தந்துள்ள இவரிடம் பேச்சுமொழியைச் சிறப்பாகக் கையாளுகின்ற ஆற்றல் இருப்பது பலமெனில், களவர்ணனையைச் சில சந்தர்ப்பங்களிலே நீட்டிச் செல்வது பலவீனமென்பதையும் இவ்வேளை கூறத்தான் வேண்டும்.

வாழ்த்துக்களுடன்
**பேராசிரியர்.செ.யோகராசா**
மேனாள் மொழித்துறைத் தலைவர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்
18.09.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முன்னீடு - 2

# மனங்களில் உச்சரிக்கும் எழுத்து மந்திரம்

என் அபிமானத்துக்குரிய எழுத்தாளரும், நாடறிந்த இலக்கிய கர்த்தாவும், இதழியலாளரும், அரசியல் செயற்பாட்டா ளருமான செங்கதிரோன் திரு.த. கோபாலகிருஷ்ணன் அவர்களின் இந்த சிறுகதைத்தொகுப்பை வாசித்தபின், என் மனதில் பொங்கிய அருட்டுணர் வின் சில கூறுகளை ஒரு வாசகனாக இங்கு பதிவுசெய்து கொள்கிறேன்.

இத்தொகுப்பில் உள்ள 13 கதைகளையும் சிறுகதைகளுக்குரிய பண்புகள் மாறாமல், தனக்குரிய இயல்பான எழுத்து நடையில் ஒரு தவநிலையில் இருந்து படைத்துத் தந்திருக்கிறார் இந்த எழுத்து வித்தைக்காரர். சிறுகதை என்ற சொல்லுக்கு அகராதிப் பொருள் போல, 13 சிறுசிறு, கதைகளை தந்துள்ள இந்தப் படைப்பாளியின் எழுத்தில், ஆங்காங்கே தூவப்பட்டுள்ள ஏதோ ஒரு மந்திரப் பொடி நம்மை அவரின் எழுத்தின் மீது வசியம் செய்து இடையறாது வாசிக்கவும் இவருடனே வசிக்கவும் செய்து விடுகிறது. தேர்ந்த கதைக் கருக்களை நேர்த்தியான முறையில் வடிவமைத்து, தன் நிர்மாணங்களைத் தகுந்த முறையில் கட்டமைத்து வாசகர்முன் வைப்பதில் வெற்றி பெற்றிருக்கிறார் இந்த எழுத்து எந்திரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தூழியத்தில் நீண்டகால அனுபவச் செழுமை காரணமாக தன் கதைகளை மிகவும் இலாவகமாக சொல்லிச் செல்லும் இந்தக் கதைசொல்லியின் வாழ்வியலின் பல்வேறுபட்ட அனுபவக் கூறுகளும், ஆழமான வாசிப்பின் அறிவுக் கூர்மையும், இத் தொகுப்பில் விரவிக்கிடப்பதை நம்மால் உணரக்கூடியதாக உள்ளது. இந்தக்கதைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பிரித்து ஆராய்ந்து, அவற்றின் வார்ப்புத் திறன், சொல்முறைமை, கையாண்ட உத்திகள் எனப் பேசிச்செல்ல எத்தனையோ விடயங்கள் உள்ளன. அகண்ட தமிழிலக்கியப் பரப்பில் அவைபற்றிப் பேசப்படவேண்டிய அவசியமும் உள்ளது.

தவிரவும், இவருக்குள் இயங்கும் ஒரு சமூகப் போராளியின் ஆக்ரோஷ வெளிப்பாடு, சில கதைகளில் முனைப்புக் காட்டுகிறது. அதே சமயம் அவர் அக்கதைகளை ஒரு, தீவிரப் போக்கில் சொல்லுகிற தன்மை, செங்கதிரோனின் சமூக அக்கறையை வெளிக்காட்டுகிறது. மட்டுமன்றி, சமூகக் கொடுமைகளுக்கெதிராகவும் தனிமனித சிறுமைத் தனத்துக்கு எதிராகவும் உரத்துக் குரல் கொடுக்கும் தன்மைகளும் வெளிப்பட்டு நிற்கின்றது. 'துரோகி', 'சகோதரத்துவம்', போன்ற கதைகளில் இந்த பண்பினைக் காணக் கூடியதாக உள்ளது.

அதே போல, அவர் சில கதைகளைச் சொல்லிச் செல்லும் போக்கிலேயே தன், இயல்பான நகைச்சுவையையும், குறும்புத் தனத்தையும் அளவோடு கலந்து தெளித்து விடுகிற பாங்கினை, நன்றாக இரசிக்கவும் முடிகிறது. 'குடை கவனம்' என்ற கதையில் மனைவிக்கு கொடுக்கின்ற 'குறும்புக்கல்தா'வும், 'ஒரு குழந்தையின் அழுகை' கதையின் முடிவில் வாசகருக்குத் தரும் அதிரடி முடிவிலும் நம்மை புன்னகைக்க வைத்துவிடுகிறார் இந்த எழுத்துக் குறும்பர். மேலும், "அந்த ஏவறைச் சத்தம்", "கூடு விட்டு", "யாவும் கற்பனையல்ல", போன்ற கதைகள், அமானுஷ்யத் தன்மையின எனலாம். இந்தவகையான கதைக் கருக்களைத் தமிழ்ச் சிறுகதைத் தளத்தில் பரிசோதித்துப் பார்த்தவர்கள் சொற்பளவினரே. இதில், செங்கதிரோன் தன் மாயத் தமிழ் நடையையும், கைவால்யமான எழுத்தனுபவத்தையும் கொண்டு மிக இலாவகமாக இக்கதைகளை நகர்த்தி, தன் அனுபவ உணர்வை வாசகருக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொற்றிவிடச் செய்வதில் வெற்றி பெற்று விடுகிறார். இக்கதைகள் தரும் விசித்திர நுகர்வை வாசகரால் இலகுவில் கடந்து விட முடிவதில்லை. சமுக அழுக்குகள் மீது வெஞ்சினம் கொண்டு வாழுகிற, இந்த எழுத்துப்போராளி, 'ஊர்மானம்' என்ற கதையில், வேலாப்போடியின் உருவகத்தில் தானே வந்து, சமூகத்திடம் உரத்துக் கேட்கிற கேள்விகளுக்கு தமிழ்-முஸ்லிம் சமூகத்தில் யாரிடமும் பதில் இல்லை.

'அங்கிருந்து வந்தவர்கள்' என்ற கதை, விடுதலைப் போராளிகளின் கட்டுப்பாடு சிலபோதில் கைமீறிச் சென்று பரிதாபத்துக்குரிய ஓர் இளைஞனைப் படுகொலை செய்வதில் வந்து முடிகிற துர்ப்பாக்கிய சம்பவம் ஒன்றை பதைபதைக்க வைக்கும் மொழியில் விபரிக்கிறது. விறுவிறுப்பான எழுத்தில் அதே சமயம் நிதானமான முறையில் இக்கதையை நகர்த்திச் சென்றிருக்கிறார் ஆசிரியர்.

இத்தொகுதியில் உள்ள, 'கரப்பத்தான்பூச்சி' என்ற கதை, இந்நூலின் தலைப்பாக போடக்கூடிய அளவு முக்கியமான ஒரு நட்சத்திரக் கதையாகும். இரு கரப்பத்தான் பூச்சிகளின் புணர்வில், மகாபாரதப் புராணத்தின் ஒரு சம்பவத்தைக் கொண்டு வந்து கச்சிதமாகப் பொருத்தி, கடைசியில், "இரு உயிர்கள் கலவி இன்பத்தில் ஈடுபட்டிருக்கையில், அதனைக் குழப்புவது அல்லது கெடுப்பது சாபத்துக்குரிய பாவம்." என்று கதாசிரியர் அவற்றைத் தப்பிக்க வைப்பதுவும், பாண்டு மன்னனை மறுவாசிப்புச் செய்துள்ள வகையிலும் இது முக்கியத்துவம் பெறுகிறது. மேலும், இந்தப் படைப்பாளியின் உயர்ந்த, இளகிய மனோபாவத்தின் போற்றுதலுக்குரிய பண்பும் இக்கதையில் இழையோடி நிற்கிறது.

பொதுவாக, இத்தொகுப்பிலுள்ள கதைகள், சொல் நேர்த்தியிலும், எடுத்தாண்ட கருப்பொருள்களாலும் வெற்றிபெற்று விடுகின்றன. வாசகர் மனதிலும் தங்கி விடுகின்றன.ஆசிரியர் தன் கதைகளை, தான் வாழும் சூழலை ஒட்டியே நகர்த்துவதால் கதைகள் மிக யதார்த்தமான தன்மையைப் பெற்று, வாசகரைக் கதையோடு ஒன்றிக்க வைத்து விடுகின்றன. இது ஆசிரியருக்குக் கிடைத்துள்ள வெற்றியாகும். தவிரவும், சிறுகதைகள் பற்றிய ஆசிரியரின் தெளிவான பார்வையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது வெளிக்காட்டி நிற்கிறது. இத்தொகுப்பில் உள்ள பலகதைகள் பல்வேறு சிறுகதைப் போட்டிகளில் பரிசுகள் பெற்றுள்ளமை அதற்குச் சான்றாகவும் அமைகின்றன.

கற்பனைப் புனைவுகளுக்கு ஒப்பனைப் பூச்சு தீற்றி தமிழ் வெளியில் சஞ்சரிப்போர் மத்தியில், இவை யாவும் கற்பனையல்ல என்று யதார்த்தச் சிறகுகளைப் பொருத்தி தன் படைப்புலகில் தனித்துவமாகப் பறக்கின்ற செங்கதிரோன் என்ற எழுத்து விஞ்ஞானியை மனமுவந்து பாராட்டுகின்றேன்.

வாழ்க அவர் எழுத்துப் பணி..

**தீரன்.ஆர்.எம்.நௌஷாத்.**
2023.07.15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னீடு

நான் மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் (தற்போது கிழக்கப் பல்கலைக்கழகக் கட்டிடத் தொகுதி) ஏழாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போது (1963) என்னை மலராசிரியராக் கொண்டு 'கலை அமுதம்' எனும் கையெழுத்துச் சஞ்சிகைக்காக எழுதப்பெற்ற 'கடமை' என்பதே நான் எழுதிய முதலாவது சிறுகதையாகும். அப்போது எனக்கு வயது பதின்மூன்று.

தனக்கு இருக்கும் ஒரே உறவான தனது ஏழைத்தாயின் நோய்க்கு மருந்து வாங்கக் காசில்லாமல் அவளுடைய மகன், கல்முனை "பஸ் ஸ்டாண்டில்" இரவில் படுத்துறங்கும் பிச்சைக்காரனின் தலைமாட்டுக்குக் கீழே பாதுகாப்பாக வைத்துக்கொண்டு அவன் தூங்கும்போது, அவனுடைய பிச்சையெடுத்துச் சம்பாதித்த உழைப்பைத் திருடிக்கொண்டு போய் அப்பணத்தில் மருந்துக் கடையில் உரிய மருந்தை வாங்கிக் கொண்டு தாயைக் காப்பாற்றத் தன் ஓலைக் குடிசையை நோக்கி ஓடுகிறுன். குடிசையை அடையும்போது - தாய்க்கு மருந்தைக் கொடுக்குமுன்னரே அவளின் உயிர் பிரிந்துவிடுகிறது. மகனின் 'அம்மா' என்ற அலறல் நடுநிசியில் ஊரையே எழுப்புகிறது.

**"ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர்பழிக்கும் வினை"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற திருக்குறளுடன் இச் சிறுகதை நிறைவு பெறுகிறது. இக் கதையின் பிரதி என் கைவசமில்லை.

எனது இரண்டாவது சிறுகதை நான்கு வருட இடைவெளிக்குப் பின்னர் 1967 இல் நான் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு (க.பொ.த உயர்தரம்) விஞ்ஞான வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது எமது வகுப்பு என்னை மலராசிரியராகக் கொண்டு வெளியிட்ட 'தேமதுரம்' எனும் கையெழுத்துச் சஞ்சிகைக்காக எழுதப்பெற்றது. "அழுது என்ன பயன்?" என்பது சிறுகதையின் தலைப்பு.

இளவயதிலிருந்தே வகுப்பில் கெட்டித்தனமாக இருந்த மாணவனொருவன் க.பொ.த சாதாரண வகுப்புக்கு வந்தபோது கெட்ட நண்பர்களின் சகவாசத்தினால் படிப்பில் அக்கறையிழந்து போனதால் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தோல்வியுறுகிறான். பரீட்சை முடிவுகள் வெளியான அன்று அவன் தன் வகுப்பறையில் தன் தவறையுணர்ந்து தனித்திருந்து அழுவதோடு இச் சிறுகதை முடிகிறது.

எனது மூன்றாவது சிறுகதையை இரண்டாவது சிறுகதையை எழுதிப் பன்னிரண்டு வருடங்களின் பின்னர் எனது திருமண ஆண்டான 1979 இல் எழுதினேன். "பொய்மையும் வாய்மையிடத்தே..." என்பது கதையின் தலைப்பு. பல வருடங்கள் கையெழுத்துப் பிரதியாகவே தூங்கி 2000 களில் (ஆண்டு சரியாக ஞாபகமில்லை) 'தினகரன்' பத்திரிகையில் வேறொரு தலைப்பில் (அதுகூட ஞாபகத்திலில்லை) நண்பர் அமரர் வ.சிவஜோதி மூலம் பிரசுரம் கண்டது.

கதையின் கரு இதுதான்.

திருமண புதுமணத் தம்பதிகள், மட்டக்களப்பில் திருமணம் நடந்து தம்பிலுவில் என்ற இடத்திற்குத் தனிக்குடித்தனம் செல்கின்றனர். கணவன் பணிபுரியும் நீர்பாசனத் திணைக்கள அலுவலகம் கல்முனையில் அமைந்துள்ளது. மனைவி கணித ஆசிரியையாகத் தம்பிலுவில் மகா வித்தியாலயத்தில் கற்பிக்கிறாள். கணவனின் தாய்வீடும் கல்முனையிலேயே உள்ளது. மனைவி அதிகாலையில் எழுந்து சமைத்துச் சூடாறாமல் இருக்க அதற்கான "சாடி"யில் போட்டுக் கல்முனைக்கு அலுவலகம் செல்லும் கணவனிடம் கொடுத்தனுப்புகிறாள். கல்முனைக்குக் கடமைக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் கணவன் மதிய வேளையின்போது அச் சாப்பாட்டைத் தனது தாய் வீட்டுக்கு எடுத்துச் சென்று சாப்பிடுகின்றுன். கல்முனையிலேயே உள்ள தாய்வீட்டுக்கு வரும்போது தம்பிலுவிலில் இருந்து சாப்பாடு கட்டிக்கொண்டு வரவேண்டுமா? எனத் தாய் உரிமையோடு மகனைக் கடிந்து கொள்கிருள். இதனைப் புதுமனைவியிடம் கூறப்போய், தான் அதிகாலையில் எழும்பிச் சமைப்பது கணவனுக்காகத்தான். அப்படியாஞல் தனக்கு மட்டும் சமைக்கத் தேவையில்லை என்று கூறக் கணவன் அதற்கு மாருகப் பதில் கூற, அது வாதப் பிரதிவாதங்களாக மாறி மனைவி உணர்ச்சி மேலீட்டால் அழுவதில் போய் முடிகிறது.

திருமணம் ஆகிவிட்டாலும்கூடத் தாய்வீட்டிற்கு வரும்போது சாப்பாடு கட்டிக்கொண்டு வரவேண்டுமா? என்ற தாயின் உரிமையுடன் கூடிய உணர்வுபூர்வமான எதிர்ப்பு. கடமைக்குச் செல்லும் கணவன் தான் சமைத்துக் கொடுத்துவிடும் சாப்பாட்டைத்தான் சாப்பிட வேண்டுமென்ற மனைவியின் உணர்வுபூர்வமான எதிர்பார்ப்பு.

தாய்க்கு மகன்மீதான உடைமையுணர்ச்சி (Possessive Attitude) மனைவிக்கு கணவன் மீதான உடைமையுணர்ச்சி. இரண்டுமே நியாயமானவைதான். இயல்பானவைதான். இருவருடைய உணர்வு களையும் பாதிக்காமல் இப்பிரச்சினையை எப்படிக் கையாள்வது எனக் கணவன் சிந்திக்கிருன். தன்னுடைய அலுவலகத்தில் பணிபுரியும் சக நண்பனிடமிருந்து தீர்வு கிடைக்கிறது. மட்டக்களப்பில் இருந்து கல்முனைக்குக் கடமைக்கு வரும் அந் நண்பனுக்கு அவனுடைய மனைவி பகலுணவைக் கட்டிக் கொடுத்துவிடுவதில்லை.

மனைவி கட்டித்தரும் சாப்பாட்டைக் கொண்டுபோய் அந் நண்பனுக்குச் சாப்பிடக் கொடுத்துவிட்டுத் தாய்வீட்டுக்குப் போய்த் தாய் தரும் சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு வெறும் "சாடி"யுடன் கணவன் தனது வீட்டிற்குப் போகிருன். தனது சாப்பாட்டைத்தான் தன் கணவன் சாப்பிடுகிருன் என மனைவி மகிழ்ச்சியடைகிருள். தாய் தனது மகன் தனது சாப்பாட்டைத்தான் சாப்பிடுகிருன் எனத் திருப்தியடைகிருள்.

கணவன் தன் மனைவிக்கும் மகன் தன் தாய்க்கும் என இருவருக்குமே அவர்கள் இருவருக்குமே தெரியாமல் 'பொய்யன்' ஆகிருன். மாமி மருமகள் உளவியல் பிரச்சினையொன்றினைப் புத்திசாலித்தனமாகக் கணவன் கையாள்கிருன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொய்மையும் வாய்மையிடத்தே புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

என்ற குறள் இக்கதையில் தொக்கி நிற்கிறது.

2008 ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து (30.01.2008) ஆரம்பித்து 2013 ஆம் ஆண்டு தை மாதம் வரை மாதாமாதம் கிரமமாகச் "செங்கதிர்" எனும் கலை - இலக்கிய - பண்பாட்டுப் பல்சுவைத் திங்களிதழ் ஒன்றினை "இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை" எனும் மகுட வாசகத்துடன் அறுபத்தியொரு இதழ்களைத் (வீச்சுக்களை) தனிமனித முயற்சியில் கொணர்ந்தேன்.

"செங்கதிர்" மார்கழி 2008 (வீச்சு 12) இதழில் நான் எழுதிய நான்காவது கதையான "குடை கவனம்" எனும் கதையே "யாவும் கற்பனையல்ல" (செங்கதிரோன் சிறுகதைகள்) எனும் இச் சிறுகதைத் தொகுப்பு நூலில் முதலாவது கதையாக இடம்பிடித்துள்ளது. நான் எழுதிய முதல் மூன்று சிறுகதைகளினதும் பிரதிகள் என் கைவசம் இல்லையென்பதே இதற்கான காரணம்.

இத்தொகுப்பிலுள்ள இரண்டாம் மூன்றும் கதைகளான முறையே 'ஊர்மானம்', 'கூடுவிட்டு' என்பன முறையே கொழும்பிலிருந்து தி.ஞானசேகரனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'ஞானம்' சஞ்சிகையின் ஜூன் 2015 (ஞானம் 181), ஏப்ரல் 2017 (ஞானம் 203) இதழ்களிழ் பிரசுரமானவை.

நான்காவது கதையான 'கரப்பத்தான்பூச்சி' 'ஞானம்' கலை-இலக்கியச் சஞ்சிகை நடாத்திய "அமரர் செம்பியன் செல்வன் ஆ.இராஜகோபால் ஞாபகார்த்த சிறுகதைப்போட்டி - 2016" இல் பரிசுச் சான்றிதழ் பெற்றது.

ஐந்தாவது கதையான "ஒரு குழந்தையின் அழுகை" இலண்டனில் இருந்து மு.தயாளன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "சிறுகதை மஞ்சரி" (சிறுகதை மாத இதழ்) சித்திரை 2022 இதழில் (இதழ்-21) பிரசுரமானது.

ஆறுவது கதையான "அங்கிருந்து வந்தவர்கள்" இலண்டனில் இருந்து பூ.சீவகன் வெளியிடும் 'அரங்கம்' மின்னிதழில் 21.10.2021 அன்று பிரசுரமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாவது கதையான 'துரோகி' 28.10.2021 அன்று 'அரங்கம்' மின்னிதழ் மற்றும் "சிறுகதை மஞ்சரி" இதழ் 18 ( தை 2022) இரண்டிலும் பிரசுரமானது.

எட்டாவது கதை 'துறவு' யாழ்ப்பாணத்திலிருந்து க.பரணீதரனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் கலை-இலக்கிய மாத சஞ்சிகை 'ஜீவநதி' கார்த்திகை 2021 (ஜீவநதி - 159) இதழில் பிரசுரமானது.

ஒன்பதாவது கதையான "அந்த ஏவறைச் சத்தம்" இலங்கை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு நடாத்தும் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களுக்கான சிறுகதைப்போட்டி- 2021 இல் ஆறுதல் பரிசு பெற்றது. அரச ஊழியர்களின் ஆக்கங்களின் தொகுப்பான "பிரகாசம்" 2021 நூலில் (பக்கம் 188) பிரசுரிக்கப்பட்டுள்ளது.

'சகோதரத்துவம்'; 'அரங்கம்' மின்னிதழில் 21.12.2021 அன்று பதிவிடப்பெற்றது.

பதினொராவது கதை 'ராஸ்கல்ஸ்'; 'ஞானம்' ஏப்ரல் 2022 (ஞானம்-263) இதழில் வெளிவந்தது.

'லயன்'; 'ஞானம்' கலை - இலக்கிய சஞ்சிகையின் 'அமரர் செம்பியன் செல்வன் ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி - 2022' இல் பரிசுச் சான்றிதழ் பெற்றது. 'யாவும் கற்பனையல்ல' 'சிறுகதை மஞ்சரி' தை 2023 இதழில் (இதழ் 30) பிரசுரமானது.

நிறைவாக, 'ஞானம்' கலை இலக்கியச் சஞ்சிகை ஒக்டோபர் 2016 (ஞானம் 197) இதழில் பிரசுரமான "பாரதி எழுதிய முதல் சிறுகதை" எனும் எனது கட்டுரையின் இறுதியில் நான் கூறியிருந்த,

> *"நவீனத்துவம், பின்நவீனத்துவம், யதார்த்தவாதம், கட்டுடைப்புவாதம் என்றெல்லாம் கலை இலக்கியக் கோட்பாடுகள் குறித்த கருத்தியல்கள் எல்லாம் மேற்குலக நாடுகளில் பின்னாளில் எழுந்து தமிழ்நாட்டுக்குத் தொற்றுமுன்பாகவே ஒரு முற்போக்கான கதையொன்றைப் பாரதி 1905 இலேயே பின்னியிருக்கிறார்.*
>
> *எனவே நல்ல முற்போக்கான சிறுகதையொன்றினைப் படைப் பதற்கு எந்த 'இஸம்'களும் தேவையில்லை. எந்த 'வாதம்'களும் அவசியமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மனித நியாயமும் அந்த நியாயத்தை மனதார விசுவாசிக்கின்ற மனிதநேய உள்ளமும் அந்த நியாயத்தை வெளிப்படுத்த வேண்டுமென்ற தர்மாவேசமும் - அந்த வெளிப்பாட்டை இலக்கியமாக்கும் எத்தனமும் அதற்கேற்ற மொழிப்புலமையும், கற்பனைவளமும், படைப்பாற்றலும் இருந்துவிட்டால் ஒரு படைப்பாளி நோக்காடு உறுவதும் அந்த நோக்காடு சிறந்ததொரு இலக்கியத்தைப் பிரசவிக்கும் என்பதும் தானாகவே நிகழும். இதற்கு எந்த மேற்குநாட்டுக் கலை இலக்கியக் கோட்பாடுகளும் வழி காட்டத்தேவையில்லை.*

எனும் கூற்றை இங்கும் பதிவுசெய்கிறேன்.

இக்கதைகளுக்குப் பிரசுரம் வழங்கிய 'செங்கதிர்' துணை ஆசிரியர் அன்பழகன் குரூஸ், 'ஞானம்' கலை இலக்கியச் சஞ்சிகை ஆசிரியர் தி.ஞானசேகரன், சிறுகதை மாத இதழ் "சிறுகதை மஞ்சரி" ஆசிரியர் மு.தயாளன், 'அரங்கம்' மின்னிதழ் ஆசிரியர் பூ.சீவகன், கலை இலக்கிய மாத இதழ் 'ஜீவநதி' ஆசிரியர் க.பரணீதரன் ஆகியோருக்கும், முன்னீடுகள் வழங்கிய அன்புகெழுமிய இலக்கியச் சகாக்களான பேராசிரியர் செ.யோகராசா மற்றும் தனது 'நட்டுமை' எனும் நாவலுக்குத் தமிழ்நாடு - 'காலச்சுவடு' இதழ் நிறுவுனர் சுந்தரராமசாமி பவளவிழா இலக்கியப் போட்டியில் முதற்பரிசை வென்றவரும் 'வெள்ளிவிரல்' சிறுகதைத் தொகுதிக்கு 2011 இல் இலங்கை தேசிய அரச சாகித்திய விருதும் கிழக்கு மாகாண சாகித்திய விருதும் ஒருங்கே பெற்றுக்கொண்டவரும் "நல்லதொரு துரோகம்" என்ற சிறுகதைக்குப் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் முதற்பரிசாகத் தங்கப்பதக்கம் அளிக்கப்பெற்றவரும் "சாகும் - தலம்" சிறுகதைக்குத் தமிழ்நாடு எழுத்தாளர் சுஜாதா அறக்கட்டளை நிறுவனம் நடத்திய அறிவியல் புனைகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றவரும் 'ஞானம்' சஞ்சிகை நடாத்திய புலோலியூர் க.சதாசிவம் நினைவுச் சிறுகதைப் போட்டியில் 'தாய்மொழி' எனும் சிறுகதைக்கு முதற்பரிசு பெற்றவரும் மேலும் பற்பல இலக்கியப் போட்டிகளில் தமது வித்தியாசமான போக்கிலான சுமார் பத்தொன்பது சிறுகதைகளுக்குப் பரிசில்கள் பெற்றவருமான படைப்பாளி தீரன் ஆர்.எம்.நௌஷாத் ஆகியோருக்கும் இச் சிறுகதைத் தொகுப்பு நூலை வெளிக்கொணர என்னைத் தூண்டிய உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், இலக்கிய நண்பர் பிரபல நாவலாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ.பி.அருளானந்தம், எனது கல்லூரி நண்பர்களான எழுத்தாளர் ஏ.பீர் முகம்மது (இரண்டாம் விசுவாமித்திரன்) மற்றும் ம.மகாலிங்கம் (மயில் மகாலிங்கம் - ஜேர்மனி) ஆகியோருக்கும் அழகாக அச்சிட்டு உதவிய புதுக்குடியிருப்பு காந்தள் அச்சகத்தாருக்கும் நன்றி.

**செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்**

607, பார்வீதி,
மட்டக்களப்பு.
01.09.2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளீடு


- குடை கவனம் ..... 18
- ஊர்மானம் ..... 22
- கூடுவிட்டு ..... 27
- கரப்பத்தான்பூச்சி ..... 32
- ஒரு குழந்தையின் அழுகை ..... 37
- அங்கிருந்து வந்தவர்கள் ..... 42
- துரோகி ..... 48
- துறவு ..... 52
- அந்த ஏவறைச் சத்தம் ..... 56
- சகோதரத்துவம் ..... 61
- `ராஸ்கல்ஸ்´ ..... 66
- `லயன்´ ..... 69
- யாவும் கற்பனையல்ல ..... 74


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடை கவனம்



"இஞ்ச.... மழ தூறுது. சும்மா போறிங்க. குடையெடுத்திட்டு போங்களன்...." வீட்டு வாசற்படிதாண்டி வெளியே புறப்பட்ட நாதனை நோக்கி குரல் கொடுத்தாள் அவன் மனைவி நர்மதா.

"லேசான தூறல்தான். கெதியா வந்திருவன். குட தேவல்ல". நின்று பதில் சொன்னான் நாதன்.

"மழ உரக்கும் போல கிடக்கு. மழயில நனைஞ்சி காச்சல் கீச்சல் வந்தா என்ன செய்விங்க. இந்தாங்க குட கொண்டு போங்க" என்று கூறிக்கொண்டே குடையோடு வந்த நர்மதா கணவன் மீதுள்ள கரிசனையால் குடையை விரித்து நாதன் கையிலே கொடுத்தாள்.

"குடயக் காணவத்துப் போட்டு வந்து உன்னிட்ட ஏச்சு வாங்கிறதவிட மழயில நனைஞ்சி காச்சல் வந்து படுக்கிறது பரவாயில்ல" என்று பரிகாச மாகச் சிரித்துக்கொண்டே குடையை வாங்கிக் கொண்டான் அவன்.

"நீங்களும் உங்கட பகிடியும்" என்று மூக்கில் இலையான் மொய்த்தால் முகத்தைத் திருப்புகிற மாதிரி முகத்தை ஒரு வெட்டு வெட்டிச் செல்லமாகக் கோபித்துக் கொண்டே நாதனின் பதிலுக்குக் காத்திராமல் உள்ளே போய் மறைந்தாள் நர்மதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதன் வெள்ளவத்தை காலி வீதியை நோக்கி நடையைக் கட்டினான்.

"குட கவனம்!" உள்ளேயிருந்து சற்றுச் சத்தமிட்டு நர்மதா சொன்னது நாதனின் காதில் தெளிவாக விழுந்தது. வழமையான அறிவுறுத்தல்தான்.

காலி வீதியையடைந்த நாதன், தான் வழக்கமாகப் புத்தகங்கள், சஞ்சிகைகள் வாங்கும் புத்தகசாலையை நோக்கி நடந்தான். தூறல் மழை ஓய்ந்திருந்தது. குடையை மடித்துப் புத்தகசாலையின் நுழைவாசலுக்குச் சற்று வெளியே அதற்கென வைக்கப்பட்டிருந்த 'பிளாஸ்டிக்' வாளிக்குள் ஏற்கெனவே ஏனையவர்களால் அங்கு வைக்கப்பட்டிருந்த பல நிற ஈரம் தோய்ந்த குடைகளுடன் சேர்த்துத் தன்னுடைய கறுத்தக் குடையையும் நிலைக்குத்தாக நிறுத்திவிட்டுப் புத்தகசாலைக்குள் நுழைந்தான்.

புத்தகங்கள் என்றால் நாதனுக்குக் கொள்ளை ஆசை. அங்கு அலுமாரித் தட்டுகளிலும் மேசைகளின் மீதும் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அத்தனை புத்தகங்களையும், சஞ்சிகைகளையும் தலைப்பு என்ன? யார் எழுதியது? விலை என்ன? என்று ஒரு சுற்றுச் சுற்றி நோட்டம் விட்டான். புதிதாக வெளிவந்திருக்கிற 'இருக்கிறம்' சஞ்சிகையின் முதலாவது இதழின் அட்டையில் 'சிவாஜி' ரஜனிகாந் கவர்ச்சியாகக் காட்சி தந்தார். கையில் எடுத்துப் பக்கங்களைப் புரட்டியவன் பின் சஞ்சிகையை மூடி விலையைப் பார்த்தான். அறிமுக விலை 40/= என இருந்தது. வாங்கிக் கொண்டு அடுத்து மனைவி சொல்லிவிட்ட மரக்கறி வகைகளை வாங்குவோம் என்றெண்ணிய வன் காலிவீதியைக் குறுக்காகக் கடந்து மறுகரையில் வரிசையாக வைக் கப்பட்டிருந்த நடைபாதை மரக்கறிக் கடைகளை அணுகினான்.

திடீரென்று கண்ணில் யாரோ கம்பியால் குத்தியது போலுணர்ந்து குத்துவாங்கிய கண்ணை ஒரு கையால் பொத்திக்கொண்டு திரும்பிப் பார்த்தான். கொழும்புத் தமிழ்ச்சங்க 'ரியூட்டரி'யில் படிக்கும் தனக்கு முகம் தெரிந்த அழகான பெண் பிள்ளையொன்று தனது கையிலிருந்த அழகான குடையொன்றை யப்பானிய அழகிகள்போல் தலைக்குமேல் சுழற்றிக் கொண்டு நாதனைப் பார்த்து "சொறி அங்கிள்" என்று சொல்லிக் கொண்டு நின்றிருந்தாள். கோபம் தீர தனது குடையால் மெல்ல அவளுடைய முதுகில் ஒரு தட்டுத்தட்டுவோமா என்றெண்ணியவன் பார்த்தான் கையில் தனது குடையைக் காணவில்லை. சுதாகரித்துக் கொண்டு "பரவால்ல... நட பிள்ள" என்று பதில் சொல்லிவிட்டுக் குத்துவாங்கிய நோவையும் பொருட் படுத்தாமல் ஓட்டமும் நடையுமாகச் சென்றான் தான் சற்று முன்னர் சென்று வந்த புத்தகசாலையை நோக்கி.

அப்பாடா! நல்லவேளை. நாதனின் மீள்வரவைக் கண்டு 'பிளாஸ்டிக்' வாளிக்குள் இருந்த குடை அவனைப் பார்த்துச் சிரித்தது. ஓடிச்சென்று அதனை எடுத்து உச்சிமோந்தவன், இப்போதுதான் குத்துப்பட்ட கண்ணைத் தடவிப்பார்த்தான். இலேசான நோதான். ஒன்றும் நடக்கவில்லை. கண்ணை இமை காத்துக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கறிகளை வாங்கிக் கொண்டு வீட்டைநோக்கித் திரும்பிய நாதனுக்கு மனைவி சொல்லிவிட்ட மருந்துக்குளிசை ஞாபகம் வர பக்கத்திலிருந்த 'பாமசி'க்குள் பிரவேசித்தான். குளிசைகளை வாங்கிக் கொண்டு மரக்கறிப் பைகளுடன் இனி வீடு செல்லலாம் என்று உருத்திரா மாவத்தையால் திரும்பினான். திரும்பும் சந்தியில் சற்றுமுன்னர் கண்ணில் குடையால் குத்திய அதே பெண் பிள்ளை எதிரே வந்து "எப்படி அங்கிள் கண்' என்றாள் இலேசாகச் சிரித்துக் கொண்டே. இப்போதாவது இவளுக்கு ஓர் அடி போடவேண்டும் எண்ணிய நாதன் கையைப் பார்த்தான். மீண்டும் குடையைக் காணவில்லை. "எப்படி அங்கிள் கண்" என்று கேட்டவளுக்குப் பதிலே சொல்லாமல் குளிசை வாங்கிய 'பாமசி'யை நாடி வேகமாக நடந்தான்.

"இருந்தால் எடுத்து வைத்திருப்போம். இங்கு அப்படி ஒரு கறுத்தக் குடையையும் காணவில்லையே" என்ற 'பாமசி'க்காரனின் பதிலைத்தான் இறுதியாகப் பெற்றுக்கொண்டு இராமாயணத்திலே இராமனுடனான சண்டைக்களத்திலே எல்லாவற்றையும் பறிகொடுத்து நிராயுதபாணியாக வெறுங்கையோடு இலங்கை மீண்ட இராவணனைப்போல முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு 'பாமசி'யை விட்டு வெளியே வந்த நாதன் நடை பாதையிலே நின்று யோசித்தான். குடையில்லாமல் வீட்டுக்குப் போனால் என்ன நடக்கும்?

முந்திய நாட்களில் தான் இவ்வாறு பஸ்ஸில், ஓட்டோவில், கடைகளில் தொலைத்த குடைகளின் விலைகள், நிறங்கள், வாங்கிய வரலாறு அல்லது அன்பளிப்பாகக் கிடைத்த சந்தர்ப்பம் எல்லாம் சொல்லி ஒரு குடைப்புராணமே படிப்பாளே....! மனைவி நர்மதா. இன்று ஞாயிற்றுக் கிழமை. சந்தோசமாக இருக்கவேண்டிய நாளில் இப்படிக் குடையைத் தொலைத்துவிட்டு அவளிடம் வாங்கிக்கட்டிக்கொள்ள வேண்டிவருமே.

யோசனையொன்று பொறிதட்டிற்று. 'பொக்கற்றுக்குள்' இருந்த மீதிக்காசை எண்ணிப் பார்த்தான். எழுபது ரூபாய்தான் தேறியது. சிறிது நேரம் சிந்தித்தான். பின் திரும்பி ஐந்தாறு கடைகளைத் தாண்டி 'பென்சி ஹவுஸ்' என்று பெயர்ப்பலகை மாட்டியிருந்த கடைக்குள் எட்டிப் பார்த்தான். நல்ல வேளை! அங்கு நின்றிருந்த கடைச் சொந்தக்காரன் காதர் முகைதீன் நாதனைக் கண்டதும் "வாங்க நாதன் சேர். சொகமா இருக்கிங்களா.... என்ன சேர் வேணும்" என்று வாசலுக்கு வந்து வரவேற்றான். நாதனுக்கு நன்கு தெரிந்தவன்தான் காதர் முகைதீன்.

"குடயொண்டு வாங்கோணும். காசு கொண்டர மறந்திட்டன். குறயக் காசிதான் இரிக்கு. அதுதான்..." என்று நாதன் இழுக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதென்ன சேர். நீங்க என்ன தெரியாத ஆளா. வேண்டிய சாமான்கள எடுத்திட்டுப் போங்க. காசப் பொறவு பாத்துக்கலாம்" என்றான் கடைக்காரன்.

பிறகென்ன, நாதனின் யோசனை நிறைவேறியது. புதிய கறுத்தக் குடையொன்றுடன் வேறு எங்காவது சென்றால் அதையும் தொலைத்து விடுவோமோ என்ற பயத்தில் நேரே வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல் விரைந்தான் வீட்டை நோக்கி.

நர்மதா குசினிக்குள் அலுவலாக இருந்தாள். நாதன் வீட்டுக்குள் சென்று புதிதாக வாங்கிய குடையை மேசையில் வைத்துவிட்டு "நர்மதா இந்தா மரக்கறி" என்று மரக்கறிப் பையை நீட்ட அவள் அதனை வாங்கிக் கொண்டாள்.

நாதன் நாற்காலியிலே உட்கார்ந்து வாங்கிவந்த 'இருக்கிறம்' சஞ்சிகையைப் புரட்டத் தொடங்கினான்.

"குடய மறக்காமக் கொண்டு வந்தீங்களா? எங்க குட" என்று குசினி அலுவல்களுக்கிடையே குரல் கொடுத்தாள் நர்மதா.

"ஓம்! இந்தா மேசயில இரிக்கு" என்று உரத்துச் சொன்ன நாதன் 'இருக்கிறம்' சஞ்சிகைக்குள் மூழ்கிப் போனான்.

அருகில் வந்த நர்மதா நாதனைத் தட்டி "இதென்ன புதுக்குட" என்று சொல்ல நாதன் அப்போதுதான் அதனை அவதானிப்பது போலப் பாசாங்கு பண்ணிவிட்டு "ஆரோ ஒருவன் குடய வைச்ச இடத்தில மாத்திக் கொண்டு போய்த்தான். நல்லதுதானே, இது நல்ல புதுக்குட" என்றான்.

"இதற்கு முதல் எத்தின குடயத்தான் தொலச்ச நீங்க. அதுகளுக் கெல்லாம் சேத்து ஆண்டவனாப் பாத்துப் பழைய குடய மாத்திப் புதுக்குட தந்திருக்கார்" என்று மனைவி நர்மதா கூற வெற்றிக்களிப்பில் உள்ளுக்குள் சிரித்துக்கொண்ட நாதன் "அதக் கவனமா எடுத்து வை" என்றான் மனைவியிடம்.■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"கடவுளே......! இவள் என்ன காரியத்தப் பாத்தாள். எண்ட மானம் மரியாதெல்லாம் போய்த்தே.....! எண்ட வயித்தில இவளப்போய்ச் சுமந்தனே....!"

பூரணம் தன் தலையில் இரண்டு கைகளாலும் அடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்தாள். அவள் அருகில் அவளது மற்ற மகள்களான நான்கு "குமர்"களும் செய்வதறியாது திகைத்துக்கொண்டு வரிசையில் நின்றிருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் வீரமுனைக் கிராமத்திற்கும் சம்மாந்துறைக் கிராமத்திற்கும் எல்லையில் அமைந்திருந்தது பூரணத்தின் வீடு. பெரியவீடு என்று சொல்லமுடியாவிட்டாலும் இரண்டறையும் மண்டபமும் என்று சொல்வார்களே அப்படியொரு சிறிய கல்வீடு. அவ்வீட்டின் வாசற்படியில் அமர்ந்திருந்தபடிதான் பூரணம் அழுதுகொண்டிருந்தாள். வீட்டு முற்றத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணத்தின் உறவினர்களும் ஊரவர்களும் என்று ஒரு சிறு கூட்டத்தினர் தங்களுக்குள் குசுகுசுத்துக் கொண்டு நின்றிருந்தனர்.

வெளியே போயிருந்த பூரணத்தின் கணவன் செல்லையா வீதியிலிருந்து கடப்புக்குள்ளால் வளவுக்குள் நுழைவதைக் கண்ட கூட்டத்தினர் நிசப்தமாகி செல்லையாவில் வைத்தகண் வாங்காதபடி நின்றிருந்தனர். பூரணம் தொடர்ந்து அழுதுகொண்டேயிருந்தாள். செல்லையா, வீட்டு முற்றத்தில் நின்றிருந்த மாமரத்தின் கீழ் போடப்பட்டிருந்த மரக்குற்றியில் போய் அமர்ந்து தோளிலே போட்டிருந்த துவாய்த் துண்டை எடுத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டு பூரணத்திற்கு அருகில் வரிசையாக நின்றிருந்த தனது மகள்மாரைத் தந்தைக்குரிய பரிவுடன் பார்த்தான். கண்களில் அழுகை பொத்துக்கொண்டு வந்தது. அதனை வெளிக் காட்டாமல் வியர்வையைத் துடைக்கும் சாட்டில் துவாய்த்துண்டால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

பூரணமும் செல்லையாவைக் கண்ட மாத்திரத்தில் அழுகையைச் சற்றுக் குறைத்து விம்மத் தொடங்கினாள். செல்லையாவுக்கு அம்மாச்சி உறவு முறையான வேலாப்போடிதான் செல்லையாவின் அருகில்போய் பரிவோடு "என்ன மனே! செல்லையா! நடந்தது?" என்று கேட்டுவிட்டுப் பதிலுக்காய்க் காத்திருந்தார். முற்றத்தில் கூடிநின்ற கூட்டத்தினரும் தங்கள் தங்கள் வசதிக்கேற்றவாறு சற்று நகர்ந்து செல்லையாவைச் சுற்றி வட்டமிட்டு தேர்தல் முடிவையறிய வாக்காளர்கள் வானொலிப் பெட்டியைச் சுற்றி நிற்பதுபோல முகங்களில் கதைகேட்கும் ஆவலைச் சுமந்தபடி ஆளை ஆள் பார்த்துக் கண்சாடை காட்டிக்கொண்டு காத்திருந்தனர். செல்லையாவின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை.

வேலாப்போடி மீண்டும் வாயைத் திறந்தார்.

"நானும் ரெண்டு நாளா ஊரில இல்ல மனே. மல்லிகத்தீவுக்கு வட்டைக்குள்ள போய்த்தன். ரெண்டு நாள் வாடியில தங்கித்து இண்டைக்குத்தான் ஊருக்கு வந்தனான். வாற வழியில இவன் வண்ணார வயிரண்ட பொஞ்சாதிதான் என்னவோ சொன்னாள். அதுதான் ஊட்டையும் போகாம நேர இஞ்ச வந்தனான். என்னெண்டு கேப்பம் எண்டு"

வேலாப்போடியாரை நிமிர்ந்து பார்த்த செல்லையா "சொல்லுறன் அம்மாச்சி. ஊரறிஞ்ச கததானே! இனி மறச்சென்ன" என்று சொல்லிவிட்டு மீண்டும் துவாய்த்துண்டால் நெற்றிவியர்வையைச் சற்றுத் துடைத்துவிட்டு தொண்டைக் குழிக்குள் இறங்கிய உமிழ்நீரை விழுங்கிவிட்டுப் பேசத் தொடங்கினான்.

"இவள் மூத்தவள் சுந்தரி, வெள்ளிக்கிழம காலம வீரச்சோலைக்குக் குஞ்சாத்த ஊட்ட போய்த்துவாறன் எண்டு போனவள், ஞாயிற்றுக்கிழம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியும் வரல்ல. என்னெண்டுகேட்டு வீரச்சோலைக்கு வியளம் அனுப்பிப்பாத்தம். அங்க வரல்லயாம். என்ன செய்யிற எண்டு எல்லாரும் ஏக்கத்தில இருக்கக்குள்ளதான் இண்டைக்குக் காலம ஒம்பது மணி போல பொலிஸ் ஸ்டேசனுக்கு வரட்டாம் என்று ஓ.ஐ.சி சொன்னதாக பொலிஸ்காரன் ஒருவன் வந்து வியளம் சொன்னவன். நல்லதாப் போய்த்து பொலிஸ்காரன் வியளம் கொண்டு வரக்குள்ள நானும் ஊட்ட நிண்டது. பொலிஸ் ஸ்டேசனாலதான் இப்ப வாறன்" என்று கூறிய செல்லையா தலையை நிமிர்த்தி ஏக்கப் பெருமூச்சொன்றை விட்டான்.

"என்ன மனே நடந்தது. விபரமாச் சொல்லன்" என்றார் வேலாப்போடி.

"அதத்தான் அம்மாச்சி சொல்லப் போறன். நடந்தது நடந்துபோய்த்து. இனி அதச் சொன்னாத்தான் என்ன சொல்லாட்டித்தான் என்ன" என்ற பீடிகையோடு தொடங்கினான் செல்லையா. சுற்றி நின்ற கூட்டத்தினர் கதை கேட்கும் ஆவலுடன் கண்களை அகலத்திறந்தனர். காதுகளைக் கூர்மையாக்கிக்கொண்டனர்.

"மகள் சுந்தரிய இவன் கடக்கார உதுமாண்ட மூத்தமகன் றகீம் கூட்டிட்டுப் போய்க் கசாதும் வைச்சிப்போட்டான். கசாதையும் முடிச்சிப்போட்டு ரெண்டு பேரும் பொலிஸில சொல்லியிருக்காங்க, "நாங்க களவுல கலியாணம் முடிச்சிட்டம். ரெண்டு பேரும் விரும்பித்தான் முடிச்சனாங்க. தாய் தகப்பனுக்குத் தெரியாது. அவங்களுக்குப் பொலிஸ்சால தெரியப்படுத்துங்க" எண்டு. கடக்கார உதுமானும் பொலிஸ்சில வந்து என்னப்போலதான் கண்கலங்கிட்டு நிண்டான். நான் என்னத்தச் சொல்லிற. சுந்தரி எனக்குப் பக்கத்தில வந்து குளறிற்று நிண்டாள். அவள நான் ஊட்ட கூட்டித்து வந்து என்ன செய்யிற. அவளுக்கு இன்னொரு கலியாணம் செய்து வைக்க எனக்கு ஏலுமா? அவளுக்குக் காலா காலத்தில கலியாணம் செய்து வைச்சிருந்தா ஒரு முஸ்லிம் பொடியனோட அவள் போயிருப்பாளா? இன்னும் நாலு பொட்டக் குஞ்சுகள வைச்சிருக்கிற நான் ஒன்டும் பேசாம பேயறைஞ்சவன் மாதிரி நிண்டன். எல்லாத்துக்கும் நம்மட ஏழ்மதானே காரணம்.

ஓ.ஐ.சி மாத்தையா கேட்டார் சுந்தரியிட்ட றகீமக் காட்டி, "இவனோட போறது சம்மதம்தானே" எண்டு.

சுந்தரி "ஓம்" என்டு தலையாட்டினாள். புறகு ஓ.ஐ.சி மாத்தையா என்னப் பாத்துச் சொன்னார், "இவங்க ரெண்டுபேரும் வயசு வந்தவங்க. மனம் சம்மதிச்சுத்தான் கசாதும் நடந்திருக்கு. சட்டப்படிக்கு பொலிஸ்சால ஒண்ணும் பண்ண முடியாது" எண்டு. நானும் பேசாமத் திரும்பித்தன். வரக்கொள்ள கடக்கார உதுமான் எண்ட தோளில தட்டிச் சொன்னான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போய்த்து வா மச்சான். என்ன செய்யிற, இளம்புள்ளயள, பிரிச்சித்தான் என்ன செய்யிற. யோசியாத, உண்ட மகள நாங்க வடிவாப் பாப்பம்" எண்டு. அதுக்கும் நான் ஒண்டும் பேசல்ல.

ஓ.ஐ.சி மாத்தையாட்டப் "போய்த்து வாறன்" எண்டு சொல்லித்து நேர ஊட்ட வந்தனான்." என்று செல்லையா கதையைச் சொல்லி முடிக்கவும் சுற்றிநின்ற கூட்டத்தினர் மீண்டும் தங்கள் காதுகளுக்குள்ளே குசு குசுத்தபடி செத்துப்போன சடலத்தின் தலையிலிருந்து பேன்கள் இறங்குவது போலக் கலைந்து சென்றனர். கதையைக் கவனமாகக் காது கொடுத்துக் கேட்ட வேலாப்போடி வாயடைத்துப் போய் நின்றார்.

அப்போது சற்றும் எதிர்பாராதவாறு சாறனை மடிச்சுக்கட்டிக்கொண்டு பத்துப் பதினைந்து இளந்தாரிப் பொடியன்கள் கடப்புக்குள்ளால் முண்டியடித்து மோதிக்கொண்டு செல்லையாவின் வளவுக்குள் நுழைந்தனர். அவர்கள் அனைவரும் வீரமுனைக்கிராமத்துத் தமிழ் இளைஞர்கள். கூட்டத்தில் முன்னிலை வகித்து வந்தவன் முன்னாள் போராளி. அவன்தான் செல்லையாவை நோக்கிச் சத்தமிட்டான்.

"என்ன செல்லயா அண்ணே! உங்கட மூத்தமகள முஸ்லிம் பொடியனுக்குக் கூட்டிக் குடுத்துப்போட்டு வந்து நிக்கிறீங்க. வெக்கமில்லயா உங்களுக்கு?"

வேலாப்போடிதான் வாய் திறந்தார்.

"அட தம்பிமாரே! இந்தக் கிழவன் சொல்லிறதக் கொஞ்சம் கேளுங்க. மரத்தால விழுந்தவன மாடேறி மிதிக்கிறாப்போலக் கதையாதிங்க. உங்கட போராட்டத்தால எத்தினதரம் ஆமிட்ட அடிவாங்கியிருக்கம். எத்தினதரம் ஊட்டவிட்டு எழும்பி ஓடியிருக்கம். கடைசியாத் தொண்ணூறாம் ஆண்டுக் கலவரத்தில ஊர உட்டுப்போய் திருக்கோயிலில அகதியா இருந்துபோட்டு இப்ப நாலு வருஷத்துக்கு முன்னதானே செல்லையாட குடும்பம் ஊருக்கு வந்து கலவரத்தில உடஞ்ச ஊட்ட ஒரு மாதிரிச் சரிக்கட்டிப்போட்டு இரிக்கிதுகள். பசி பட்டினிக்குள்ளயும் கதகாலுகள் ஒண்டும் வந்திராம ஐஞ்சு குமர்ப்புள்ளகளையும் பொத்திப் பொத்தி வளத்தவன் செல்லையா. ஆனா இப்படி நடந்து போய்த்து. எங்களுக்கும் கவலதான். தமிழ்ப்புள்ளையொண்டு முஸ்லிம் பொடியன முடிச்சித்தெண்டு. இனியெண்டாலும் இப்படி நடக்காம இருக்க வழியத்தேடுங்கடா மக்காள்"

வேலாப்போடியாரின் பேச்சை வந்த இளைஞர் கூட்டத்தினர் கேட்குமாற்போல் இல்லை.

"இவங்கள ஊர உட்டு எழுப்போணும். இவங்களால ஊருர மானமும் எங்கட மானமும் தமிழண்ட மானமும் போய்த்து..." என்று ஒருவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தமிட்டுக் கத்த, மற்றொரு இளைஞன் "அதுதாண்டா சரி" என்று ஆமோதித்துக் கூச்சலிட்டான்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டும் கேட்டுக்கொண்டும் மரக்குற்றியின்மேல் தலையில் கைவைத்துக் கொண்டு குனிந்து யோசித்துக் கொண்டிருந்த செல்லையா திடீரென்று திமிர்கொண்டு எழும்பினான்.

"பொத்துங்கடா வாய. என்ன! எங்கள ஊர உட்டு எழுப்பப் போறயளா. ஏலுமெண்டா எழுப்புங்கடா பாப்பம். ஐஞ்சு குமர்களையும் வைச்சித்து கோழி அடகாக்கிறமாதிரி நாங்க பொத்திப் பொத்தி வைச்சிருக்கக்குள்ள உங்கள்ல ஆருடா வந்து பொண்கேட்டவன். இப்ப சொல்லுங்கடா! கிளிபோல இன்னும் நாலு பொம்புளப் புள்ளையள் என்னிட்ட இரிக்கு. ஊரிர மானம்.... உங்கட மானம்.... தமிழன்ட மானம்" எண்டு ரோசம் பாக்கிற உங்கள்ல இரிந்து துணிச்சலுள்ள ஆராவது முன்வாங்கடா! எண்ட மற்றப்புள்ளைகளச் சந்தோசமாக் கட்டித்தாறன். இதுக்குச் சம்மதமானவனுகள் வளவுக்குள்ள நில்லுங்க. மற்றவனுகள் போங்கடா வெளிய. அதஉட்டுப் போட்டு.... ஆராவது எங்கள ஊர உட்டு எழுப்பப்போறன் எண்டு வளவுக்குள்ள கால்வச்செயலெண்டா அந்தக் காலக் கத்தியால வெட்டிப்போட்டு மறியலுக்குப் போறத்துக்கும் நான் ஆயத்தம்"

செல்லையா சன்னதம் கொண்டு எழும்பியவன்போல் ஆவேசமாகக் கத்தினான். வாசற்படியில் இருந்து அழுதுகொண்டிருந்த பூரணமும் அருகில் நின்றுகொண்டிருந்த மற்றப் பிள்ளைகளும் ஓடிவந்து செல்லையாவைச் சுற்றி அணைந்தபடி நின்றார்கள்.

தவளை பிடிக்க என்று வீட்டுக்குள் நுழைந்த சாரைப்பாம்பு மண்ணெண்ணையை ஊற்றியவுடன் விரைவாக நழுவி வெளியே செல்வதுபோல இளைஞர் கூட்டத்தினர் ஒவ்வொருத்தராக கடப்புக்குள்ளால் வெளியே வீதிக்கு நழுவினர்.

வேலாப்போடி அர்த்தபுஷ்டியுடன் அனுபவச் சிரிப்பொன்றைத் தனது இதழ்க் கடையில் உதிர்த்தார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் கிழக்குமாகாணம் மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள்திருமலைவீதியின்வலதுபக்கம்வயோதிபர்மடம்தாண்டிஅதே வலதுபக்கம் சந்திரா ஒழுங்கையில் இருந்தது ஓலை வேய்ந்த கூரையுடன் அச்சிறிய செங்கல் வீடு. நீளப்பாட்டில் உள்ள மண்டபம் போன்றதொரு கட்டிடத்தை அகலப்பாட்டில் மூன்று அடுத்தடுத்த அறைகளாக இடைச்சுவர்களால் பிரித்து முன்னறை 'சிற்றிங் ரூம்' ஆகவும், நடு அறை படுக்கை அறையாகவும், தொங்கல் அறை குசினியாகவும் பாவனையில் இருந்தன. வீட்டுக்குள் நுழைவதற்கு முன்பக்க அகலப்பாட்டுச்சுவரின் நடுவில் கதவு இருந்தது. இதுவே வீட்டின் வெளிவாசல் கதவு. முதலாவது இடைச்சுவரின் வலதுபக்க மூலையில் படுக்கையறைக்குச் செல்வதற்கான உள்கதவும், இரண்டாவது இடைச்சுவரின் இடதுபக்க மூலையில் குசினிக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதற்கான உள்கதவும் அமைந்திருந்தன. 'சிற்றிங் ரூம்' படுக்கையறை, குசினி ஆகிய மூன்று அறைகளுக்கும் இடதுபுறப் பக்கவாட்டுச் சுவரில் தனித்தனி மூன்று சிறிய யன்னல்களும் வைத்துக் கட்டப்பட்டிருந்தது அச் சிறியவீடு.

மத்தியானம் பன்னிரண்டரை மணியளவில் மகன் ராகுலனுக்குப் பகல் சாப்பாட்டை கொடுத்துவிட்டுத் தானும் சிறிது உண்டபின் வழமைபோல் வேலைக்களைப்பும், அலுப்பும் தீர பகல் தூக்கமொன்றிற்காய்த் தன் உடலைப் படுக்கையறையில் போடப்பட்டிருந்த மெத்தைக் கட்டிலில் மல்லாக்கச் சாய்த்தாள் சுந்தரி. கண்களை மூடிச் சில நிமிடங்களுக்குள் ஆழ்ந்த நித்திரையாகிப் போனாள்.

பிற்பகல் 2.00 மணியிருக்கும்.

"ராகுல்! என்னமகன்! படிக்காம ரி.வி பாத்துக் கொண்டிருக்கிறா" என்று வீட்டின் சிற்றிங் ரூமிலிருந்து படுக்கையறைக்குச் செல்லும் உள் கதவடியில் நின்றுதன் மகனைப் பார்த்து உரத்துக் குரல் கொடுத்தாள் சுந்தரி.

அம்மா சத்தமிட்டுக் கூப்பிட்டுக் கதைக்கிறாவே என்ற எந்தப் பிரக்ஞையும் இல்லாமல் தன்பாட்டில் 'சிற்றிங் ரூம்' இல் 'செற்றி'யில் அமர்ந்தபடி ரி.வி யில் கண் புதைத்திருந்தான் ராகுலன். சுந்தரி கதைத்தது எதுவுமே ராகுலனின் காதில் விழவேயில்லை.

"என்ன ராகுல்! நான் கதைக்கிற உனக்கு விளங்கல்லையா? மகன்! சோதனைக்கு இன்னும் மூணுமாதந்தான் இருக்கு. இப்பிடி பகல் இரவா ரி.வி பார்த்துக் கொண்டிருந்தியென்டா. எப்படி சோதனை பாஸ் பண்ணிற" மீண்டும் உரத்துக் குரல் கொடுத்தாள் சுந்தரி.

ஆமாம்! சுந்தரியின் மகன் ராகுலன் வருகிற டிசம்பர் மாதம் க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளான். வந்தாறுமூலையில் உள்ள தனது சொந்த வீட்டை வாடகைக்குக் கொடுத்துவிட்டுப் பதினைந்து கிலோமீற்றர் தொலைவிலுள்ள மட்டக்களப்பில் சிறிய வீடொன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு வசிக்க வந்ததே ராகுலனின் படிப்புக்காகத்தான். அவனைப் படிப்பித்து ஆளாக்கவேண்டும் என்பதே அவளது வாழ்வின் ஒரே இலட்சியம். இளவயதிலே தன் பெற்றோருக்குத் தெரியாமல் தான் காதலித்த இளைஞனோடு ஓடிப்போய் வாழ்வை அமைத்துக் கொண்டவள் சுந்தரி. 2004 டிசம்பர் 26ம் திகதி 'சுனாமி' அடித்த அன்றையதினம் காலை கல்லுவன்கேணிக் கடற்கரைக்கு மீன் வாங்கிவரச் சென்றிருந்த சுந்தரியின் கணவனையும் கடல் காவு கொண்டுவிட்டது. அப்போது ராகுலன் வந்தாறுமுலையில் உள்ள அரசசார்பற்ற நிறுவனமொன்று நடாத்தும் முன்பள்ளியொன்றில் பாலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். ராகுலன் இல்லையென்றால் கணவன் 'சுனாமி'யின் அலைக் கரங்களில் அள்ளுண்டபோதே சுந்தரியும் தன் உயிரை மாய்த்துக் கொண்டிருப்பாள். ஆனால் மகன் ராகுலனுக்காகவே அவள் உயிர் வாழ்கிறாள். அவனை வளர்த்துப் படிப்பித்து ஆளாக்கிச் சொந்தக் காலில் அவனை ஊன்றச் செய்வதே சுந்தரியின் ஒரே இலட்சியம். இதனைவிட எந்த ஆசாபாசமும் அவளுக்கு வாழ்க்கையில் கிடையாது. கணவனின் அகாலமரணத்தின் பின்னர் மகன் ராகுலனைக் கூட்டிக்கொண்டு மட்டக்களப்புக்குக் குடிபெயர்ந்துவிட்டாள். அவள் பணியாற்றிய அரசசார்பற்ற நிறுவனத்தின் தலைமையகமும் மட்டக்களப்பு நகரில் இருந்ததால் மகனுடைய படிப்புக்கும் முக்கியத்துவம் கொடுத்து மட்டக்களப்புக்கு வசிக்க வந்தாள். இப்போது மகன் ராகுலன் மட்டக்களப்பு சென்.மைக்கேல் கல்லூரியில் பதினொராம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறான்.

சுந்தரியின் உரத்த குரல் கூடக் காதில் விழாமல் தன்னையும் மறந்து ராகுலன் தொடர்ந்து இடைவிடாமல் ரி.வி யிலேயே கண் புதைத்திருந்தான்.

சிற்றிங் ரூமிலிருந்து படுக்கையறைக்குச் செல்லும் உள் கதவடியில் நின்று இதுவரையில் ராகுலனை நோக்கி உரத்துக் குரல் கொடுத்துக் கொண்டிருந்த சுந்தரி சற்றுத் தலையைப் பக்கவாட்டில் திருப்பித் தான் படுத்திருந்த கட்டிலை நோக்கினாள்.

என்ன ஆச்சரியம். அவளது உயிரற்ற உடல் கட்டிலிலே மல்லாக்கக் கிடப்பதைச் சுந்தரி கண்டாள்.

தனது உடலிலிருந்து தனது உயிர் வெளியேறி விட்டதை ஒருகணம் உணர்ந்தவளாய்த் தனது மகன் ராகுலனைத் தனியே தவிக்க விட்டுச் செல்ல மனமில்லாதவளாய்க் கட்டிலருகே மின்னல் வேகத்தில் விரைந்து தன் உடலுக்குள் புக முயற்சித்தாள். அவளால் முடியவில்லை.

மீண்டும் கதவடியில் வந்து நின்று மகன் ராகுலனை வாஞ்சையோடு நோக்கினாள். இப்போது ராகுலனின் வகுப்பு நண்பன் தனஞ்செயனும் வந்திருந்து இருவரும் சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்ட சுந்தரி சத்தமிட்டாள்.

"ராகுல் என்ன இது..! இரண்டுபேரும் இந்த வருசம் சோதனை எடுக்கப் போகிறவர்கள். இப்படிப் படிக்காம நேரத்த வீணாக்கினா என்னண்டு. ரி.வி யை 'ஓவ்' பண்ணிப்போட்டு இரண்டுபேரும் இருந்துபடியுங்க."

ராகுலனோ அன்றித் தனஞ்செயனோ சுந்தரியைத் திரும்பிப் பார்க்கவுமில்லை. அவளுடைய குரலுக்குச் செவி சாய்க்கவுமில்லை. எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரக்ஞையும் இல்லாமல் தொடர்ந்து கதைத்துச் சிரித்துக் கொண்டிருந் தார்கள்.

சுந்தரி மீண்டும் தன் கட்டிலருகே சென்று உயிரற்றுக்கிடந்த தன் உடலுக்குள் புகுவதற்கு மீண்டும் மீண்டும் முயற்சித்தாள். அவளால் முடியவில்லை.

மீண்டும் கதவடியில் வந்து நின்று மகள் ராகுலனை கண்களில் நீர் மல்கநோக்கினாள். இப்போது ராகுலன் மட்டுமே தனியே இருந்தான். அவனுடைய வகுப்பறை நண்பன் தனஞ்செயன் வெளிச்சென்றிருந்தான்.

"ராகுல்..! ராகுல்.." என்று பலமுறை பலத்த சத்தமிட்டுக் கூப்பிட்டாள். ராகுலனிடமிருந்து எந்த எதிர்வினையும் இல்லை, சுந்தரி மீண்டும் கட்டிலருகில் சென்று விபரிக்க முடியாத ஒரு ஆவேசத்துடன் தனது உயிரற்ற உடலுக்குள் புகுவதற்கு முழு மூச்சோடு முயன்றாள்.

அடுத்தகணம்! 'ராகுல்..!' என்று சுந்தரி ஓலமிட்டாள். அம்மாவின் பயங்கரமான ஓலம் காதில் விழுந்த ராகுலன் பதறியடித்துத் துள்ளி எழும்பிப் பாய்ந்து படுக்கையறைக்குள் ஓடினான். அங்கே அவன் கண்டகாட்சி!

கட்டிலில் படுத்திருந்த சுந்தரியின் வாயிலிருந்து கடைவாய் வழியே நுரை வழிந்துகொண்டிருந்தது. ராகுலன் கட்டிலருகே ஓடிச் சென்று தாயின் அருகில் அமர்ந்து "என்னம்மா நடந்தது? என்னம்மா நடந்தது?" என்று கேட்டு விம்மிவிம்மி அழத் தொடங்கினான். சுந்தரியின் வாயின் ஓரத்தே வழிந்திருந்த நுரையைத் தன் கைகளால் வழித்துத் துடைத்துவிட்டான்.

"அழாத மகன்! உன்னத் தனிய விட்டிட்டு ஒருநாளும் நான் போகமாட்டன்' என்று தழுதழுத்த குரலில் சுந்தரி ராகுலனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதவண்ணம் ஆதரவாக அவனது தலையைக் கோதிவிட்டாள். பின் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு,

"ஒண்டுமில்ல மகன். போய்ப் படிங்கடா கண்ணு" என்றாள். தாய் சொல்லைத் தட்டாது ராகுலனும் எழுந்து படிக்கப்போனான். சுந்தரியின் சிந்தனைச்சக்கரம் சுழன்றது.

என்னநடந்தது. தான் கண்டது கனவா? அல்லது உளப் பிரமையா? கனவில் ஒருவர் தன் உயிரற்ற உடலைத் தானே காணமுடியுமா? வாயில் நுரைவழிந்தது எப்படி? என்று பலவாறாய்ச் சிந்தித்த சுந்தரிக்குச் சிந்தனையில் ஒரு பொறி தட்டியது.

"ராகுல்!" மகனை அன்பு ததும்பக் கூப்பிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னோடு வந்து கதைத்து விட்டுச் சென்றிருந்தது யார்?" என்று கருணையோடு கேட்டாள்.

"தனஞ்செயன்" என்று பதிலளித்தான் ராகுலன்.

"சரி! போய்ப்படி" என்று மகனைச் சொல்லி அனுப்பிவிட்ட சுந்தரி மீண்டும் தன் சிந்தனைக் குதிரையைத் தட்டிவிட்டாள்.


அப்படியானால் தான் கண்டது கனவல்லவே. உளப் பிரமையும் அல்ல. தனஞ்செயனைத் தான் கண்டது உண்மைதானே. தனஞ்செயன் உண்மையாகவே வந்து சென்றுள்ளான். மகன் ராகுலனும் தனஞ்செயனும் தனது குரலுக்குச் செவி சாய்க்காமல் கதைத்துச் சிரித்துக் கொண்டிருந்தார்களே!

இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்த சுந்தரிக்கு இப்போது உண்மையில் என்ன நடந்தது என்பது தெளிவாகியது.

கொஞ்சநேரம் தன் உடலிலிருந்து உயிர் பிரிந்து வெளியேறித் தான் 'அருவம்' ஆகிப் பின் மீண்டும் உயிர் பெற்றெழுந்ததன் அனுபவத்தை எண்ணி மெய்சிலிர்த்தாள்.

இப்போது நேரத்தைப் பார்த்தாள். பிற்பகல் 4.00மணி. கட்டிலை விட்டு எழுந்து தன் அனுபவத்தைத் தனக்குள்ளே எண்ணி வியந்து பின் படித்துக்கொண்டிருக்கும் மகன் ராகுலனுக்குத் தேநீர் போடுவதற்குக் குசினிக்குள் நுழைந்தாள் சுந்தரி 'உருவம்'ஆக. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரப்பத்தான் பூச்சி

1990ம் ஆண்டு நிலவிய வன்செயல் சூழல் அல்லது யுத்தச் சூழல் அல்லது பயங்கரவாதச் சூழல் (அது ஆயுதக்குழுக்களின் பயங்கரவாதமாகவோ அல்லது அரச பயங்கரவாதமாகவோ இருக்கலாம்) ஊரிலிருந்து பல குடும்பங்களைக் கொழும்புக்கு இடம்பெயர வைத்தன. அப்படி மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்குச் சென்ற குடும்பங்களில் எமது குடும்பமும் ஒன்று.

மட்டக்களப்பில் ஐந்து படுக்கை அறைகள், பெரிய வரவேற்பு மண்டபம், அலுவலக அறை, பெரிய சமையலறை, இணைந்த குளியலறைகள், வெளி விறாந்தை என்று பெரிய கல்வீட்டில் குடியிருந்த எமக்குக் கொழும்பில் அவ்வாறு வசிக்க முடியாது. ஆசிரியரான எனது ஒற்றைச் சம்பளத்தில் வசதியான வீடு எடுத்து வாடகை செலுத்தக் கட்டுப்படியாகாது. எனவே ஒரு படுக்கையறை அதனுடன் இணைந்த குளியலறை. சிறு வரவேற்பு அறை, வரவேற்பு அறையை ஒட்டியதாக அதன் ஓரத்தில் எட்டடி நீளம் ஆறடி அகலமான சிறு குசினி. இப்படி இடக்கு முடக்கான சிறிய 'அனெக்ஸ்' ஒன்றில்தான் நான், மனைவி மற்றும் எங்கள் பத்து வயது நிரம்பிய மகன் என மூன்று பேர் அடங்கிய எமது குடும்பத்தின் கொழும்புக் குடித்தனம் ஆரம்பமாகிற்று.

கொழும்பு வாழ்க்கை தொடங்கி ஒரு ஆறுமாதம் கழிந்திருக்கும். படுக்கையறையினுள் இணைத்துப் போடப்பட்ட இரு கட்டில்களில் நான், மனைவி, மகன் மூவரும் அருகருகே உறங்குவதே வழக்கம்.

அப்படி ஒரு நாள் இரவு உறங்கும் போது எனது நெற்றியிலே ஏதோ ஒன்று ஊர்வதாக நித்திரைக் கண்ணில் உணர்ந்து திடீரென்று துள்ளி எழுந்து 'லைட்' ஐப் போட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பத்தான்பூச்சியொன்றுதலையணைக்கும்கட்டிலுக்குமிடையிலான இடுக்கில் மீசையை ஆட்டிக்கொண்டு அசைந்து கொண்டிருந்தது. அப்போது அவசரத்தில் கிடைத்த புத்தகம் ஒன்றினால் அதனை அடித்துக் கொல்ல முற்பட்ட போது அது எங்கோ ஓடித்தப்பி ஒளிந்து கொண்டது.

இன்னொருநாள் இரவு சிறுநீர் கழிப்பதற்காக எழுந்து 'பாத்ரும்'க்குள் சென்றபோது அங்கு நிலத்தில் ஓர் மூலையில் கரப்பத்தான் பூச்சியொன்றினைக் கண்டேன். முன்பு தப்பித்துச் சென்ற பூச்சி அதுவாகத்தான் இருக்குமோ என்று எண்ணிக்கொண்டு அசுப்புக் காட்டாமல் அதன் அருகில் சென்று 'பாட்டா' செருப்பால் ஒரே அடியில் அடித்துக் கொன்றேன்.

ஐந்தாறு நாட்கள் கழிந்திருக்கும். இரவு ஒரு நாள் விழிப்பு வந்து எழுந்து தண்ணீர் குடிப்பதற்காகக் குசினியறைக்குள் 'லைட்"ஐப் போட்டேன். குசினியறை நிலத்தில் நான்கைந்து கரப்பத்தான் பூச்சிகள் குறுக்கும் மறுக்கும் மெல்ல ஊர்ந்து கொண்டிருந்தன. ஓடிச்சென்று 'பாட்டா' செருப்பை எடுத்துவந்து அவற்றில் சிலவற்றை அடித்துக் கொன்று அவற்றைக் கழிவு வாளிக்குள் போட்டுவிட்டுத்தான் மறுவேலை பார்த்தேன்.

இதனை மறுநாள் காலை என் மனைவியிடம் சொன்னபோது அன்றிலிருந்து படுக்கைக்குச் செல்லும் போது சாப்பாட்டுப் பொருட்களை மூடிவைப்பதிலும் பீங்கான், கோப்பை, கிளாஸ், சட்டி, முட்டி போன்ற பாத்திரங்களையெல்லாம் கவிழ்த்து வைப்பதிலும் கவனம் செலுத்தினாள். கரப்பத்தான் பூச்சிகள் இவற்றில் மேய்ந்துவிடும் என்ற அசூசையே அதற்குக் காரணம்.

இப்படி இரவில் கரப்பத்தான் பூச்சிகள் பறந்து வந்து கட்டிலில் விழுவதும் 'பாத்ரும்'மில் கரப்பத்தான்கள் ஓடித்திரிவதும் குசினியறைக்குள் அவை உலாவருவதும் அடிக்கடி நாம் அசூசையுடன் எதிர்கொள்ளும் அனுபவங்களாகிவிட்டன. பகல் வேளைகளிலும் ஒன்றிரண்டு எமது கண்ணில் பட்டு ஓடி மறைந்ததுண்டு. எங்கிருந்து இந்தக் கரப்பத்தான்கள் வருகின்றன என்றுதான் எமக்குத் தெரியவில்லை 'இந்தக் கரப்பத்தான் பூச்சிகளுக்கு ஒரு வழி செய்ய வேண்டும்' என்று என் மனைவி அடிக்கடி நச்சரிக்கத் தொடங்கினாள்.

"கரப்பத்தானைக் கண்டா பாட்டா செருப்பால் அடித்துச் சாக்கொல்வதைத் தவிர வேறு என்னதான் நாம செய்ய முடியும். அதுகள் எங்கிருந்து வருகிதுகள் என்டே தெரியல்லையே" என்று எனது பக்கத்தைச் சமாளித்து வந்தேன்.

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை. பகல் குசினிக்குள் சமைத்துக் கொண்டிருந்த என் மனைவி என்னைக் கூப்பிட்டுக் குசினிக்குள் 'சிங்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டிருந்த மேற்பரப்புக்குக் கீழே பலகையால் நிர்மாணம் செய்யப்பட்டிருந்த 'கப்போர்ட்' மாதிரியான பகுதியைக் காட்டி "அதற்குள்ள கதவிடுக்கால ஒரு கரப்பத்தான் நுழையிரதக் கண்டநான். கதவுக்கு அருகில காத வைச்சு கேளுங்க சரசரவென்று மெல்லிய சத்தம் கேட்கிது" என்று நீண்ட நாள் மர்மமொன்றினைத் துலக்குவது போன்ற பாவனையில் எனக்குச் சொன்னாள். நானும் அதனைச் சிரமேற்கொண்டு குந்தியிருந்து மெல்லவாகக் 'கப்போர்ட்'டின் கதவைத் திறந்து பார்த்தேன். ஆ! கரப்பத்தான் கும்பம். ஆம்! அவற்றின் வசிப்பிடத்தைக் கண்டுபிடித்தாயிற்று. 'கப்போர்ட்'டின் கதவை மெல்ல இறுக்கிச் சாத்திவிட்டு எழுந்தேன்.

அன்று பின்னேரம் கடைக்குச் சென்று 'மோர்ட்டின்' ரின் ஒன்று வாங்கிவந்து 'சிங்'கின் கீழ் குசினிக்குள் இருந்த 'கப்போர்ட்'டின் கதவை மெல்லத் திறந்து 'மோர்ட்டின்'னை விசிறி அடித்தேன். வெளியிலே சில கரப்பத்தான்கள் ஓடி வந்தன. கதவைச் சாத்திவிட்டு அவற்றை 'பாட்டா' செருப்பால் அடித்துக் கொன்றேன். உள்ளே கொஞ்ச நேரம் வரை சரசரவென்று பாம்பு ஊர்வது போலச் சத்தம். பின் கொஞ்ச நேரத்தில் சத்தம் அடங்கி விட்டது. ஒரு மணித்தியாலம் சென்ற பின் 'கப்போர்ட்'டின் கதவுகளை முழுசாகத் திறந்து பார்த்தேன். கரப்பத்தான் பூச்சிக் கும்பம் சின்னதும் பெரியதுமாய்ச் செத்துக் கிடந்தன. சில குற்றுயிரோடு அசைந்து கொண்டிருந்தன. கையிலே 'கிளவ்ஸ்'ப் போட்டு அவற்றை ஒன்றும்விடாமல் அள்ளிப் 'பொலித்தீன்' பை ஒன்றிலே போட்டுக்கட்டி வெளியிலே மாநகரசபைக் குப்பை லொறி வந்து எடுத்துப்போகும் கழிவுத்தொட்டியிலே கொண்டு போய்ப் போட்டுவிட்டுவந்து ஒரு வெற்றிப் புன்னகையுடன் மனைவியை ஏறிட்டு நோக்கிவிட்டு நன்கு குளித்துவிட்டு வந்தேன்.

வழக்கத்துக்கு மாறாகச் சீனியைக் கொஞ்சம் தூக்கலாகப் போட்டுச் சூடான தேனீர் ஒன்று மனைவி கையில் தந்தாள். வாங்கிக் குடித்துவிட்டு வெறும் 'கப்' ஐ நீட்டியபோது அதனை வாங்கிக்கொண்டே மனைவி சொன்னாள்

"முழுப்பூச்சிகளும் செத்திராது. சிலது தப்பித்து ஓடி எங்காவது இடுக்கில ஒளிச்சிக் கொண்டுதான் இருக்கும்." "ஒபரேசன் கரப்பத்தான்' இன்னும் முற்றுப்பெறவில்லைப் போலும் என்று எண்ணினேன்.

எனது கடமை இன்னும் முடிந்துவிடவில்லை என்பதை அவள் சுட்டிக்காட்டுவது போல எனக்குப் பட்டது.

அப்போது வெளியில் விளையாடச் சென்றிருந்த எனது மகனும் வந்து விட்டான். வரும்போது வாசற்படியில் ஒரு கரப்பத்தான் பூச்சியைக் கண்ட அவன் ஓடி வந்து 'மோர்ட்டின்' ரின்னை எடுத்துக் கொண்டுபோய் அதன் மீது விசிறத் தொடங்க பூச்சியும் அங்கும் இங்கும் ஓடத்தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பத்தான் பூச்சிக்குப் பின்னால் அது போகுமிடமெல்லாம் பின்னாலே ஓடிஓடி 'மோர்ட்டின்'னை விசிறி விசிறி அடித்தான். 'மோர்ட்டின்'னின் மணம் எங்கும் பரவி மூக்கை அரிக்கத் தொடங்கியது.

"மகன் ஒரு தரம் விசிறினால் போதும். அது அதன் தோலில் பட்டால் காணும். அது ஓடிச்சென்று எங்காவது ஒளிந்து செத்துவிடும்" என்றேன். நான் சொன்னதை அவன் காதில் விழுத்தாமல் அக் கரப்பத்தான் பூச்சியின் பின்னாலே ஓடிக்களைத்து இறுதியில் அது அசைவற்றுக் கிடக்கும் வரை 'மோட்டின்'னை விசிறி முடித்தான்.

ஒரு கரப்பத்தான் பூச்சியைக் கொல்ல ஒரு 'மோர்ட்டின்'ரின் செலவழித்தால் எனது மாதச் சம்பளம் 'மோட்டின்' வாங்க மட்டும்தான் காணும் என்று மகனுக்குத் தெரியாமல் நானும் மனைவியும் முடிவெடுத்து 'மேர்ட்டின்' வாங்குவதை அன்றோடு நிறுத்தினோம்.

எது எப்படியிருப்பினும் கரப்பத்தான்பூச்சி வேட்டையை வெற்றிகரமாக நிறைவேற்றியதில் எல்லோருக்கும் வீட்டில் மகிழ்ச்சி. தப்பித்துச் சென்ற கரப்பத்தான்பூச்சி ஏதும் கண்ணில் பட்டால் 'பாட்டா' செருப்பு இருக்கிறதுதானே என்று எம்மை நம்பிக்கையோடு சமாதானப்படுத்திக் கொண்டோம். ஒரு வாரம் கழிந்திருக்கும். அதுவும் ஒரு ஞாயிற்றுக்கிழமைதான். வாசற்படியில் நின்றிருந்த எனது மகன் "அப்பா! அப்பா!" என்று அவசரமாகக் கூப்பிட்டான். என்னவோ ஏதோ என்று நான் பதறியடித்துக் கொண்டு அறையைவிட்டு வெளியே வந்தபோது "அந்தா பாருங்க" என்று வாசற்படி ஓரத்தில் ஒரு மூலையைக் காட்டினான்.

அங்கே இரண்டு கரப்பத்தான்பூச்சிகள் ஆணும் பெண்ணுமாக இருக்க வேண்டும். ஒன்றுடன் ஒன்று குதம் வழியே ஒட்டிக் கொண்டு கலவியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன. இந்தக் கலவி பற்றி மகனுக்கு விளங்கும் வயதில் அவன் இல்லை. அவன் ஓடிச்சென்று 'பாட்டா' செருப்பொன்றை எடுத்து வந்து என் கையில் தந்து "ஒரே அடியில ரெண்டு கரப்பத்தான். அடியுங்க அப்பா" என்றான். அவன் நீட்டிய ஒற்றைச் செருப்பைக் கையில் வாங்கி வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று யோசித்தேன்.

மகாபாரதக் கதை நினைவில் எழுந்தது.

பாண்டு மன்னன் காட்டில் வேட்டையாடச் சென்ற போது மான்களிரண்டு கலையும் பிணையும் கலவியில் துய்த்திருக்கும்போது யோசியாமல் பாணம் தொடுத்து விடுகிறான். பெண் மான் அம்படிபட்டு வீழ்ந்துவிடுகிறது. என்ன ஆச்சரியம்! முனிவரொருவரும் அவன் மனைவியும் கலையும் பிணையுமாக உருமாறித்தான் இந்தக் கலவி நடைபெற்றுக் கொண்டிருந்ததால் கலைமானான முனிவன் பாண்டுமுன் தோன்றித் தமது கலவியின்பத்தைக் குழப்பியதால் பாண்டுவுக்குச் சாபமிடுகிறான். பாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனைவியை விரகதாபத்தில் தழுவநேர்ந்தால் தலைவெடித்து மாண்டு போவான் என்பதே அச்சாபம். பின்னாளில் முனிவன் அளித்த சாபத்தை மறந்து பாண்டு தன் இரண்டாவது மனைவியான மாத்ரியை மாலை வேளையில் தென்றலும் நறுமணமும் வீசும் நந்தவனமொன்றில் வைத்துக் காதலும் காமமும் எழுப்பிவிட்ட விரகதாபம் மேலிடத் தன்னை மறந்து தழுவிய நிலையில் தலைவெடித்துச் சாகிறான்.

எனது நினைவில் எழுந்து கரப்பத்தான்பூச்சியாட்டம் ஊர்ந்த மகாபாரதக் கதை அந்தக் கரப்பத்தான் பூச்சிகளைக் கொல்லும் எனது எண்ணத்தைக் கைவிட வைத்தது. கரப்பத்தான் பூச்சிகளிரண்டும் யாராவது முனிவனும் மனைவியுமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தினால் அல்ல. பாண்டுவைப்போல நானும் தலை வெடித்துச் சாகப்போவதில்லை. ஆனால், இரு உயிர்கள் கலவி இன்பத்தில் ஈடுபட்டிருக்கையில் அதனைக் குழப்புவது அல்லது கெடுப்பது சாபத்துக்குரிய பாவம் என்று கருதினேன்.

மகனிடம் சொன்னேன் " அதுகள் பாவம் மகன். அடியாம விட்டு விடுவம்" என்று. என்னை ஆச்சரியத்தோடு பார்த்த அவன் " நீங்க அடிக்காட்டி நான் அடிக்கிறன் அப்பா" என்று சொல்லி ஓடிச்சென்று செருப்புச் சோடியின் மற்ற ஒற்றையை எடுத்துக் கொண்டு வந்தான்.

"இல்ல மகன், பாவம் அதுகள அடியாதடா" என்று அவனை நான் தடுத்துக் கொண்டிருந்த போது பக்கத்து வீட்டில் வசிக்கும் அவனுடைய பள்ளி நண்பன் குமரன் வெளியில் வீதியில் வந்து நின்று "தனு ! வா! விளையாடப் போவம்" என்று குரல் கொடுத்துக் கூப்பிட்டான். உடனே தனு என்று அழைக்கப்படும் எனது மகன் தனுஜனுக்குப் பராக்கு வேறு பக்கம் திரும்பியதால் கையில் எடுத்த ஒற்றைச் செருப்பைக் கீழே போட்டு விட்டு 'கிரிக்கட் மட்டையை எடுத்துக் கொண்டு வெளியே ஓடினான்.

நல்லவேளை கரப்பத்தான் பூச்சிகளிரண்டும் உயிர் தப்பின.

இவ்வளவு நேரமும் குசினிக்குள் நின்று சமைத்துக் கொண்டிருந்தாலும் என்னுடையதும் மகனுடையதும் சம்பாஷணையை அரை குறையாகக் காதில் விழுத்திக் கொண்டிருந்த என் மனைவி தனது குசினி வேலைகளை முடித்துவிட்டு வாசற்படிக்கு வந்து,

"என்னப்பா நடந்தது?" என்றாள்.

நடந்ததைச் சொல்லிக் கரப்பத்தான் பூச்சிகள் இரண்டையும் அவளுக்குக் காட்டினேன். அவள் பார்த்துவிட்டுப் பதில் ஏதும் சொல்லாமல் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டு உள்ளே போனாள். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் கிழக்கு மாகாணத்துக் கிராமமொன்றின் திருமண நிகழ்வு.

'இரண்டறையும் மண்டபமும்' என்று கிராமத்தில் கூறுவார்களே, அப்படியான வீட்டில்தான் திருமணவிழா நடந்துகொண்டிருக்கிறது. திருமணச் சடங்குகளெல்லாம் நிறைவுபெற்று புதுமணத் தம்பதியினர் கணவன்- மனைவியாக ஆளையாள் பாதி மறைத்துக் கொண்டு 'சிவன்-பார்வதி' போன்று 'அர்த்தநாரீஸ்வரர்' ஆக, அந்த வீட்டின் மண்டபத்தில் நீளப்பாட்டின் நடுவே உட்சுவரோரம் அலங்கரிக்கப்பெற்றிருந்த மணவறையில் மணக்கோலத்துடன் வீற்றிருக்கின்றனர்.

வீட்டின் அகலமான வெளி 'விறாந்தை' யின் நடுப்பகுதியிலே செவ்வக வடிவத்தில் இடைவெளிவிட்டு சுற்றிவர ஓரத்தில் நீளத்தில் பாய் போட்டு வெள்ளைச்சீலை விரித்து வாழை இலை போட்டுப் பந்தி வைத்துப் பரிமாறிய கல்யாணச் சாப்பாட்டை ஒரு 'பிடி' பிடித்தவர்கள் பின்பு வெற்றிலை வட்டாவைத் தேடி வாய்க்குந்தான் போட்டபின்னர் வரிசையாக நின்று மணமக்களுக்கான பரிசுகளைக் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் மணமக்களைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சிவிட்டு அவர்களின் கையைப் பொத்திக் 'கவர்' களைத் திணித்துக் கொண்டார்கள். அதற்குள் காசு இருக்க வேண்டும்.

வீட்டு வளவு மூலையில் நின்றிருந்த வேப்பமரத்தின் உச்சக் கொப்பில் உயர்த்திக் கட்டிய ஒலிபெருக்கி 'தில்லையம்பல நடராசா... செழுமை நாதனே பரமேசா.. சினிமாப் பாடல் வரிகளைச் சிணுங்கிக் கொண்டிருந்தது.

மணமகளின் தந்தை தம்பிராசா வெள்ளை வேட்டி, வாலாமணி, சால்வையுடன் 'மாப்பிள்ளை'த் தோற்றத்துடன் வாசலில்நின்று வருபவர் களை வணக்கம் சொல்லிக் கைகூப்பி வரவேற்பதிலும் பின்னர் ஓடிவந்து சாப்பாட்டுப் பந்தியைக் கவனிப்பதிலும் ஈடுபடுபவராக அங்குமிங்கும் ஓடிச் சுழன்று கொண்டிருந்தார்.

தம்பிராசாவின் மனைவி - மணமகளின் தாய் கனகம் குசினிக்குள் நின்று சாப்பாட்டு அலுவல்களைக் கவனிப்பதில் கருத்தூன்றியிருந்தாள்.

அப்போது திடீரென்று மணமகளின் தங்கையான சாரதா தூக்கி வைத்திருந்த அவளது குடும்பத்தின் கடைக்குட்டித் தம்பி ஒரு வயதுக்குழந்தை 'வீர் வீர்..' ரென்று அழத் தொடங்கிற்று.

"இல்ல....இல்ல.... குளறாத குட்டி...." என்று கூறிக் கொண்டே குழந்தையின் முதுகில் இதமாகத்தட்டி அதன் அழுகையை நிறுத்த முயன்றாள் சாரதா. குழந்தை இன்னும் உரத்துச் சத்தமிட்டுக் கத்தத் தொடங்கிற்று.

"புள்ளைக்கு வயித்தில என்னவோ செய்யிது போல கிடக்கு. பூச்சிகீச்சோ தெரியல்ல. சமியாக்குணமும் இரிக்கும்" என்றாள் பக்கத்தில் நின்றிருந்த ஒருத்தி.

இதைக் காதில் வாங்கிக் கொண்ட தாய் கனகம் குசினி அலுவல்களுக்குச் சற்று விடைகொடுத்துவிட்டு விருட்டென்று வீட்டுக்குள் சென்று கையில் 'கிரைப் வாட்டர்' போத்தலுடனும் சின்னக் கரண்டியுடனும் ஓடி வந்தாள்.

"தா! புள்ள தம்பிய" என்று சாரதாவிடமிருந்து தன் குழந்தையை வாங்கிய கனகம் குசினிப் படிக்கட்டில் அமர்ந்து குழந்தையைத் தன் மடியில் வைத்து 'கிரைப் வார்ட்டரை'க் கரண்டியில் ஊற்றச் சொல்லிச் சாரதாவுக்குக் கட்டளையிட்டு சாரதா அக்கட்டளையை நிறைவேற்ற குழந்தையின் வாயை 'ஆ' வென்று சொல்லிக் கையால் அகற்றி 'கிரைப் வாட்டர்' நிரம்பிய கரண்டியைக் குழந்தையின் வாய்க்குள் விட்டுப் பருக்கினாள். குழந்தை அழுதுகொண்டே தனது கையால் கரண்டியைத் தட்டிவிட்டது. 'கிரைப் வாட்டர்' அரைவாசி வெளியேயும் அரைவாசி குழந்தையின் வாயிற்கடையிலும் சிந்தி வழிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு சொட்டும் உள்ளுக்குப்போகல்ல" என்று அலுத்துக் கொண்ட கனகம் மீண்டும் கரண்டியில் 'கிரைப் வாட்டர்'யை ஊற்றச் சொன்னாள் சாரதாவிடம்.

இரண்டாம்தரம் பருக்கும் போது திமிறிய குழந்தை கரண்டியை மீண்டும் கையால் தட்டிவிட்டது.

குழந்தை ஒன்றுக்கும் கேளாமல் 'வீர்வீர்'ரென்று கத்திக் கொண்டே யிருந்தது.

கனகம் செய்வதறியாது கலங்கினாள்.

'என்னவோ? ஏதோ?' வென்ற கேள்விக் குறியுடன் குழந்தையைச் சுற்றிச் சிறுகூட்டமும் கூடிற்று. ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு சைகைகளையும் விளையாட்டுக்களையும் காட்டிக் காட்டிக் குழந்தைக்குப் 'பராக்கு'க் காட்டினர்.

வீட்டுக்குள்ளிருந்த கிலுக்கி, பொம்மை, 'கீச்'சிடும் றப்பர்க்கிளி, கரடிப் பொம்மை போன்ற குழந்தையின் விளையாட்டுப் பொருட்களெல்லாம் வெளியே வந்தன.

இவை எதுவும் குழந்தை வீரிட்டுக் கத்தும் அழுகையை நிறுத்துவதில் தோல்விக்குமேல் தோல்வியையே தழுவிக் கொண்டிருந்தன.

தன் ஒரு வயதுப் பச்சைக் குழந்தையின் அழுகையைக் கேட்டுத் தாய் கனகத்திற்கும் கண் இமைகளில் நீர் எட்டிப்பார்க்கத் தொடங்கிற்று. குழந்தையும் கத்திக் கத்திக் களைத்துப் போய்விட்டது.

குழந்தையின் தகப்பன் தம்பிராசாவும் ஓடிவந்து குழந்தையின் அருகிலே நின்றுகொண்டு சொல்வதென்னவென்றும் செய்வதென்னவென்றும் தெரியாமல் திகைத்துப்போய் நின்று கொண்டிருந்தார்.

அனுபவப்பட்ட நடுத்தரவயதுப் பெண்ணொருத்தி,

"புள்ளக்கிப் பூச்சிகீச்சி கடிச்சிதோ தெரியா. எதுக்கும் சட்டயக் கழட்டிப் பாருங்க பிள்ளையாள்" எனச் சத்தமிட்டாள்.

"சட்டயக் கழட்டுங்க. புள்ள வேர்த்துப்போய்த்து காத்துப்படட்டும்" என்று இன்னொருத்தி பக்கப்பாட்டுப்பாடினாள்.

குழந்தை களைத்தும் வியர்த்தும் போய்விட்டாலும் தொடர்ந்து கத்திக்கொண்டேயிருந்தது. கனகம் குழந்தைக்குப் போட்டிருந்த சட்டை, சப்பாத்து, தொப்பி என எல்லாவற்றையும் கழற்றினாள். குழந்தை இப்போது பிறந்த மேனியாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையின் கால், கை, கமக்கட்டு, கவடு, கழுத்து, கன்னம், உள்ளங்கால், உள்ளங்கை, தலை, முதுகு, சூத்து என எல்லா இடமும் புரட்டிப் புரட்டிப் பார்க்கத் தொடங்கினாள் கனகம்.

"பூச்சிகீச்சி கடிச்சாச் சிவந்திருக்குமே!" என்றாள் ஒருத்தி.

"தோல் தடிச்சிருக்கும் பாருங்க" என்றாள் மற்றொருத்தி.

தாய் கனகம் குழந்தையை மீண்டும் மீண்டும் பல தடவைகள் புரட்டிப் புரட்டிப் பார்த்துவிட்டு" "ஒரிடமும் ஒண்டையும் காணல்லயே? " என்று கண் கலங்கினாள்.

ஆரவாரத்துடனும் மகிழ்ச்சியுடனும் அரங்கேறிக்கொண்டிருந்த திருமணவிழா குழந்தையின் பரிதாபநிலையில் களையிழக்கத் தொடங்கிற்று. ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த சினிமாப்பாடல்களும் ஓய்ந்துவிட்டிருந்தன.

எல்லோரினதும் கண்களில் ஏமாற்றத்தின் அறிகுறியும் குழந்தைக்கு என்னமோ நடந்துவிட்டது என்ற கலவரமும் காட்சிதரத் தொடங்கின.

அப்போதுதான் ஏதோ முக்கியமான அலுவலாகக் காலையிலேயே வெளியே சென்றிருந்த தம்பிராசாவின் தங்கை தங்கம்மா, மணமகளின் மாமி விடயத்தைக் கேள்விப்பட்டுப் பதறியடித்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வந்துசேர்ந்தாள்.

ஓடிவந்த ஓட்டத்திலேயே கனகத்திடம் "தா! மச்சி தம்பிய' என்று கேட்டுக் குழந்தையைக் கையில் வாங்கிய தங்கம்மா "என்னமச்சி நடந்தது?" என்று மைத்துனி கனகத்தைப் பார்த்தும் "என்னண்ணா நடந்தது?" எனத் தம்பிராசாவையும் பார்த்துக் கேட்டாள்.

கனகம் அழுதழுது சொன்ன விபரங்களையெல்லாம் கவனமாகக் காதில் வாங்கிய தங்கம்மா விருட்டென்று மணவறையை நோக்கி விரைந்தாள். மணவறையை அண்மித்ததும் தனது கடைக்குட்டித் தம்பிக்கு என்ன நடந்ததோ என்று விழிபிதுங்கி வியாகுலமடைந்திருந்த மணமகளிடம் "புடி புள்ள தம்பிய" என்று குழந்தையை நீட்டினாள். குழந்தையின் தமக்கை - மணமகள் குழந்தையைக் கையில் ஏந்தினாள்.

என்ன ஆச்சரியம்! குழந்தை அழுகையை நிறுத்தி தமக்கையான மணமகளின் முகத்தை அண்ணாந்து பார்த்துச் சிரித்து ஆனந்தமாகக் கைகளையும் கால்களையும் ஆட்டிற்று.

"அம்மாளே!" தாய் கனகம் நெஞ்சில் கையை வைத்து நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது போன ஆச்சியொருத்தி வாய் திறந்தாள்.

"பாத்தியாடி புள்ள.. புதினத்த.... அவள் மூத்தவள்தானே தம்பிய முழுநாளும் தூக்கித் திரியிற. தம்பிக்குத் தெரியுமா அக்காவுக்குக் கலியாணமெண்டு. நீங்க மூத்தவளக் கொண்டுபோய் மணவறையில மறைச்சு வச்சிருந்தா.... பின்ன. அக்காவத் தேடித்தான் இவ்வளவு நேரமும் தம்பி கத்திரிக்கான். அடி சக்கெண்டானாம்.'

ஆச்சியின் கதையைக் கேட்டு ஆண்கள் பெண்கள் அனைவரும் 'கொல்' லென்று சிரித்தார்கள். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கிருந்து வந்தவர்கள்



இரவு எட்டு மணியிருக்கும்.

"டுமீல்....டுமீல்... டுமீல்..."

துப்பாக்கி வேட்டுச் சத்தத்தைத் தொடர்ந்து ஆட்கள் அழுது ஓலமிடும் ஓசை உரக்க எழுந்தது.

மட்டக்களப்பில் வசிக்கும் நான் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் திருக்கோவில் கிராமத்தில் வசிக்கும் எனது நண்பன் ஜெயம் வீட்டிற்கு விஜயம் செய்திருந்தேன்.

நானும் நண்பன் ஜெயமும் திருக்கோவில் கிராமத்தின் பிரதான வீதியிலிருந்து கடற்கரை நோக்கிச் செல்லும் உள்வீதியில் அமைந்துள்ள ஜெயத்தின் வீட்டின் வெளி 'விறாந்தை'யில் அமர்ந்து நீண்ட காலத்திற்குப் பின் சந்தித்த நாங்கள் மாலை நேரத்தை மகிழ்ச்சியாகக் கழிப்பதற்காக மதுக் 'கிளாஸ்'களைக் கைகளில் ஏந்திச் சுவைத்தபடி கதைத்துக் கொண்டிருந்தோம்.

கடற்கரை வீதியின் அந்தத்திலே நண்பன் ஜெயத்தின் வீட்டிலிருந்து கூப்பிடு தூரத்தில் அமைந்திருக்கும் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகள் கோயில் பக்கமிருந்துதான் துப்பாக்கி வேட்டுச் சத்தமும் தொடர்ந்து அழுகுரல்களும் கேட்டன.

துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டு அதிர்ச்சியடைந்த நாம் இருவரும் தொடர்ந்து அழுகுரலைக் கேட்ட மாத்திரத்தில் கைகளிலேந்தியிருந்த மதுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கிளாஸ்' களை அவசரமாக வெறுமையாக்கிவிட்டுக் கோயிலடி நோக்கிப் புறப்பட எழுந்தோம்.

இதனைக் கண்டுகொண்ட எனது மனைவியும் நண்பன் ஜெயத்தின் மனைவியும் ஏககாலத்தில் "எங்க போகப் போறீங்க?"என்று வினாத் தொடுத்தனர்.

"கோயிலடிப் பக்கந்தான். என்ன நடந்ததெண்டு பாத்தித்து வாறம்" என்றேன் நான்.

"பைத்தியமா உங்களுக்கு. இந்த நேரத்தில... இரவயில.."என்று இழுத்தாள் என் மனைவி.

"அதுதானே! இப்ப போகாதீங்க"என்று தடுத்தாள் நண்பன் ஜெயத்தின் மனைவியும்.

'இப்ப சண்டைக் காலம் இல்லத்தானே. பிரச்சனை ஒண்டும் வராது" என்று நான் கூறியதை நண்பன் ஜெயமும் வழிமொழிய உள்ளுக்குள் போயிருந்த மதுத் துளிகள் ஊட்டிய உற்சாகத்தில் கோயிலடியை நோக்கிய வீதியில் இருவரும் தாமதியாது இறங்கினோம்.

1987 ஜூலை 29 இல் இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு தமிழ்ப் போராளி இயக்கங்களெல்லாம் சுதந்திரமாக நடமாடிய காலமது. இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப் படையினர் முகாம்களுக்குள் முடக்கப்பட்டு இருந்தனர். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இந்திய அமைதி காக்கும் படையினர் நிலைகொண்டிருந்த நேரம் அது. அந்தத் தைரியத்திலும்தான்"பிரச்சனை ஒண்டும் வராது"என்று எமது மனைவிமாரைச் சமாதானப்படுத்திச் சமாளித்து விட்டு அந்த இரவு நேரத்தில் நானும் நண்பன் ஜெயமும் வீட்டிலிருந்து வீதியிலிறங்கி வெளிச் செல்லக்கூடியதாயிருந்தது.

கோவிலடியை இருவரும் அடைந்தபோது அருகிலிருந்த சிறிய வீடொன்றின் முற்றத்திலும் வீட்டு வளவின் கடப்புக்கு வெளியேயும் சனக் கூட்டமாயிருந்தது. வீட்டினுள் மண்டபத்திலிருந்து அழுகுரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

நானும் நண்பன் ஜெயமும் கூட்டத்தினரை விலத்தி ஊடறுத்து வீட்டினுள் நுழைந்தோம்.

அங்கே நாம் கண்ட காட்சி எமது இரத்தத்தை உறைய வைத்தது.

இரத்த வெள்ளத்தில் ஒரு இளைஞன் இறந்து கிடந்தான். சாரன் மட்டுமே அணிந்திருந்த அவனது வெற்று மார்பில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து குருதி கொப்பளிக்க மல்லாக்கக் கிடந்தான். விழிகள் இரண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்தபடியே இருந்தன. அப்போதுதான் தூண்டிலில் அகப்பட்ட மீனை நீரிலிருந்து வெளியே தரையில் தூக்கிப் போட்ட மாதிரித் துடிப்பு அடங்கிப் 'பச்சை'யாகக் கிடந்தான். உடற்சூடு கூட அடங்கியிருக்காது.

அருகில் அவனது இளம் மனைவி அவனது மார்பிலும் தனது தலையிலும் மாறி மாறி அடித்து அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். அவளது கைகளிலும் தலையிலும் இரத்தம் அப்பியிருந்தது. அவளது மடியிலிருந்த பச்சைக்குழந்தை அவளது மார்பிலிருந்து பாலை உறிஞ்சிக் கொண்டிருந்தது. அவளது மேற்சட்டையின் முடிச்சுகள் அவிழ்ந்து விலகிய மார்புகள் வெளித்தெரிய அதனைக்கூட உணர்ந்து கொள்ள முடியாத உள நிலையில் அவள் அழுது புலம்பிக் கொண்டிருந்த அந்த அவலமான காட்சியிலிருந்து எமது விழிகளை விலக்கிக்கொண்டு இருவரும் பேயறைந்த முகத்தோடு வீட்டிற்கு வெளியே வந்தோம்.

வெளியே வீட்டு முற்றத்தில் நின்றிருந்த எங்களுக்குத் தெரிந்த முதியவர் ஒருவரை அணுகி "என்ன பெரியவர் நடந்தது" என்று வினவினோம்.

"அந்தக் கொடுமயக் கேட்டீங்களெண்டா...... மக்காள்!....... ஏழர மணி போல பொழுது பட்டுப்போய் இருட்டின நேரத்தில ரெண்டு பொடியனுகள் வந்து கடப்படியில நிண்டு 'பாலன்! பாலன்!!' எண்டு கூப்பிட்டானுகள். அவள்.. அவன் பாலண்ட பொஞ்சாதி புள்ளயத் தூக்கித்து வந்து கடப்படியில நிண்டு 'என்ன? என்று கேட்டிருக்காள்.

'பாலன் இல்லயா?' என்று வந்தவனுகள் கேட்டிருக்கானுகள். வந்தவனுகள்ற கையில ஆயுதமிருந்ததைக் கண்டுத்து 'அவர் இல்ல. வயலுக்க போய்த்தாரு' என்றிருக்காள்.

வந்தவனுகள் 'சரி! புறகுவாறம்' எண்டுத்துத் திரும்பித்தானுகள்.

இவள் பொஞ்சாதி பயத்தில வந்து புருசனிட்டச் சொல்லிப்போட்டு அவன உள்ளறைக்குள்ள போகச்சொல்லிக் கதவப் பூட்டிப்போட்டாள். புறகு கடப்பையும் சாத்திப் போட்டாள்.

போனவனுகள் ஒரு அர மணித்தியாலத்தில திரும்பிவந்து திடும் திடுமென கடப்பால ஏறி வளவுக்குள்ள வந்து வீட்டுக்குள்ள பூந்து உள்ளறக் கதவக் காலால உதச்சித் துறந்து உள்ளுக்குள்ள இருந்த பாலன வெளியால மண்டபத்துக்குள்ள இழுத்து வந்து - அவள் பொஞ்சாதிப் பெட்ட 'அவர ஒண்டும் செய்திராதீங்க. நான் பச்சப்புள்ளக் காரி. உங்கட காலில விழுந்து கெஞ்சிறன்' எண்டு கையெடுத்துக் கும்பிட்டிருக்காள் - நாசமறுவானுகள் அவளத் தள்ளிப்போட்டு பாலனச் சுட்டுப் போட்டு ஓடித்தானுகள் மக்காள்!" என்று பதைபதைப்புடன் நடந்ததைச் சொல்லி முடித்தார் அந்த முதியவர்.

"அவனுகள் ஆரு" என்று முதியவரைக் கேட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்று முற்றும் கண்களைத் திருப்பி அவதானித்து விட்டுக் கிட்ட நெருங்கி ஜெயத்திடம் `புலிகள்´ என்று சொல்லி ஜெயத்தின் காதைக் கடித்தார். அந்த இரகசியத் தொனி எனது காதிலும் விழுந்தது.

நண்பன் ஜெயமும் நானும் ஆளையாள் அர்த்த புஷ்டியுடன் பார்த்துவிட்டு உடன் வீடு திரும்பினோம்.

வீடு திரும்பிய ஜெயமும் நானும் ஏதோ ஒப்புக்குப் போத்தலில் மீதமிருந்த மதுவைக் காலி பண்ணிவிட்டுச் சாப்பிட்டுவிட்டுப் படுக்கைக்குச் சென்று விட்டோம்.

இரவு எனக்கு நித்திரையே வரவில்லை. அன்றிருந்த மனநிலையில உள்ளுக்குள்போன மது கூடச் செயலிழந்து இருந்தது. இச்சம்பவத்தையே நினைத்து மனம் வெதும்பிக் கொண்டிருந்த நான் விடிந்ததும்,- எனக்கு நன்கு தெரிந்திருந்த நான் முன்பு திருக்கோவிலில் அரசாங்கத் திணைக்களமொன்றில் பணி புரியும்போது எனக்குக் கீழ் கடமையாற்றிய இளங்கோ என்பவன்தான் 'ரமணன்' என்ற இயக்கப் பெயரில் திருக்கோவில் பிரதேசத்தில் புலிகள் இயக்கத்தின் பொறுப்பாளராக இருந்தான்-என்னை வந்து நண்பன் ஜெயத்தின் வீட்டில் அவசரமாகச் சந்திக்கும்படி அவனுக்கு வியளமனுப்பினேன்.

பகல் 11.00 மணி போல் என்னைத்தேடி இளங்கோ வந்தான். பல வருடங்களுக்குப் பின்னர் என்னைக் கண்டவன் பழைய உறவுடனேயே முகம் மலர்ந்து ஓடிவந்து கட்டிப்பிடித்து "எப்படி இருக்கீங்க சேர்! வரச் சொன்னயளாம் என்ன விசயம் சேர்"என்றான்.

"உன்னப் பாத்துக் கனநாள். இப்ப சண்டயில்லாத சமாதான காலம்தானே. அதுதான் வரச்சொன்ன நான்" என்று பதில் கூறி விட்டு அவனை இரகசியமாகக் கண்ணைக் காட்டி அறை ஒன்றினுள் அழைத்துச் சென்றேன்.

நேருக்கு நேர் இருவரும் கதிரைகளில் அமர்ந்த வண்ணம் பேச்சைத் தொடங்கினோம்.

முதல்நாள் இரவு திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவிலடியில் நடந்த கொலைச் சம்பவம் குறித்து முதியவர் கூறிய கதையை அப்படியே ஒப்புவித்து விட்டுத் தொடர்ந்தேன்.

"இஞ்ச பார்! இளங்கோ. முன்பு நான் பழகிய இளங்கோ என்ற ரீதியிலதான் உன்னோட கதைக்கப்போறன். புலி இயக்க உறுப்பினன் 'ரமணன்' என்ற ரீதியில் அல்ல" என்ற பீடிகையுடன் அவனது முகக் குறிப்பை அளவு எடுத்துக்கொண்டு என்னையும் சுதாகரித்துக்கொண்டு நிதானமாகச் சொல்லத் தொடங்கினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுடுபட்டபாலன எனக்கு நல்லாத் தெரியும். அவன் முன்பு திருக்கோவிலில நான் வேல செய்யக்குள்ள 'புளொட்' இயக்கத்தில இருந்தவன். 'புளொட்' இயக்கத்துக்கும் புலிகள் இயக்கத்துக்கும் பகையிருந்தது. அது வேற விஷயம். அதப்பத்தி நான் ஆராய வரல்ல. ஆனா அவன் இடக்காலத்தில 'புளொட்' டில இருந்து விலகி ஊரில இரிக்கப் பயத்தில பாணமைக்குப் போய் அந்த ஊரில கூலி வேல செஞ்சி பிழச்சி அந்த ஊரிலயே ஒரு ஏழப் புள்ளையக் கலியாணம் கட்டி, இப்பத்தான் முதல் புள்ள புறந்து மாதக்கணக்கிலதான் இரிக்கும். இந்திய-இலங்க சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டதால உண்டான சமாதானச் சூழல நம்பி ஊரில இருப்பமெண்டு திருக்கோயிலுக்குத் திரும்பி அவண்ட தாயிர ஊட்டுல பொஞ்சாதி புள்ளையோட போய்ச் சீவிப்பமெண்டு வந்த ஒரு 'நிராயுதபாணி' யப் புலிகள் சுட்டுச் சாக வச்சது நியாயமா?" என்று எனது மனப்பாரத்தைக் கொட்டித் தீர்த்தேன்.

நான் கூறிய எல்லாவற்றையும் குறுக்கீடுகள் எதுவுமின்றி அமைதியாக் கேட்டுக் கொண்டிருந்த இளங்கோ,

"அது நாங்க செய்யல்ல சேர்!" என்றான்.

"புலிகள் செய்யல்லயா? அப்ப ஆர்ராம்பி செஞ்ச" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"புலிகள்தான் செஞ்சவங்க சேர்! ஆனா இங்கத்தய ஆக்களில்ல. அங்கரிந்து வந்தாக்கள்" என்று நெற்றியையும் கண்களையும் மேலே உயர்த்தி நிமிர்த்திப் பதில் சொன்னான்.

அவனது உடல் மொழி எனக்குப் புரிந்தது. நெற்றியையும் கண்களையும் மேலே உயர்த்தி நிமிர்த்தி 'அங்கரிந்து வந்தாக்கள்' என்று அவன் அழுத்திக் கூறியது இலங்கையின் வடதுருவத்தையே சுட்டியது.

"தீர்மானம் எடுப்பதும் நிறைவேற்றுவதும் அவங்கதானெண்டா நீங்கெல்லாம் பிரதேசப் பொறுப்பாளரெண்டும் அது இதண்டும் இருக்கிறது என்ன மண்ணாங்கட்டிக்கு? ஒரு இளம் தாயயும் பச்சக் குழந்தயயும் பரிதவிக்க விட்டிருக்கீங்க. இந்தப் பாவத்தை எங்க கொண்டுபோய்த் தொலைக்கப் போறீங்க? இதுவா வடகிழக்கு இணைப்பு? இதுவா தமிழ்த் தேசியம்?"

எனது கட்டுப்பாட்டையும் மீறி என் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவந்தன. என் உடம்பு படபடத்தது. கண்களில் நீர் கசிந்தது. அதன்பின் மௌனமானேன். அவனும் மௌனமாகிப் பதில் ஏதும் சொல்லாமல் விக்கித்து நின்றான். சில நிமிடங்களை இருவரினதும் மௌனம் விழுங்கிற்று. சிறிய இடைவெளிக்குப் பின் மௌனத்தை அவனே கலைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேர்! என்னக் கூப்பிட்டுக் கதைச்ச விஷயத்த வேற எவரிட்டயும் சொல்லாதீங்க. அதப்போல எனக்கிட்டக் கேட்ட மாதிரி புலி உறுப்பினர்கள் வேற எவரிட்டயும் கேட்டிறாதீங்க. இத நான் உங்களிட்டச் சொல்லுறது புலி இயக்க உறுப்பினன் ரமணனாக இல்ல. உங்களுக்குக் கீழ முதல் வேல செஞ்ச இளங்கோ என்ற ரீதியிலதான்" என்றவன் சட்டென எழுந்து,

"வாறன் சேர்! உங்கள கன காலத்துக்குப் புறகு கண்டதும் கதச்சதும் சந்தோஷம் சேர்" என்று மரியாதையாகச் சொல்லி விட்டு வேகமாக வெளியேறினான்.

"சரி" என்று தலை அசைத்து அவனை வழி அனுப்பிய நான், எனது கைகள் இரண்டையும் சேர்த்து விரல்களைப் பின்னிக்கொண்டு தலையைத் தாழ்த்திச் சேர்த்த கைகளை நெற்றியிலே வைத்து கண்களை மூடிச் சிந்திக்கத் தொடங்கினேன். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையில் 1983 ஜூலை இனக்கலவரக் காலம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுப்புக்காவலிலும் விளக்கமறியலிலும் தண்டனை விதிக்கப்பட்டுமிருந்த எழுபத்தியிரண்டு தமிழ்க் கைதிகளில் முப்பத்தைந்து பேர் ஜூலை 25ஆம் திகதி சக சிங்களக் கைதிகளால் சிறைக் காவலர்களின் உதவியுடன் நடாத்தப்பட்ட படுகொலைத் தாக்குதல் சம்பவத்தில் பலியாகியிருந்தனர்.

நாட்டில் பதற்றமான சூழ்நிலை. நாடளாவிய ரீதியில் தமிழர்கள் சிங்களவர்களால் தாக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். தமிழ் இளைஞர்கள் கொதித்துப் போயிருந்த நேரம் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது நான் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு, செங்கலடி நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அலுவலகத்திற்குப் பக்கத்தில் அரசாங்க விடுதியில்தான் வாசம்.

செங்கலடி பிரதான வீதியிலிருந்து உள்ளே சுமார் பத்து கிலோமீட்டர் தூரத்தில் வயலும் வயல் சார்ந்த 'முந்தன்குமாரவெளி' என்னும் இடத்தில் அமைந்த நீர்ப்பாசன வேலைத்தலமொன்றில் பல கனரக வாகனங்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தன. இவ்வாகனங்களின் 'ஆப்பரேட்டர்'களாகவும் 'கிளீனர்' களாகவும் வெளி மாகாணங்களில் வெவ்வேறு ஊர்களைச் சேர்ந்த சிங்களவர்களே வேலை செய்து கொண்டிருந்தார்கள். அந்த வேலைத்தலம் எனது பொறுப்பிலேயே இருந்தது.

1983 ஜூலை 25ஆம் திகதி இரவு எனக்கு நித்திரையே வரவில்லை. வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைச் சம்பவத்தினால் மனம் துயரத்தில் தோய்ந்திருந்ததொருபுறம். மறுபுறம் எனது பொறுப்பிலுள்ள வேலைத்தலத்தில் வேலை செய்யும் சிங்கள ஊழியர்களை அவர்களுக்கு எந்த அசம்பாவிதமும் தமிழர்களால் ஏற்படாது அவர்களைப் பாதுகாப்பாக அவர்களின் ஊர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதில் எனது எண்ணங்கள் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தன.

அடுத்தநாள் காலை அலுவலகம் சென்றேன். பெண் பொறியியலாளர் ஒருவர் தான் மேலதிகாரி. நிலைமையைப் பதற்றத்துடன் எடுத்துச் சொன்னேன். நான் கூறியவற்றையெல்லாம் கூர்மையாகச் செவிமடுத்த அவர்,

"என்ன செய்யவேணும்" என்றார்.

"ஜீப் வாகனமொண்டு உடன வேணும் 'மேடம்'" என்றேன்.

"சுணங்காம எடுத்துத்துப் போங்க" என்று அனுமதித்தார்.

நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான பச்சை நிற அந்த 'ஜீப்' வண்டி புழுதியைக் கிளப்பிக்கொண்டு முந்தன்குமாரவெளி வேலைத்தலத்தைச் சென்றடைந்தது.

என்னைக் கண்டதும் அங்கிருந்த சிங்கள ஊழியர்கள் அனைவரும் ஓடி வந்து 'ஜீப்' பைச் சூழ்ந்து கொண்டார்கள். நான் வரும் முன்னர் அவர்களின் முகங்களில் அப்பியிருந்த பயமும் பீதியும் என்னைக் கண்டதும் மெல்ல மெல்ல நீங்கி முகங்களில் நம்பிக்கைச் சிரிப்பு துளிர்க்கத் தொடங்கியது.

"உங்கட உங்கட முக்கியமான சாமான்கள எடுத்துத்துக் கெதியா 'ஜீப்'புக்குள்ள ஏறுங்க" என்று கட்டளையிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக வேகமாக இயங்கினார்கள்.

அவர்களை ஏற்றிக்கொண்டு மீண்டும் புழுதியைக் கிளப்பிய வண்ணம் திரும்பி வந்து கொண்டிருந்த 'ஜீப்' செங்கலடிக்குப் பக்கத்திலுள்ள ஏறாவூர் பொலிஸ் நிலையத்தை நோக்கிப் பறந்தது.

இவர்கள் எல்லோரையும் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாகப் பாரம் கொடுப்பதுதான் எனது நோக்கமாக இருந்தது.

ஆனால், ஏறாவூர் பொலிஸ் நிலையத்தை அடையும் முன்னமே இடைவழியில் மட்டக்களப்பு திருகோணமலை வீதியில் மட்டக்களப்பிலிருந்து 'கேகாலை' பெயர்ப் பலகையுடன் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 'பஸ்' ஸொன்று வந்து கொண்டிருந்தது. அன்றைய அசாதாரண சூழ்நிலையில் மட்டக்களப்பிலிருந்து வெளி மாகாணத்திற்குச் செல்லும் கடைசி பஸ் அதுவாகத்தான் இருக்கவேண்டும்.

'பஸ்' ஸை மறித்து நிற்பாட்டி எல்லோரையும் அந்தப் 'பஸ்' ஸில் ஏற்றி விட்டேன். கைச் செலவுக்காகப் பணம் ஒவ்வொருவருக்கும் வரும் வழியில் 'ஜீப்' பிற்குள் வைத்து நான் ஏற்கெனவே கொடுத்திருந்தேன்.

எனது கடமையைச் சரிவரச் செய்த நிம்மதியுடன் அன்று இரவு நன்றாகத் தூங்கினேன். விடிந்ததும் தெரியவில்லை. கண் விழித்தபோது என்னைக் காணவென்று காலை ஆறு மணிக்கே வந்து காத்திருந்தான் முந்தன்குமாரவெளி' வேலைத்தலக் காவலாளி கணபதிப்பிள்ளை. அன்றிரவு பத்துப் பதினைந்து தமிழ்ப் பொடியன்கள் கத்தி, கோடரி, இரும்பு கம்பிகள், பொல்லுகளுடன் அங்கு வேலை செய்த சிங்கள ஆட்களைத் தேடி வந்ததாகச் செய்தி சொன்னான்.

அலுவலகம் சென்றபோது என்னை வாசலுக்கு வந்து எதிர்கொண்டார் எங்கள் அலுவலகக் கணக்காளர் சிற்றம்பலம்.

“குட் மார்னிங் மிஸ்டர் சிற்றம்பலம்” என்றேன்.

"குட்மார்னிங் கிடக்கட்டும்! நீர் பாத்த வேல சரிதானோ காணும்" என்றார் ஒருவித எரிச்சலுடன்.

"ஏன் என்ன நடந்தது" என்றேன்.

"எங்கடையாக்கள வெலிக்கடையில 'சி' னாக்கள் சாக்கொண்டு போட்டினம். நீர் என்னெண்டாக் காணும் அவயளக் காப்பாத்தி நேற்று அவயள்ற ஊருக்கு அனுப்பிப் போட்டெல்லே வாறீர். நீரெல்லாம் தமிழினத் துரோகி ஐசே" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எதைக் குறித்து இப்படி எரிச்சல் அடைகிறார் என்பது எனக்கு விளங்கிவிட்டது.

பதில் சொல்ல விரும்பாமல் அவரை அலட்சியம் செய்துவிட்டு அவரைக் கடந்து சென்று விட்டேன்.

1983 யூலை 27 ஆம் திகதி மீண்டும் வெலிக்கடையில் இரண்டாவது தடவையாகவும் தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல். பதினெட்டுப் பேர் பலி.

நாட்டு நிலைமை மோசமடைந்தது.

இரண்டு மூன்று நாட்களின்பின் ஊவா மாகாணம் பசறை, லுணுகல போன்ற மலைநாட்டு ஊர்களிலிருந்து பாதிப்படைந்த தமிழ்க் குடும்பங்கள் பதியத்தலாவ, மகாஓயா வழியாகச் செங்கலடியை அகதிகளாக வந்தடைந்தன. எப்படியோ உயிர்தப்பி வெறுங்கையுடன் வந்து சேர்ந்திருந்தார்கள்.

நான் முன்னின்று ஊரிலுள்ள பிரமுகர்களைக் கூட்டி அகதிகளாக வந்த குடும்பங்களுக்கு உதவவும் அவர்களைச் செங்கலடிப் பிரதேசத்திலேயே குடியமர்த்தவும் வேண்டிய பணிகளை ஆரம்பித்தேன்.

சிற்றம்பலம் என்னை நெருங்கி வந்தார்.

"உம்மோடு கொஞ்சம் கதைக்கலாமோ"? என்றார்.

"சொல்லுங்க"என்றேன்.

"சொல்லிறனெண்டு குறை நினையாதையுங்கோ. வடக்கத்தியானுக்கு உதவுறீங்க. உவங்கள் நன்றியில்லாதவங்கள் பாருங்கோ" என்றார்.

எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

"இஞ்ச பாருங்க மிஸ்டர் சிற்றம்பலம். அண்டைக்கு நான் ஏதோ சிங்கள ஆக்களப் பாதுகாப்பாக ஊருக்கு அனுப்பி வச்சதுக்கு வந்து உங்கட தமிழ் உணர்ச்சியக் காட்டினீங்க. இப்ப சிங்கள ஆக்களிட்ட அடிபட்டு ஓடிவந்த தமிழ் அகதிகளிட்ட உங்கட அந்தத் தமிழுணர்ச்சியக் காட்டாம அவங்களுக்கு உதவி செய்யாதீங்க என்றீங்க. உங்கட கொள்கதான் என்னெண்டெனக்கு விளங்கல்ல. ஆர் துன்பத்தில இரிக்கிறாங்களோ அவங்களுக்கு உதவோணும். இதில தமிழ் சிங்களம் எண்டில்ல. எல்லாரும் மனிஷன்தான். உங்களப்போல ஆக்களாலதான் நாட்டில இப்பிடிப்பட்ட பிரச்சனயளெல்லாம் வருது" என்று நெற்றிப் பொட்டில் அடித்த மாதிரிக் கூறிவிட்டு அவரை விட்டு அப்பால் நகர்ந்தேன். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறவு



கல்முனை பஸ் நிலையத்திலிருந்து இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான அந்த பஸ் காலை ஏழு மணி போல் மட்டக்களப்பு நோக்கிப் புறப்பட்டது. சாரதியின் ஆசனத்துக்கு நேரே பின்பக்கத்தில் மதகுருமார்களுக்காக ஒதுக்கப்பட்ட அந்த முன் சீட்டில் அந்த பஸ்ஸில் மதகுருமார்கள் எவரும் பயணிக்காது காலியாக இருந்ததால் அமர்ந்திருந்தேன். மட்டக்களப்பில் எனக்கு ஒரு அலுவலிருந்தது. அதனால்தான் இப்பயணம்.

பஸ்சின் முன் பக்கத்தில் 'கடுகதி' யெனப் பலகை மாட்டியிருந்தாலும் கடினமான கதியில் பஸ் ஓடிக் களுவாஞ்சிகுடியை வந்தடைந்தது. பிரதான வீதியோரம் பஸ் நிறுத்தப்பட்டதும் முன்கதவால் கொஞ்சப் பேர் இறங்கப் பின்கதவால் கொஞ்சப்பேர் ஏறிக் கொண்டிருந்தனர்.

பின்கதவால் ஏறிய பெண்ணொருத்தி-நடுத்தர வயது-முகத்தில் ஏழ்மையின் இரேகைகள்-வாய் திறந்த பெரிய பனையோலைப் பெட்டியொன்றில்சிறுசிறு கட்டுகளாகக்கட்டிய அவித்த பனங்கிழங்குகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்துப்பாட்டில் சாய்வாக அடுக்கிக் கொணர்ந்திருந்தாள்-அதனை முன்னுக்கு வைத்துவிட்டுச் சற்றுப் பின்னால் நகர்ந்து பெட்டிக்கருகில் நின்று கொண்டாள். பெட்டியைப் பார்த்தேன். அம்பறாத்தூணியில் அம்புகளை அடுக்கியதைப்போலப் பனங்கிழங்குகள் கட்டுக்கட்டாய் அடுக்கப்பட்டிருந்தன.

அந்தப் பெண்ணை எனக்குத் தெரியும். அறிமுகம் இல்லை. ஊர் பேர் தெரியாது. ஒவ்வொரு நாளும் பனங்கிழங்குப் பெட்டியுடன் மட்டக்களப்புக்கு 'பஸ்' ஏறிச் சென்று மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் வைத்து விற்பனை செய்து வியாபாரம் முடிந்தவுடன் வீடு திரும்புவதுதான் அவளது நாளாந்த ஜீவனத் தொழிலாயிருக்க வேண்டும். அவளை நான் கல்முனையிலிருந்து மட்டக்களப்புக்குப் பயணிக்கும் போதெல்லாம் பஸ்ஸிலும் பலதடவைகள் கண்டிருக்கிறேன். மட்டக்களப்புப் பஸ் நிலையத்தில் வைத்து அவள் பனங்கிழங்கு வியாபாரம் செய்யும்போதும் பல தடவைகள் பார்த்திருக்கிறேன்.

பஸ்ஸில் 'கடுகதி' ப் பெயர்ப்பலகை பெயருக்குத்தான் மாட்டி இருந்தது. பெரும்பாலும் ஒவ்வொரு பஸ் தரிப்பிடத்திலும் நிற்பாட்டி ஆட்களை ஏற்றியும் இறக்கியும்தான் போய்க் கொண்டிருந்தது. அந்த அளவுக்குப் பஸ் சாரதிக்கும் நடத்துனருக்கும் சேவை மனப்பான்மை இருந்திருக்கலாம்.

பஸ் ஆரையம்பதியைத் தாண்டிக் காத்தான்குடி எல்லையை அண்மித்துக் கொண்டிருக்கும்போது எனக்குப் பின்னால் அழுகுரல் கேட்டுத் திரும்பினேன். அந்தப் பனங்கிழங்கு வியாபாரப் பெண்தான் தலையில் அடித்து அழுது கொண்டிருந்தாள். பயணிகள் எல்லோரும் அவளிடம் ஒவ்வொரு கேள்வி கேட்பதும் அவள் அதற்கு அழுதழுது பதில் சொல்வதுமாய்ப் போதாக்குறைக்குப் பஸ் நடத்துனரும் அவளிடம் புலன் விசாரணை அதிகாரியைப்போல் கேள்வி கேட்பதும் அதற்கும் அவள் பதில் சொல்லுவதுமாய் உள்ளே அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. எல்லாவற்றையும் நான் அமைதியாக இருந்து அவதானித்தேன்.

நடந்தது இதுதான். யாரோ 'பிக்பொக்கட்' காரன் ஒருவன் அந்தப் பெண் தனது 'றவிக்கை' க்குள்ளே சொருகிப் பாதுகாப்பாக வைத்திருந்த பனையோலைக் குட்டானை-'மணி பர்ஸ்'சை-களவாடி விட்டான். அதற்குள் ஐந்து நூறுரூபாய்த்தாள்கள் காசு இருந்துள்ளது. ஏழ்மையிலுள்ள அப்பெண்ணுக்கு அது ஒரு பெரிய தொகை. அழுது அடங்கியிருந்தாள். பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. அத்தொகை அவளது முதல் நாள் முழு உழைப்பாகக் கூட இருக்கலாம் என மனம் எண்ணியது. அவளுக்காக மனம் வருந்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் இப்போது கல்லடிப் பாலத்தினூடு பயணித்துக் கொண்டிருந்தது. நான் அரசடியில் இறங்கவேண்டும். அடுத்த பஸ் தரிப்பு நிலையம். இறங்கும்போது அப்பெண்ணிடம் "இந்தாம்மா! இத வச்சுக்க" என்று ஐந்நூறு ரூபாய்த் தாளொன்றை மடித்து அவள் கைக்குள் திணித்துவிட்டு இறங்கினேன்.

மட்டக்களப்பு அரசடியில் இறங்கிய நான் மக்கள் வங்கிக்கு முன்னால் செல்லும் 'பயனியர்' வீதியால் வாவிக்கரை நோக்கி நடந்து கொண்டிருந்தேன்.

"டேய்! பாபு. கொஞ்சம் நில்லு மச்சான்" என்ற குரல் கேட்டு நின்று பின்னால் திரும்பினேன்.

என்னோடு ஒன்றாகப் படித்த வகுப்பறை நண்பன் தேவன்தான் மிக வேகமான நடையில் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

வந்தவன் "மச்சான்! பஸ்சுக்குள்ள நடந்ததெல்லாம் பாத்துக்கொண்டுதான் இரிந்தநான். உன்னயும் கண்ட நான். உனக்குப் பின்னால நாலைந்து சீற் தள்ளித்தான் பின்னால இரிந்த நான். பஸ் ஸ்டாண்டில இறங்கிக் கதைப்பமெண்டு யோசித்துக் கொண்டிரிக்கக்குள்ள திடீரென்று நீ அரசடியில இறங்கித்தா. அதனால அடுத்த 'ஹோல்றில' இறங்கி உன்னப் புடிச்சிரணுமெண்டு ஓட்டமும் நடையுமா வாறன்" என்றான்.

"ஏன்? என்ன விசயம் மச்சான். பஸ்சுக்குள்ளயே கதச்சிரிக்கலாமே!" என்றேன்.

"நான் பஸ் ஸ்டாண்டிலதான் இறங்க இரிந்தன். பஸ்சுக்குள்ள நடந்த விசயத்தாலதான் அடுத்த ஹோல்றில இறங்கி உன்னத் தேடி ஓடி வாறன்" என்றான் தேவன்.

"விசயத்தச் சொல்லன். அப்படி என்ன அவசரம்" என்று அவனை விரைவு படுத்தினேன்.

"நீ அந்தப் பனங்கிழங்குப் பொம்புளைக்குக் காசு குடுத்துத்துத்தானே இறங்கின நீ. அதப் பாத்துத்து எனக்கு முன் சீட்டில இரிந்தவன் சொன்னான், 'பெரிய கொடயாளி. குடுத்தித்துப் போறாரு. அவள் காசக் களவு குடுத்ததெண்டு பொய் சொல்ல இவர் நல்லா ஏமாந்தித்தார் எண்டு. அவனுக்குப் பக்கத்தில இரிந்த மத்தவன் சொன்னான், ஏன் அப்பிடி? மத்தமாதிரியும் இரிக்கலாம்தானே. இவரே காசடிச்சுப் போட்டு பஸ்ச போலீஸ் ஸ்டேசன் கீசனெண்டு கொண்டு போனா கேஸ் பெரிசாப் போனாலும் போகுமெண்டு எடுத்த காசத் திரிப்பிக் குடுத்துத்தும் போயிருக்கலாம்தானே எண்டு சொல்லிச் சிரிச்சான். இதக் கேட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குக் கோபந்தான் வந்திது. உடன அவனுகளப் பாத்து 'உங்களுக்கு அவரு ஆரெண்டுதெரியாமக் கதைக்காதீங்க. மனுசன முதல்ல அளவிடத் தெரியணும். நரம்பில்லாத நாக்கால வரம்பில்லாமக் கதைக்காதீங்க. அவர் செஞ்ச நல்ல காரியத்த உங்களால செய்ய ஏலாட்டி சும்மா சொட்ட சொல்லாம வாயப் பொத்தித்திரிங்க. இப்புடியான வெட்டிப் பேச்செல்லாம் வேணாம்´ எண்டு அவனுகளோட சண்ட புடிச்சுப் போட்டு இத உனக்கிட்டச் சொல்லோணுமெண்டுதான் அடுத்த ஹோல்றில இறங்கி உன்னப் புடிக்க ஓடி வந்தனான்" என்று ஒரு பாரதம் படித்து முடித்தான் எனது நண்பன் தேவன்.

"தேவன்! இதயெல்லாம் பெரிசா எடுக்கப் போடா. இப்படிப் பேசிறாக்களும் சமூகத்தில இரிக்காங்கதான். ஏதாவது சொட்ட சொல்றதுதான் அப்படிப்பட்ட ஆக்களுக்குத் தொழில். நமக்குச் சரியெண்டு பட்டதச் செஞ்சிபோட்டுப் போக வேண்டியதுதான்" என்றேன்.

"இல்ல மச்சான்! நீ நல்லதத்தானே செஞ்சநீ. அவனுகள் இப்பிடி அபாண்டமாகக் கதைக்கப்போடாதுதானே" என்றான் தேவன்.

"இஞ்ச பார் தேவன்! முதல்ல அவனுகளுக்கு என்னத் தெரியா. எனக்கும் அவனுகளத் தெரியா. இரிந்தாலும் கூட அப்புடிக் கதச்சித்துப் போகட்டுமே. பறவால்ல. நம்மட தோலுக்கயா பூரப் போகுது. கஷ்ரப்படுறாக்களுக்கு உதவுறதும் மனிஷனுக்கு மனிஷன் இரக்கப்படுறதும்தானே மச்சான் முக்கியம். பலன ஒண்டும் எதிர்பாக்கப்போடா" என்றேன்.

"நான் அவனுகளில எவ்வளவு ஆத்திரத்தில வாறன். நீ என்னடா எண்டா ஒரு துறவி போலப் பேசிறா" என்றான் தேவன்.

"தேவன்! பலனொண்டையும் பாக்காம கஷ்ரத்தில உள்ளாக்களுக்கு ஏலுமானவர உதவுறதும் ஆராயிரிந்தாலும் மனிஷனுக்கு மனிஷன் இரக்கப்படுறதும் ஒரு வகயில துறவுதாண்டா மச்சான்! " என்றேன் நான்.

"உன்னோட கதச்சிக் களரேலாடா மச்சான். நான் வாறன். புறகு வடிவாக் கதைப்பம்." என்று கூறியபடியே வந்த வழியே தேவன் திரும்பிவிட நானும் வந்த அலுவலைப் பார்க்க வேகமாக நடக்கத் தொடங்கினேன். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த ஓவறைச் சத்தம்



"அஞ்சி மணியாகிது. எல்லாம் ஆயத்தம். கருணயம்மாக்காவத்தான் இன்னும் காணல்ல. ஆறு மணிக்கெல்லாம் படைச்சு முடியணும்" என்று எனது இளைய அக்கா சொல்லிக்கொண்டிருக்கும்போதே,

"புள்ள விசயா....!" என்று கூப்பிட்டுக் கொண்டே 'கேற்' றடியில் வந்து நின்ற கருணையம்மா அக்கா, "நாயெங்க புள்ள. கட்டிலயா?" என்றார்.

"நாய் கூட்டுக்குள்ள. வாங்கக்கா. உங்களத்தான் பாத்துத்திரிக்கம்" என்றாள் விஜயா என்ற பெயரில் அழைக்கப்படும் எனது உடன் பிறந்த அக்கா.

கருணையம்மா அக்கா 'கேற்'றைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார்.

இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தாயாரின் எட்டாம் நாள் சடங்குதான் இன்று. ஊரில் இப்படியான சடங்கு சம்பிரதாயங்களில் முறைதலை தெரிந்த ஒரு மூத்த பெண்மணிதான் கருணையம்மா அக்கா. எட்டாம் நாள் சடங்கிற்கான படையலை மாலை ஆறு மணிக்குள்ள படைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிக்க வேண்டும். இதை நிறைவேற்றி வைக்கத்தான் எனது அக்கா ஐந்து மணிக்கே ஆயத்தமானார். நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களும் வீட்டில் கூடியிருந்தார்கள்.

வீட்டுக்குள் நுழைந்த கருணையம்மா அக்கா நேரே அம்மாவின் அறைக்குள்ளே- அந்த அறைதான் அம்மா இருந்து இறந்த அறை-தனது நெஞ்சைத் தொட்டு அம்மாவை நினைந்து ஆண்டவனை வேண்டிக் கொள்ளும் பாவனைகளுடன் போனார். அறையின் உள்ளே சுவரோரம் பாய் விரித்து அதற்கு மேல் வெள்ளைத் துணி போட்டு பச்சை வாழை இலைகள் பரப்பியிருந்தன.

அம்மாவை நினைந்து நெஞ்சம் கனக்க நான் நின்று கொண்டிருந்தேன். புல்லில் பனித்துளி போல் என் கண்களில் நீர் துளிர்த்தது.

கருணையம்மா அக்கா தான் வந்த கடமையைத் தொடங்கினார்.

கருணையம்மா அக்கா அதைக் கொண்டு வா! இதைக் கொண்டு வா! என்று கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருக்க எனது அக்காவும் அக்காவின் மகளும் ஓடியோடிக் கருணையம்மா அக்கா பெயரிட்ட பண்டங்களை ஒவ்வொன்றாகக் கொணர்ந்து அவரின் கைகளில் கொடுத்தார்கள். கருணையம்மா அக்காவும் அவற்றை பக்குவமாகவும் பவ்வியமாகவும் அம்மாவை நினைந்த ஒரு பக்தி உணர்வோடும் வாங்கி உரிய இடத்தில் அவற்றை வைத்து மூன்று மடைகளாகப் படைத்தார். படையல் முடிந்ததும் கருணையம்மா அக்கா என்னைப் பார்த்து,

"தம்பி! எல்லாம் சரிதானே" என்றார். அம்மாவுக்கு நான்தான் மூத்த மகன் என்பதால்தான் கருணையம்மா அக்கா என்னை அப்படிக்கேட்டார் போலும்.

படையலின் மீது பார்வையைப் பதியவிட்டேன்.

பொங்கல்-சோறு-கூழ்-சமைத்த மரக்கறி வகைகள் பல-நண்டு, இறைச்சி, மீன் என மச்சக்கறிகள் பல-வாழைப்பழம், மாம்பழம் பலாப்பழம், அப்பிள், திராட்சை, அன்னாசி, மாதுளம்பழம் எனப் பலவகையான பழங்கள்-அவித்த மரவள்ளி, வற்றாளை, பனங்கிழங்கு எனப் பலவகைக் கிழங்குகள்-அவித்த சோளன் குலை-கொழுக்கட்டை, மோதகம், பயற்றம் பலகாரம், சீனிப் பலகாரம், லட்டு, முறுக்கு எனப் பல பலகாரவகைகள் எனத் தின்பண்டங்கள் தெரிந்தன. அம்மாவுக்குப் பிடித்த மிட்டாய் வகைகளும் வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் 'கிளாஸ்' களில் 'வைன்', தண்ணீர், 'நெஸ்டமோல்ட்' போன்ற பானங்களும் ஊற்றி வைக்கப்பட்டிருந்தன. இறுதிக் காலத்தில் அம்மா 'நெஸ்டமோல்ட்' குடித்ததால் அதுவும்- உடம்புக்கும் நல்லது. பசியும் எடுக்கும் என்று இறுதிக்காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவுக்கு நான் 'வைன்' வாங்கிக்கொடுத்துப் பருகியவர் என்பதால் அதுவும் வைக்கப்பட்டதாக அக்கா எனக்கு விளக்கம் சொன்னாள். கருணையம்மா அக்கா அதனை ஆமோதித்தார். தயிரும் ஒரு சட்டியில் இருந்தது. தட்டமொன்றில் அரிசிமாவும் பரவி வைக்கப்பட்டிருந்தது.

அம்மாவின் பிரிவுத்துயரம் மனதை ஆட்கொண்டிருந்த அச்சந்தர்ப்பத்தில் கூட அம்மா வந்து 'வைன்' னும் குடித்து இவ்வளவையும் ஒரே மூச்சில் சாப்பிட்டுவிட்டுச் செல்ல போகிறாவா? என்ற எண்ணம் வந்த போது உள்ளூர சிறு சிரிப்பு ஊற்றெடுத்த போதிலும் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கருணையம்மா அக்காவைப் பார்த்துச் "சரி" என்று தலையசைத்தேன்.

"அம்மாவுக்குப் புடிச்ச எல்லாமே மடயில வச்சிரிக்கன். ஒரு குறயும் வைக்கல்ல" என்று கருணையம்மா அக்கா தனக்குத்தானே சான்றிதழும் வழங்கினார்.

"ஓமக்கா? மட நல்லா வச்சிருக்கீங்க. அடுத்த அலுவலப் பாருங்க" என்றேன்.

கருணையம்மா அக்காவிடமிருந்து ஒன்றன் பின் ஒன்றாகக் கட்டளைகள் வரிசை வகுத்தன.

கூடியிருந்த எல்லோரும் வீட்டிற்கு வெளியே வந்து கூட்டம் கூட்டமாக இல்லாமல் தனித்தனியே தங்களுக்கு வாய்ப்பான இடங்களில் தள்ளித் தள்ளி அமர்ந்து கொண்டார்கள். நானும் என் மனைவியும் ஒரு ஒதுக்குப் புறத்தில் இடம் பிடித்துக் கொண்டோம்.

"வாற வழியில தும்புக்கட்டு வாருவல்கட்டக்கிட்ட செருப்பக்கிருப்ப வச்சிராதீங்க புள்ளயள்" என்றும் கருணையம்மா அக்கா அறிவுரை சொல்லத் தவறவில்லை.

"பீடி, சுருட்டுப் பத்திறாக்கள்-வெத்தில பாக்குச் சப்புறாக்களெண்டா இளநியோடசேத்து அதுகளயும் கடப்படியில வைக்கணும். அம்மாட்ட அந்தப் பழக்கம் இல்லண்டபடியா இளநிமட்டும் வச்சாப் போதும்" என்று விளக்கம் சொன்ன கருணையம்மா அக்கா முகிழ் சீவப்பட இளநீர் ஒன்றையும் கொணர்ந்து 'கேற்' றடியில் ஒரு அந்தத்தில் குத்தென்று வைத்தார்.

வீட்டுக்குள்ளே கதவுகள் யாவும் பாதி திறந்தபடியிருக்க உள்ளே இருந்த மின் விளக்குகளெல்லாம் அணைக்கப்பட்டன. வீட்டினுள்ளே மெல்லிருள் பரவியிருந்தது.

வெளியிலே அமர்ந்து 'கசாமுசா' என்று கதைத்துக் கொண்டிருந்தவர்களைப் பார்த்துச் சத்தம் போட வேண்டாம் என்பதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணையம்மா அக்கா தனது மூடிய வாயில் சுட்டு விரலை வைத்துச் சைகை காட்டினார். கருணையம்மா அக்காவின் கட்டளைக்கு அனைவரும் கட்டுப்பட்டனர்.

அமைதி இப்போது ஆட்சியைப் பிடித்தது. ஐந்து நிமிடங்கள் ஆகியிருக்கும்.

'கேற்' றடியில் பல்லியடித்தது. மூன்றுதரம் பல்லியடிக்கும் எனக் கருணையம்மா அக்கா முன்னே கூறியிருந்த போதிலும் எத்தனை தரம் அடித்தது என்பதை எண்ண மறந்து விட்டேன்.

கருணையம்மா அக்கா தனது உடல் மொழியால் நேர்முக வர்ணனை நிகழ்த்தினார்.

'கேற்' றடியில் பல்லியடித்தபோது 'அம்மா வருகிறா' என்றும் பின் வீட்டுக்குள் பல்லியடித்தபோது 'அம்மா வந்துவிட்டா' என்றும் கடைசியில் வீட்டிற்கு வெளியே பின்புறம் பல்லியடித்தபோது 'அம்மா வந்து படையலை ஏற்றுவிட்டு வெளியேறிச் செல்கிறா' என்றும் பொருள்பட அபிநயங்கள் புரிந்தார்.

இந்தப் பல்லியடிக்கும் விவகாரத்தில் எனக்கு நம்பிக்கையில்லாததால் கருணையம்மா அக்காவின் அபிநயங்களை எனது மனைவிக்குச் சுட்டிக்காட்டிக் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டேன்.

அடுத்த கணம் நடந்ததுதான் எனக்கு அதிர்ச்சியை அளித்தது.

அம்மா தனது அந்திமகாலத்தில் சாப்பிட்ட பின்பு ஒரு நீண்ட- சத்தமான ஏவறை விடுவா.

அதே ஏவறைச் சத்தம் என் காதில் அப்படியே ஒலித்தது.

ஒரு கணம் மெய்சிலிர்த்தேன். உடம்பு புல்லரித்தது. சில நாழிகைகள் அதிர்ச்சியில் உறைந்தேன். புதிய அனுபவம் ஒன்று என்னை ஆட்கொண்டது. இயல்புநிலைக்குத் திரும்பியதும் மனைவியிடம் மட்டும் இதனைச் சொன்னேன்.

வீட்டினுள் அணைக்கப்பட்ட மின் விளக்குகள் எல்லாம் மீண்டும் ஒளிர விடப்பட்டன.

எல்லோரும் அம்மாவின் அறையினுள் நுழைந்தோம்.

கருணை அம்மா அக்கா மடையின் கிட்டப் போய்ப் பார்த்துக் 'கிளாஸ்' களில் ஊற்றி வைக்கப்பட்டிருந்த 'வைன்'-தண்ணீர்-'நெஸ்டமோல்ட்' மட்டங்கள் குறைந்திருப்பதாக அக்காவின் காதில் குசுகுசுத்தார். தட்டத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவி விடப்பட்டிருந்த அரிசி மாவில் தடயங்கள் இருப்பதாகவும் காட்டினார். வண்டு ஒன்று ஊர்ந்து விளையாடியது போல் அரிசி மாவில் கீறல்கள் தென்பட்டன.

இறந்த 'ஆத்மா' க்கள் எட்டாம் நாள் சடங்கில் தங்களுக்குப் படைக்கப்பட்டவற்றை வந்து ஏற்றுச் செல்வதாகவும் அவ்வாறு ஏற்றுச் சென்றதற்கான தடயங்களே இவையென நம்பும் 'ஐதீகம்' உண்டு. அவ்வாறே நானும் எடுத்துக்கொண்டேன்.

அடுத்துப் படையலிலிருந்த பண்டங்கள் நெருங்கிய குடும்ப உறவினர்களுக்குப் பரிமாறப்பட்டன. வந்திருந்தவர்களும் ஒவ்வொருவராகக் கலையத் தொடங்கினர். இதற்கு மத்தியில் எனது எண்ணக் குதிரை அந்த ஏவறைச் சத்தத்தைச் சுற்றியே வட்டமிட்டது.

என் காதில் ஒலித்த அந்த ஏவறைச் சத்தம்? எனக்குப் புரியவில்லை. அதை வெறுமனே 'பிரமை' யென்றும் எடுத்துக்கொள்ள முடியவில்லை.

அது என் காதில் ஒலித்தவேளை நான் எந்தவிதமான சலனமுமற்று உறுதியாகவும் தெளிவாகவும் நிதானமாகவும்தான் இருந்தேன். எனது சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக வீட்டிற்கு வெளியே அமர்ந்திருந்த, அனைவரிடமும் அவர்கள் கலைந்து செல்வதற்குமுன் யாராவது அந்த வேளையில் ஏவறை விட்டார்களா என விசாரித்தபோது அப்படி எதுவும் நடைபெறவில்லை என்பதும் ஊர்ஜிதமாயிற்று. எவருக்கும் ஏவறைச் சத்தம் ஏதும் காதில் கேட்டதா என்பதை அறிய முற்பட்டபோது அதுவும் இல்லையென்றாயிற்று.

அம்மாவிடம் மானசீகமாகக் கேட்டேன்.

**"புதிய அனுபவமொன்றை-என்னுள்**

**பூக்க வைத்த அம்மாவே!**

**எட்டாம் நாள் சடங்கில்-என்**

**செவிகளில் கேட்ட-உங்கள்**

**ஏவறைச் சத்தம்!**

**இன்னும்தான் நினைக்கிறேன்**

**எப்படிச் சாத்தியம்?" ■**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரத்துவம்



மு.ப 10.00 மணியிருக்கும்.

"அம்மோவ்... அம்மோவ்..." என்று கத்திக்கொண்டு ஒழுங்கைக்குள்ளாலே தனது வீட்டைநோக்கி ஓடிவந்தாள் சுனீத்தா.

"என்னபுள்ள! தொண்டவெடிக்கக் கத்திற்று ஓடிவாறா. என்ன நடந்த" என்று வீட்டுக் 'கேற் றடியில் நின்றபடி கேட்டாள் கனீத்தாவின் தாய் அன்னம்.

“பொத்துவில் 'பொலிஸ் ஸ்ரேசன'ப் புலிப்பொடியனுகள் சுத்திவளைச்சுப் பொலிஸ்காரர் எல்லாரையும் 'பஸ்'ஸொன்றில ஏத்திட்டுக் கொண்டுபோறானுகளாம். எங்க கொண்டு போறானுகள்; என்ன செய்யப்போறானுகளெண்டு ஒண்டும் தெரியா. சனத்த ஊரில இருக்க வேணாமாம். எழும்பி எங்கெயாவது ஓடியொளியுங்க என்று பொடியனுகள் சொன்னதாமெண்டு சொல்லி பொத்துவில்த் தமிழ்ஆக்களெல்லாம் கோமாரிக்குப் போய்க் கொண்டிருக்காங்களாம்." என்று பதற்றத்துடன் பதிலளித்தாள் சுனீத்தா.

“என்னபுள்ள இது. எனக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போகிது. வீடுவாசல இப்படிய விட்டிட்டு நாம் எங்க ஓடிறதும் ஒளியிறதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கேலாத அம்மம்மாவ என்ன செய்யிற. எனக்கெண்டா என்ன செய்யிறண்டு ஒண்டும் விளங்கல்ல. கையும் ஓடல்ல. காலும் ஓடல்ல" என்று கலங்கி நின்றாள் அன்னம்.

அப்போது சைக்கிளொன்றில் வந்திறங்கினான் வெளிநாட்டில் வதியும் அன்னத்தின் தம்பி யோகனின் நண்பனான முகைதீன்.

"அக்கா! எல்லாத்தையும் கேள்விப்பட்டுத்தான் நான் வாறன். அண்ணண்ட அபேசேகர எண்ட பெயர் சிங்களப் பெயர்தானே. அவருக்கு ஆபத்தொண்டும் வராது. அவர் வீட்டப் பாத்துக் கொள்ளட்டும். அம்மாவ நான் எங்கட ஊட்ட கூட்டிப்போய் முஸ்லிம் பகுதிக்குள்ள பாதுகாப்பா வச்சிருக்கன். புறகு நிலமயப் பாத்து நடந்திக்கலாம். நீங்க கனீத்தா, சுதா, சியாம் எல்லாரும் கோமாரிக்குப் போக ஆயத்தப்படுத்திங்க. நான் 'ரவுணு'க்குப் போய் அம்மாவக் கொண்டு போறதிக்கு 'ஓட்டோ' புடிச்சிட்டு வாறன்" என்றான் முகைதீன்.

"என்ன முகைதீன் இது. ஒரு விளக்கமுமில்லாம. என்ன நடந்ததெண்டு விளக்கமாகச் சொல்லுங்களன் தம்பி" என்று அன்னம் அவதியுடன் கேட்க முகைதீனும் நின்ற நிலையிலேயே அவசரம் அவசரமாகக் கதையைச் சொல்லி முடித்தான்.

முகைதீன் கொடுத்த விளக்கம் இதுதான்.

1987 யூலை 29 ஆம் திகதி கொழும்பில் இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பு இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒப்பந்த அமுலாக்கலுக்காக நிலைகொண்டிருந்த இந்திய அமைதிகாக்கும் படையினர் 1990 மார்ச் மாதம் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டிருந்தனர்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசவுடன் கூட்டுவைத்து இந்திய அமைதிகாக்கும் படையினருக்கு எதிராக 1987 ஒக்டோபர் மாதத்திலிருந்தே யுத்தம் புரிந்துகொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இந்திய அமைதி காக்கும் படையினர் வெளியேறிய கையுடன் ஊருக்குள் சுதந்திரமாகப் பிரவேசித்து நடமாடத் தொடங்கியிருந்தனர். பிரேமதாச அரசாங்கமும் அதற்கு ஆதரவாகவே நடந்துகொண்டது.

1990 யூன் மாதம் 10 ஆம் திகதி மட்டக்களப்பு அகதிமுகாம் ஒன்றிலிருந்த முஸ்லிம் இளைஞரொருவர் சிங்களவர் ஒருவரினால் தாக்கப்பட்டபோது அகதிமுகாமில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த சிங்களப் பொலிஸார் இருவரையும் கைதுசெய்து மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக ஒப்படைத்தனர். இச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டுப் 'பொலிஸ்' நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த முஸ்லிம் இளைஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளுக்குச் சீருடைகள் தைக்கும் 'ரெயிலர்' ஆவார். இதனைத் தொடர்ந்து அன்றிரவு சுமார் 11.00 மணியளவில் பொலிஸ் நிலையத்துக்கு வருகைதந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுததாரிகள் மேற்படி முஸ்லிம் இளைஞரை விடுதலை செய்யும்படி கோரினர். மேற்படி முஸ்லிம் இளைஞர் சிறு காயங்களுக்கு உள்ளாகியிருப்பதால் அவரை வைத்தியசாலைக்கு அனுப்பியுள்ளதாகப் பொலிஸ்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அப்போது மேற்படி முஸ்லீம் இளைஞர் வைத்தியசாலையில் இல்லையெனத் தெரிவித்த புலிஉறுப்பினர்கள் அங்கிருந்த இரண்டு பொலிஸ்காரரைப் பணயமாக கடத்திச் சென்றனர். மறுநாள் அதிகாலை ஆறு மணியளவில் பொலிஸ் நிலையத்தை நோக்கி வீதியால் சென்றுகொண்டிருந்த மேலும் நான்கு பொலிஸார் புலிகளால் கடத்தப்பட்டதுடன் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் இளைஞரை விடுதலை செய்யும்படி பொலிஸ் நிலைய உயரதிகாரிகளிடம் புலிகள் நிபந்தனை விதித்தனர். முஸ்லீம் இளைஞர் வைத்தியசாலையில் சிகிச்சையிலுள்ளாரென்றே பொலிஸ்தரப்பால் மீண்டும் தெரிவிக்கப்பட்டது. அதை மறுத்த புலிகள் மீண்டும் மறுநாள் சுமார் 250 ஆயுததாரிகளுடன் வந்து காலை மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தைச் சுற்றிவளைத்தனர். இதனால் இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸாருக்கும் புலிகளுக்குமிடையே மீண்டும் மோதல் ஆரம்பமாகிவிட்டிருந்தது. அதன் விளைவுதான் இன்று (12.06.1990) பொத்துவில் பொலிஸ் நிலையத்தைப் புலிகள் முற்றுகையிட்டுப் பொலிஸாரைப் பஸ்ஸொன்றில் ஏற்றிக்கொண்டு வெளியில் எங்கோ கொண்டுபோய்விட்டனர்.

முகைதீன் நடந்த கதையைச் சொல்லிமுடித்ததும், இனியொன்றும் தாமதிக்க முடியாதென்பதை அன்னம் உணர்ந்ததால் முகைதீன் கூறிய ஆலோசனைகளின் படியே அத்தனையும் அவசரம் அவசரமாக நடந்தேறின. அன்னத்தின் கணவர் அபேசேகர மட்டும் வீட்டில் தங்கியிருக்க வீட்டிலிருந்த ஏனையோர்கள் அனைவரும் வெளிச் சென்றுவிட்டனர்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் கரையோரமாக அமைந்த தென்கோடிக் கிராமம்தான் பொத்துவில். இவ்வூரில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவும் கணிசமான எண்ணிக்கையில் தமிழர்களும் மற்றும் சிறியதொகைச் சிங்களவர்களும் சிறுபான்மையாகவும் வாழ்ந்துகொண்டிருந்தனர். கோமாரி பொத்துவிலுக்கு வடக்கே பதினாறு கிலோமீற்றர் தூரத்திலுள்ள தனித் தமிழ்க் கரையோரக் கிராமமாகும்.

இரவு 7.00 மணியிருக்கும் பொத்துவில் முஸ்லீம் பகுதியிலமைந்திருந்த பள்ளிவாசல் ஒலிபெருக்கி பின்வருமாறு அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அன்பான முஸ்லீம் பொதுமக்களே! இன்று காலை பொத்துவில் பொலிஸ் நிலையத்தைச் சுற்றி முற்றுகையிட்டு அங்கிருந்த சிங்கள, முஸ்லீம் பொலிஸ்காரரைப் 'பஸ்'ஸில் ஏற்றிக்கொண்டு சென்ற புலிகள் இயக்கத்தினர் அவர்களெல்லோரையும் றூபஸ்குளம் காட்டுக்குள்ளே கொண்டு போய்ச் சுட்டுக் கொன்றுபோட்டார்களாமென்ற செய்திவந்துள்ளதால் பொத்துவிலூர் பீதியில் உறைந்து போயுள்ளது. நமது சகோதர தமிழ்ச் சனங்களெல்லாம் இடம்பெயர்ந்து கோமாரிக்குப் போய்க்கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் முஸ்லீம்களுடைய வீட்டில் எந்தத் தமிழருக்கும் அடைக்கலம் கொடுக்கக்கூடாது என அரச ஆயுதப்படையினர் பள்ளிவாசல் நிர்வாகத்திற்கு அறிவித்துள்ளனர். அதன் காரணமாக முஸ்லீம் பகுதிக்குள் எந்தத் தமிழருக்கும் அடைக்கலம் கொடுக்கவேண்டாமென்று அறிவுறுத்துகின்றோம். இந்த அறிவித்தலை அசட்டை செய்யாது கடுமையாகக் கடைப்பிடிக்கவும். இப்படிக்கு பொத்துவில் பெரிய ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகம்.'

பள்ளிவாசல் ஒலிபெருக்கி அறிவித்தலைக் காதில் வாங்கிக்கொண்ட முகைதீன் என்ன செய்வதென அறியாது தலைகுழம்பினான். லண்டனில் வதியும் தனது ஆத்ம நண்பன் யோகனின் நோயாளித் தாயாரைத் தனது வீட்டில் தொடர்ந்து மறைத்து வைத்திருப்பதா? அல்லது பள்ளிவாசல் நிர்வாகத்தின் அறிவுறுத்தலைக் கேட்டு நடப்பதா? என்று தலையைப் பிய்க்கத் தொடங்கினான்.

சேனைப் பயிர்ச்செய்கைக்காகக் காட்டை வெட்டிக் காயப்போட்டு நன்றாக வெயிலில் காய்ந்த பின் காற்றுவழத்தைப் பார்த்து ஒருபக்கத்தில் நெருப்புவைத்தால் 'புஸ்' என்று முழுவதும் பற்றியெரியும் வேகத்தில் பொத்துவில் பள்ளிவாசல் ஒலிபெருக்கி அறிவித்தல் செய்தி, காட்டுத்தீயாய்க் கோமாரிவரை பரவிற்று.

எந்த தீர்மானத்திற்கும் முகைதீனால் வரமுடியவில்லை. அரைமணிநேரம் தாண்டியிருக்கும். தனது நண்பன் யோகனின் அக்கா அன்னத்தின் மகன்-சுனீத்தாவின் தம்பி- சியாமின் அண்ணன்- நண்பன் யோகனின் மருமகன் சுதா வீட்டினுள் நுழைந்தான் அவசரமாக

"என்ன சுதா. திடீரென்று...!" என்று பீதியுடன் கேட்டான் முகைதீன்.

"முகைதீன் அங்கிள்! எல்லாம் கேள்விப்பட்டுத்தான் வாறன். அம்மம்மாவ உங்கட வீட்டில வைச்சிருக்க நீங்க முன்வந்ததே பெரியகாரியம். நீங்க ஒண்டும் யோசியாதீங்க. உங்கள நாங்க பிழையா நினைக்கல்ல. எங்களால உங்களுக்கும் ஒரு பிரச்சின வரப்படாது. அம்மம்மாவ நான் கோமாரிக்குக் கொண்டு போறன்" - சுதா தான் வந்த நோக்கத்தைத் தெளிவுபடுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரே அல்லோலகல்லோலப்படும் அந்த நேரத்தில் கூலிக்கு வாகனம் பிடிப்பதும் கஸ்டம். மட்டுமல்லாமல் பெரிய வாகனங்களேதும் தன் வீட்டிற்குமுன் வந்துநின்று நண்பன் யோகனின் தாயை ஏற்றிச்சென்றால் அது பகிரங்கமாகிவிடும். நடந்தது ஒருத்தருக்கும் தெரியவும் கூடாது. 'நோண்டி' யாகாமலிருக்க வேண்டும். முஸ்லிம் பொலிஸ்மாரும் புலிகளால் கொல்லப்பட்டுள்ளதால் அடுத்து என்ன நடக்குமோ தெரியாது. முஸ்லிம்கள் தமிழர்கள் மீது ஆத்திரம் கொள்ளும் சூழ்நிலை வேறு.

இவ்வாறு சிந்தித்த முகைதீன் தன் வீட்டின் அறையொன்றுக்குள் சென்று தலையணையொன்றைக் கொணர்ந்து சுதாவிடம் நீட்டித் தனது சைக்கிளையும் கொடுத்து அம்மம்மாவைச் சைக்கிளில் இருத்திக் கொண்டுசெல்லும்படி கூறினான்.

ஒருபக்கப் பாரிசவாத நோயினால் பாதிப்புற்று நடக்க முடியாமலிருந்த தனது எழுபத்தியிரண்டுவயது அம்மம்மாவைச் சைக்கிள் 'பார்" இன் குறுக்காக வைக்கப்பட்டிருந்த தலையணையில் அமர்த்தி அவ கால்களைத் தொங்கப்போட்டுக் கொண்டிருக்கச் சைக்கிள் 'ஹான்டில்'லைப் பிடித்திருந்த தனது இரு கைகளுக்குமிடையில் அவவின் மேலுடம்பு முழுவதையும் சிறைப்படுத்தியவனாக இருபது வயதே நிரம்பிய சுதா அந்த இரவுநேரத்தில் ஒரு உத்வேகத்துடன் கோமாரியை நோக்கிச் செல்வதற்காகச் சைக்கிள் 'பெடல்'களை ஊன்றி உழக்கத்தொடங்கினான். முகைதீனின் கவலைதோய்ந்த முகம் சுதாவை வழியனுப்பி வைத்தது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு நகரில் திருமலை வீதியில் சின்ன ஆஸ்பத்திரி என அழைக்கப்படும் 'பஸ்' தரிப்பிடத்தில் நின்றிருந்தேன் நான். இந்த இடத்தை 'பொலீஸ் ஸ்டேஷன் ரவுண்டபவுட்' என்றும் கூறுவர்.

திருமலையிலிருந்து மட்டக்களப்புக்கு பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருக்கும் எனது நண்பனை அழைத்துச் செல்வதற்காகவே நான் வந்திருந்தேன். மட்டக்களப்பு சின்ன ஆஸ்பத்திரிச் சந்தித் தரிப்பிடத்தில் இறங்குமாறுதான் எனது நண்பனுக்குக் கூறியிருந்தேன்.

நான் பஸ்த்தரிப்பை வந்தடையும் போது ஓர் இளம்பெண்ணும்- சுடிதார் அணிந்திருந்தாள்-வயது முப்பத்தைந்துக்கு மேற்படாமல் இருக்கும்- சற்றுச் சோகம் அப்பிய முகத்திலும் அவளது இயல்பான இளமை அழகு எட்டிப்பார்த்தது-நின்றிருந்தாள்.

சுமார் முக்கால் மணித்தியாலம் நான் காத்திருந்திருப்பேன். அவள் எந்தப் பஸ்ஸிலும் ஏறாமல் வருகிற பஸ் எல்லாம் போக விட்டுப் பார்த்திருந்தாள். அடிக்கடி என் பக்கம் அவள் பார்வை படர்ந்தது. அது தற்செயலானதுதான் என எடுத்துக் கொண்டு வருகிற 'பஸ்'ஸையெல்லாம் என் நண்பன் வந்து இறங்குகிறானா என நோட்டமிடுவதிலேயே என் கவனம் குவிந்திருந்தது.

சடுதியாக எனக்குக் கிட்டே வந்து அவள் என்னைப் பார்த்து "இங்க மட்டக்களப்புப் பெரியாஸ்பத்திரிக்குப் போறதுக்குப் பஸ் வருமா?" என்றாள்.

"இல்ல. பெரியாஸ்பத்திரிக்குப் போறதெண்டா 'பஸ் ஸ்டாண்டு'க்குப் போய்த்தான் பஸ் எடுக்கவேணும்" என்று பதிலிறுத்தேன்.

தொடர்ந்து "எங்கிருந்து வாறீங்க?" என்று பவ்வியமாகக் கேட்டேன்.

"வாகரயிலிருந்து வந்தனான். அம்மா பெரியாஸ்பத்திரியில 'வாட்'டில இரிக்கா. அவவப் பாத்திட்டு வெருகலுக்குப் போற கடசிப் பஸ் ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கு. அதில நான் திரும்ப வேணும் புள்ளையள் தனிய" என்றாள்.

கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். மணி மாலை ஐந்தை அண்மித்துக்கொண்டிருந்தது.

நேர அவகாசத்தின் போதாமையைப் புரிந்து கொண்ட நான்,

"இஞ்சரிந்து பஸ் ஸ்டாண்டுக்குப் போனாலும் உடன ஆஸ்பத்திரிக்குப் போற பஸ் இரிக்காது. காத்திருக்கத்தான் வேண்டிவரும். அப்படியெண்டா அம்மாவப் பாத்தித்து நீங்க சொல்ற வெருகல் பஸ்சப் புடிக்க ஆறு மணிக்கிடயில 'பஸ் ஸ்டாண்டு'க்குத் திரும்புறது கஷ்டம். இஞ்சரிந்து 'ஓட்டோ' ஒண்டப் புடிச்சி நேரா ஆஸ்பத்திரிக்குப் போனாத்தான் அம்மாவப் பாத்தித்து ஆறு மணிக்குள்ள 'பஸ்டாண்'டுக்குத் திரும்பலாம்" என ஆலோசனை வழங்கினேன்.

தனது நெற்றியை நிமிர்த்தி ஒரு கணம் சிந்தித்தவள் "இஞ்சரிந்து ஆஸ்பத்திரிக்குப் போக ஓட்டோவுக்கு எவ்வளவு எடுப்பாங்க?" என்றாள்.

"ஒரு நூறு அல்லது நூற்றைம்பது ரூபா வரும்" என்றேன்.

"அப்படியா" என்றவள் பேசாமல் திரும்பி நின்றாள்.

பஸ் தரிப்பிடத்திற்குப் பக்கத்திலேயே 'ஓட்டோ ஸ்டாண்ட்'டும் இருந்தது. நாலைந்து ஓட்டோக்கள் சவாரியை எதிர்பார்த்து வரிசையாக நின்றிருந்தன.

அவள் பேசாமல் நிற்பதைப் பார்த்துவிட்டு அருகே சென்று "ஓட்டோ புடிக்கக் காசில்லயா?" என்றேன்.

என்னை நிமிர்ந்து பார்த்த அவள் ஒருவித சங்கோஜத்துடன் 'ஆம்' என்று அர்த்தப்படத் தலையை மெதுவாக அசைத்தாள்.

நிலைமையைப் புரிந்து கொண்ட நான் எனது 'சேட் பொக்கற்று'க்குள் கைவிட்டு இரண்டு நூறு ரூபாய்த் தாள்களை எடுத்து வலது கையால் கொடுப்பது இடது கைக்குத் தெரியக்கூடாது என்பார்களே, அதனால்- பஸ் தரிப்பிடத்தில் நின்றிருந்த மற்ற ஆட்கள் பார்க்காதபடி மெல்ல மடித்து அவளிடம் நெருங்கி நீட்டினேன்.

"வேண்டாம்!" என்பது போல் தலையை அசைத்தாள்.

என்னிடம் இருந்த காசைக் கை நீட்டிப் பெற்றுக் கொள்ள மனம் சங்கடப்படுகிறாள் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

நான் முன்பின் தெரியாத ஓர் ஆண்மகன். அவளோ அழகிய தோற்றமுடைய இளம்பெண். என்ன நோக்கத்துடன் நான் பணம் கொடுக்கிறேன் என்றும் அவளுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

அவளது பெண் மனதையும் தற்காப்பு உணர்ச்சியையும் புரிந்துகொண்ட நான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன தங்கச்சி நேரம் போகுது. சுணங்காம ஓட்டோவப் புடிச்சித்து ஆஸ்பத்திரிக்குப் போங்க. ஒண்டும் யோசிக்க வேணாம். அங்க புள்ளயள் தனியெண்டு வேற சொல்றயள்" என்று கூறி கூடியவரை மற்றவர்கள் எவரும் பார்க்காதபடி மடித்த தாள்களை அவளது கையில் திணித்து விட்டு விலகி நின்று வேறு பக்கம் என் கவனத்தை வேண்டுமென்று திருப்பினேன்.

அவள் 'ஓட்டோ'வொன்றை வாடகைபேசி அமர்த்திக்கொண்டு புறப்பட்டுப் போவதை ஓரக்கண்ணால் அவதானித்தேன்.

அவள் புறப்பட்டுச் சென்று சில நிமிடங்கள் ஓடியிருக்கும். பக்கத்தில் நின்றிருந்த நடுத்தர வயதுப் பயணி ஒருவன்- கச்சிதமாக உடை அணிந்திருந்தான்-என்னை அணுகி மெல்லிய குரலில் நமட்டுச் சிரிப்புடன் "எந்த ஊராம் ஐயா?" என்றான்.

அவன் எல்லாவற்றையும் இவ்வளவு நேரமும் கவனித்துக் கொண்டிருந்திருக்கிறான் என எனக்குப்பட்டது.

அவனுடைய கேள்விக்கு வாய் திறந்து பதில் சொல்ல விரும்பாமல் உடல்மொழியால் "ஏன்?" என்றேன்.

"நல்ல சரக்கையா. கெட்டித்தனமாக அமத்திப்போட்டிங்க. பின்னால போகோணுமென்டா ஏறுங்க!" என்று கூறிச் சற்றுத் தூரத்தில் 'பார்க்' பண்ணியிருந்த அவனது அழகான காரைக் காட்டினான்.

அவன் சொல்லி முடித்துத் தனது காரைக் காட்டிய அதே வேகத்திலேயே அவனது கன்னத்தில் 'பளார்' என்று அறைந்தேன்.

பக்கத்தில் நின்றிருந்த பயணிகள் பதற்றத்துடன் விலகினர். அங்கு நின்றிருந்த நான்கைந்து பேர்- அறை வாங்கியவனது அடியாட்களாக இருக்க வேண்டும்- தனது சகபாடி சடுதியாகத் தாக்கப்பட்ட ஆத்திரத்தில் கைகளை ஓங்கிக்கொண்டு என்னைச் சூழ்ந்தனர். அதேவேளை, பக்கத்தில் நின்றிருந்த என்னைத் தெரிந்தவர்கள் என்னமோ? ஏதோ! என்று தெரியாமல் என்னைப் பாதுகாக்கத் தடுப்பு வேலியாக அவர்களும் கூடிவிட்டனர்.

ஆத்திரத்தோடு என்னைச் சூழ்ந்தவனுகள் சற்றுப் பின்வாங்கி அமைதியாகினர். அதில் ஒருவன் என்னைப் பார்த்து சற்றுக் குரலை உயர்த்தி "ஏனய்யா அவன அறஞ்சநீங்க?" என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

"அதப்போய் அவனிட்டயே கேளு?" எனப் பதிலளித்துவிட்டு "ராஸ்கல்ஸ்" என்று கூறி உதட்டை மடித்து நான் பல்லைக்கடிப்பதற்கும் திருகோணமலையிலிருந்து மட்டக்களப்புக்குப் பயணித்த-நான் காத்திருந்த-எனது நண்பன் 'பஸ்' ஸொன்றில் வந்து என்னைக் கண்டு கையசைத்துக்கொண்டே 'பஸ்' தரிப்பில் இறங்குவதற்கும் நேர இடைவெளி இருக்கவில்லை. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘வியன்’

பிள்ளைகள் நான்கும் வீட்டின் உள் அறையினுள்ளே நித்திரையில் ஆழ்ந்திருக்கக் கனகம் மட்டும் வீட்டு மண்டபத்தின் முன் கதவின் வாயிற்படியில் அமர்ந்து கதவுநிலையில் சாய்ந்த வண்ணம் அரைத்தூக்கத்தில் அயர்ந்திருந்தாள்.

கனகத்தின் குடிக்காரக் கணவன் வழமையாகத் தினமும் இரவு வெகுநேரமாகித்தான் திரும்புவதெனினும் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குள்ளே எப்படியும் வீடுவந்து சேர்ந்துவிடுவான். அன்று நள்ளிரவு பன்னிரண்டு மணியைத் தாண்டியும் அவளது கணவன் தம்பிராசா வீடுவந்து சேரவில்லை.

என்னதான் குடிகாரக் கணவனென்றாலும் தம்பிராசா வெளியே சென்று இரவு எந்நேரம் வீட்டுக்குவந்தாலும் அவனுக்காகக் காத்திருந்து அவனுக்கு இரவுச்சாப்பாடு கொடுத்துத் தானுமுண்டு அவனைப் பக்குவமாகப் படுக்கைக்கு அனுப்பியபின்புதான் பிள்ளைகளுடன் சேர்ந்து உறங்கப் போவாள். கணவனுக்கு அன்பாகப் பணிவிடைசெய்யும் அத்தகையதொரு தாம்பத்திய வாழ்வில் தனிச்சுகம் கண்டவள் கனகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைத்தூக்கத்திலிருந்து சடுதியாக விழித்த கனகம் நேரம் நள்ளிரவு பன்னிரண்டு மணியைத் தாண்டியும் கணவன் வரவில்லையேயென்று பதற்றமடைந்தாள். அந்தப் பதற்றத்தில் பசியும் தூக்கமும் அவளிடமிருந்து பறந்தோடின.

கணவன் இன்னும் வீடுதிரும்பவில்லையே. என்னநடந்ததோ ஏது நடந்ததோ என்று ஏக்கமடைத்த கனகம் பக்கத்துவீட்டில் வதியும் தனது மூத்தமகளின் கணவன் - மருமகன் சுந்தரத்தை எழுப்பிப் பிரதானவீதிக்குத் தேடிச்சென்று பார்ப்போமா என்ற யோசனையிலும் ஆழ்ந்தாள். அந்த யோசனையில் 'அரிக்கன் லாம்பைக் கொளுத்தி எடுத்தாள்.

பொத்துவில் 'பஸ்'நிலையத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள வேதக் கோயிலுக்கு எதிரே இடப்பக்கம் செல்லும் 'கிறவல்றோட்டில் பிரதானவீதியிலிருந்து 'கிறவல்றோட்' பிரியும் சந்தியிலிருந்து சுமார் இருநூறு யார் தூரத்தில்தான் தம்பிராசாவின் வீடு இருந்தது.

பொத்துவில் 'பஸ்'நிலையம் ஒரு கேந்திர முக்கியத்துவம் மிக்கதாகும். இக் கதை நிகழும் காலத்தில் பொத்துவில் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் கோடிக் கிராமமாயிருந்தது. 'பாணமை' பொத்துவிலுக்குத் தெற்கே பத்து மைல் தூரத்தில் அமைந்திருந்த பொத்துவிலைப் போன்றதொரு கரையோரக் கிராமமாகும்.

பொத்துவிலிருந்து மேற்கே நாற்பத்தி மூன்று மைல் தூரத்தில் அமைந்த 'மொனராகல எனும் இடத்திற்குச் செல்லும் பிரதானவீதியும் பொத்துவிலிலிருந்தே புறப்பட்டது.

அதனாலும்தான் பொத்துவில் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இடமாயிற்று. இக்கதை நிகழ்ந்த காலத்தில் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 'மொனராகல' ஊரை 'முப்பனை' என்று அழைப்பார்கள். அக்காலத்தில் மட்டக்களப்பைப் 'புளியந்தீவு'என அழைத்ததைப்போல.

அப்போது 'அம்பாறை மாவட்டம்' என்றொரு நிருவாக மாவட்டம் உருவாகியிருக்கவில்லை. தற்போதைய அம்பாறைமாவட்டம் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தினுள் அடங்கி அதன் தென்பகுதியாக இருந்தது.

அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதி துண்டாடப்பெற்று 1962 இல் 'அம்பாறை' என்றொரு புதிய தனியான நிருவாகமாவட்டமாக உருவாக்கப்படும்வரை தற்போதைய அம்பாறைமாவட்டமும் மட்டக்களப்புமாவட்டமும் இணைந்த நிலப்பரப்பே அப்போதைய 'மட்டக்களப்பு' நிருவாக மாவட்டமாக இருந்தது. இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைகள் வடக்கே வெருகல்ஆறு, தெற்கே குமுக்கன் ஆறு, கிழக்கே வங்காள விரிகுடாக்கடல், மேற்கே இலங்கையின் வடமத்திய, மத்திய மற்றும் ஊவாமாகாண எல்லைக்கோடுகள் ஆகும். 'மொனராகல' ஊவாமாகாணத்தில் அமைந்திருந்தது.

பொத்துவில் 'பஸ்' நிலையத்திலிருந்து அக்காலத்தில் வடக்கே அக்கரைப்பற்று, கல்முனை, மட்டக்களப்புக்கு இலங்கைப் போக்குவரத்துச்சபை (இ.போ.ச)யின் 'பஸ்' சேவைகளிருந்தது போலவே தெற்கே பாணமைக்கும் மேற்கே ஊவாமாகாணத்தில் இருந்த மொனராகல மற்றும் பதுளை போன்ற இடங்களுக்கும் நேரடி 'பஸ்'சேவை இருந்தது.

கனகத்தின் கணவன் தம்பிராசா குடிகாரனென்றாலும் நல்ல உழைப்பாளி. பெரிதாகச் செல்வம் சேர்க்காவிட்டாலும் தட்டுப்பாடில்லாத சராசரிக் குடும்பவாழ்க்கை அவனுடையது. மனைவிமக்களை அன்பாகவே நடத்தினான் .தம்பிராசா தர்மசிந்தனையும் பிறருக்கு உதவும் குணமும் படைத்தவன். குடிகாரனென்றாலும்கூட மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்துக் குடிப்பவனே தவிர மற்றவர்களிடம் வாங்கி ஒரு நாளும் குடிக்கமாட்டான்.

பொத்துவில் 'பஸ்' நிலயத்திலோ அல்லது கடைகள் அமைத்த பிரதானவீதியிலோமின்சாரவிளக்குகளோஅல்லதுவேறுதெருவிளக்குகளோ இல்லாத காலம். பொத்துவிலிருந்து 'பாணமை' ஊருக்குச் செல்வதாயின் பொத்துவிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் 'அறுகம்பைக் களப்பு வாவி வங்காள விரிகுடாக் கடலோடுகலக்கும் - 'அறுகம்பை' எனும் இடத்தில் உப்புநீரேரியைக் கடக்கும் துறை இருந்தது. 'பாதை' என அழைக்கப்பெற்ற. இயந்திரம் சேவையிலிருந்தது. இப் 'பாதை' இயந்திரம் மரத்தினாலும்,இரும்பு இணைப்புகளினாலும் செய்யப்பட்ட தட்டையான நீரில் பயணிக்ககூடிய படகு போன்றதாகும்.இதில் வாகனங்களும் மக்களும் ஏறி நின்று பயணிக்கலாம். இப் பாதையில் பயணம் செய்துதான் ஏரியை - வாவியைக் கடக்கவேண்டும். இப் 'பாதை'ச் சேவை மாலை ஆறுமணிக்குப் பின்னர் நடைபெறமாட்டாது. பொத்துவிலிருந்து பாணமைக்கோ - மட்டக்களப்புக்கோ - மொனராகல மற்றும் பதுளைக்கோ செல்லும் 'பஸ்' மாலை ஆறுமணிக்குத்தான் கடைசியாகப் புறப்பட்டுச் செல்லும். அதன்பின்பு இந்த இடங்களுக்குச் செல்ல அடுத்தநாள் அதிகாலைதான் 'பஸ்' சேவை உண்டு.

ஆகவே பாணமைக்கு அல்லது மட்டக்களப்பை நோக்கி அல்லது மொனராகல மற்றும் பதுளைக்குச் செல்லவரும் அயலூர்க்காரர்கள் எவரும் இந்த ஆறு மணிக் கடைசி 'பஸ்'சைத் தவறவிட்டால் அவர்கள் எல்லோருமே பொத்துவில் 'பஸ்' நிலையத்தில் இருட்டிலே அங்கே படுத்துறங்கும் கட்டாக்காலி மாடுகளுடனும் தெருநாய்களுடனும்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தநாள் அதிகாலைவரை தங்கவேண்டியிருக்கும். பஸ் நிலையத்தில் சாப்பாட்டுக்கடைகளும் இரவு நேரத்தில் பெரிதாகக் திறத்திருக்கமாட்டாது.

இப்படிக் கடைசி 'பஸ்'சைத் தவறவிட்டு அந்தரித்து நிற்கும் அயலூர்ப் பயணிகளைப் பொத்துவில் 'பஸ்' நிலையத்திலிருந்து தனது வீட்டிற்குக் கூட்டிவந்து அந்த இரவு நேரத்திலும் கனகத்தை சமைக்கச் சொல்லி எல்லோருக்கும் இரவுச் சாப்பாடும் பரிமாறி தூக்கம் கொள்வதற்கு இடமும் அளித்து அதிகாலை தேனீரும் கொடுத்து மறுநாள் எல்லோரையும் பாதுகாப்பாக வழியனுப்பிவைக்கும் வழக்கத்தையும் தம்பிராசா கொண்டிருந்தான்.

இதனால் `அரிக்கன் லாம்பை'க் கொளுத்திக் கையிலெடுத்த கனகம் ஒரு கணம் நின்று தன் கணவன் தம்பிராசா இப்படிப் 'பஸ்' நிலையத்தில் அந்தரித்துநிற்கும் பயணிகளை வீட்டுக்குக் கூட்டிவரும் விடயமாக 'மினக்கெடுகிறானோ' என்று எண்ணியவள், எதற்கும் மருமகனை எழுப்புவோம் என்ற எண்ணத்தில் தனது மூத்தமகள் வதியும் பக்கத்து வீட்டு வேலியோரம் போய் நின்று "புள்ள !புள்ளே!" என்று குரல் கொடுத்தாள்.

அந்த நேரத்தில் அவளது வீட்டு வளர்ப்பு நாய் 'லயன்' பாய்ந்தோடிவந்து மெலிதாக முனகியபடி கனகத்தின் சேலைத்தொங்கலைக் கவ்வி இழுத்தது. 'லயன்' னைக் கண்டதும் கனகம் மகிழ்ச்சியடைந்தாள். அதற்குக் காரணமுமிருந்தது.

அவளது வீட்டுவளர்ப்பு நாயான 'லயன்' இரவு எந்நேரமென்றாலும் பொத்துவில்- மட்டக்களப்பு பிரதான வீதியிலிருந்து தங்கள் வீட்டிற்கு வரும் 'கிறவல் றோட்' பிரியும் சந்தியில் தனது எஜமான் தம்பிராசா வரும்வரை காவல்நின்று காத்திருந்து அவனைக் கூட்டிக்கொண்டுதான் வீடுவரும்.

கனகம் 'லயன்' னைக் கண்டதும் தனது கணவன் வந்துவிட்டானென்றுதான் எண்ணிச் சந்தோஷப்பட்டாள்.

மறுகணம் நாய் தனியேதான் வந்துள்ளது. கணவனைக் காணோமே என்று கலவரப்பட்டாள். 'லயன்' கனகத்தை சுற்றி சுற்றி வந்து மெலிதாக முனகியபடி அவளது சீலையைக் கவ்விக்கவ்வி வீதியைநோக்கி இழுத்தது.

கணவனுக்கு ஏதோ நடந்துவிட்டது என்பதை நாயின் உடல் மொழியிலிருந்து உணர்ந்து கொண்ட கனகம் சற்றும் தாமதியாமல் மூத்தமகள் மற்றும் மருமகன் உடன்வரக் கையில் 'அரிக்கன்லாம்பு' டன், 'லயன்' முன்னுக்குச் செல்ல பின்னே வேகமாகப் பிரதான வீதியை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

சந்தியை அண்மிக்கும்போது இடதுபக்கத்தில் மட்டக்களப்புப் பக்கமிருந்து பொத்துவில் 'பஸ்' நிலையத்தை நோக்கிப் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனமொன்று வெளிச்சம் பாய்ச்சிக்கொண்டு வேகமாக இரைந்து வருவது தெரிந்தது.

அடுத்தகணம், முன்னே சென்று கொண்டிருந்த 'லயன்' சடுதியாக மிக வேகமாக ஓடிச்சென்று சந்தியில் வீதிக்குக் குறுக்கே பாய்ந்தது.

சடுதியாக 'பிறேக்' போட்ட வாகனம் 'கிரீச்' என்ற சத்தத்துடன் குலுங்கி நின்றது.

வாகனத்தின் முன் வெளிச்சத்தில் கனகம் கண்ட காட்சி!

"ஐயோ! கடவுளே!" என்று கனகம் தன் தலையில் அடித்துக்கொண்டு அலறிய சத்தம் அந்த நடுநிசி அமைதியைக் கிழித்துக் கொண்டு மேலெழுந்தது.


சந்தியில் வீதியின் குறுக்கே நடுவில் தம்பிராசா தலைகுப்புறக் கிடந்ததைக் கண்டுதான் கனகம் அவ்வாறு தலையில் அடித்துக் கொண்டு அலறினாள். தம்பிராசாவுக்குத் தள்ளி வீதியின் ஓரத்தில் அந்த வாகனத்தின் பக்கத்தில் இரண்டு மூன்று அடி தள்ளி முன்சில்லின் அடியில் தலை நசுங்கி இரத்தவெள்ளத்தில் கிடந்தது 'லயன்'.

தலையில் அடித்துக்கொண்டு அலறிய கனகத்தை மூத்தமகள் கட்டி அணைத்துப் பிடித்துக்கொண்டிருக்க மருமகன் சுந்தரம் சொன்னான்,

"மாமி! ஆண்டவனே எண்டு மாமாவுக்கு ஒண்டும் நடக்கல்ல. அவர் குடி வெறியிலதான் மயங்கி விழுந்து கிடக்கார். மாமாவக் காப்பாத்த 'லயன்' தான் குறுக்க பாய்ஞ்சி 'லொறி'ற முன்பக்க 'ரயர்' தலையில் ஏறிச் செத்துப் போய்த்து."

நடந்ததை அறிந்த கனகம் செத்துக்கிடந்த 'லயனை' நன்றியோடு நோக்கி அழுதாள். அதேவேளை என்னதான் குடிகாரனாக இருந்தாலும் தன் கணவன் தம்பிராசா செய்த தருமம் தன் தாலியைக் காப்பாற்றிற்று என்ற எண்ணப்பொறி ஒரு மின்னலைப்போல அவளது தலைக்குள்ளே வெட்டி மறைந்தது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முதல் நாளிரவு எனக்கு நேர்ந்த அனுபவத்தை அடுத்தநாள் எனது அலுவலகநண்பர் கால்டீனுக்குக்கூறியபோது, நான் கூறியவிடயத்தை நன்கு செவிமடுத்த அவர் இறுதியில் "கோபால்! நீங்கள் ஒரு எழுத்தாளர்தானே. உங்கள் நேற்றைய இரவு அனுபவத்தை ஒரு சிறுகதையாக எழுதிப் பத்திரிகைக்கு அனுப்பிவையுங்கள். இந்த அனுபவத்தைப் பலருடன் பகிர்ந்து கொண்டதாயிருக்கும்" என்றார்.

நானும் நண்பர் கால்டீனும் இலங்கை ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பின்கீழ் கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவில் தொழில்நுட்ப அலுவலர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தோம்.

நண்பர் கால்டீன் தந்த `ஐடியா´ மண்டைக்குள்ளே புகுந்து வண்டாகக் குடைந்துகொண்டேயிருந்தது. முதல்நாளிரவு எனக்கு நேர்ந்த அந்த அனுபவத்தைச் சிறுகதையாக்கும் முயற்சி மறுநாளிரவு எனக்குச் சித்தித்தது.

சிறுகதையை இப்படித்தான் ஆரம்பித்தேன்.

கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்ப உத்தியோகத்தராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நான் கோமாரிப் பிரிவுக்குப் பொறுப்பாயிருந்தேன்.

கல்முனைக்குத் தெற்கே கோமாரிக்கும் பொத்துவிலுக்குமிடையில் கொழும்பு - இரட்மலான-வெல்லவாய-மட்டக்களப்பு வீதியின் 330ஆவது மற்றும் 331ஆவது கிலோ மீற்றர் கல்களுக்கு இடையில் முருங்கந்தனை என்ற இடத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த பாலமொன்றின் நிர்மாணவேலை எனது பொறுப்பிலேயே இருந்தது.

கல்முனை நிறைவேற்றுப்பொறியியலாளர் அலுவலகத்திலிருந்து பாலநிர்மாண வேலைகளுக்குத் தேவையான இரும்புக்கம்பிகளை `டாட்டா' ரக மஞ்சள் நிற `லொறி'யில் ஏற்றிக்கொண்டு முருகந்தனைப் பால வேலைத்தலத்தை அடைய இரவு எட்டு மணியாகிவிட்டது. நானும்சாரதி கதிர்காமத்தம்பி மட்டுமே "லொறி"யில் பயணம் செய்திருந்தோம்.

முருங்கந்தனைப் பால வேலைத்தலத்தில் கொண்டுவந்த இரும்புக் கம்பிகளையெல்லாம் இறக்கி வேலைகள் மேற்பார்வையாளர் சதாசி வத்திடம் பாரம்கொடுத்த பின்னர் பால நிர்மாணவேலைகளுக்கெனக் கட்டப்பட்டிருந்த தற்காலிகக் கொட்டகைக்குள் வைத்து, `கொங்கிரீட்' டினுள்ளே உள்ளீடாக வைக்கப்படும் இரும்புக்கம்பிகளை எப்படி வைப்பதென்று, நீளப்பாட்டில் என்ன அளவுக்கம்பிகள் - அகலப்பாட்டில் என்ன அளவுக்கம்பிகள் - என்ன இடைவெளியில் வைக்கவேண்டும்- எந்த இடத்தில் எப்படி வளைந்திருக்க வேண்டும் கம்பிகளை ஒன்றோடொன்று இணைக்கும்போது எப்படி இணைக்க வேண்டும் என்றெல்லாம் தொழிநுட்ப ஆலோசனைகளை மேற்பார்வையாளர் சதாசிவத்திற்கு விளக்கமாக எடுத்துச் சொல்லி முடிந்தபின் முருங்கந்தனையில் இருந்து கல்முனை நோக்கிப் புறப்பட இரவு பதினொன்றரை மணிக்கு மேலாகிவிட்டது.

முருங்கந்தனையில் இருந்து கல்முனை நோக்கிய எமது பயணத்தில் சங்கமன்கண்டிக் கோவில் கழிந்து இடதுபக்கத்திலுள்ள தாண்டியடிக்குளத்தின் முன்னேயுள்ள பிரதானவீதியின் இறக்கத்தில், ஏனோ தெரியவில்லை? ஓடி வந்து கொண்டிருந்த `லொறி' திடீரென்று `சர்! புர்!' என்ற சத்தத்துடன் நின்றுவிட்டது. "எஞ்சின்" இயங்கவில்லை.

இடமோ வெட்ட வெளித்துண்டு. இருபக்கமும் வயல்பூமி. மனித குடியாட்டங்கள் எதுவும் பிரதான வீதியையொட்டியதாக அருகில் இல்லை. இன்னுமொரு அரை கிலோமீற்றர் தூரம் முன்னேபோனால் ஒரு கடையும்அதைச்சுற்றி ஓரிரு குடியாட்டங்களும் உண்டு.

என்ன செய்வதென்று தெரியவில்லை. நேரம் நள்ளிரவு பன்னிரெண்டு மணி. கும்மிருட்டு. வானத்திலும் நட்சத்திரங்கள் மின்னவில்லை. `தார்' வீதியைப்போல வானமும் "தார்" பூசியதாகக் கறுப்பாகவே தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கும் சாரதி கதிர்காமத்தம்பிக்கும் ஆளையாள் முகம் பார்ப்பதுகூடக் கஸ்டமாய் இருந்தது. அவ்வளவு கும்மிருட்டு.

கதிர்காமத்தம்பி ஆசனத்தை விட்டுக் கீழேயிறங்கி `லொறியின் பொனட்´டைத் திறந்து, தான் சுருட்டுப் பற்றவைத்திருக்கும் நெருப்புப் பெட்டியை எடுத்துக் குச்சியை ஒன்றன்பின் ஒன்றாக உரசித் தொடர் வெளிச்சத்தை உண்டாக்கிக் கொண்டு அந்த வெளிச்சத்தில் சிறிது நேரம் பழுது பார்த்தான். நான் `லொறி´யின் முன்பக்க இடப்புற ஆசனத்தில் அசையாது அமைதியாக அமர்ந்திருந்தேன். `டோர்ச் லைட்´ இருந்திருந்தால் உதவியாயிருந்திருக்குமென மனதுக்குள் நினைத்துக்கொண்டேன். நல்ல காலம் கதிர்காமத்தம்பி சுருட்டுப்பற்றுவது, இல்லாவிட்டால் நெருப்புப் பெட்டியும் இல்லாமல் இருந்திருக்கும்.

சிறிது நேரப் பழுதுபார்க்கும் முயற்சிக்குப் பின் கதிர்காமத்தம்பி சொன்னான், "சேர்! என்ன பிழையெண்டு தெரியிதில்ல. நீங்க லொறிக்குள்ள இரிங்க. நான் முன்னுக்கு நடந்துபோய்த் தாண்டியடிக் கடையடில இரிக்கிற ஒண்டு ரெண்டு பேரக் கூட்டித்து 'டோர்ச்லைட்'டும் எடுத்திட்டு வாறன்".

அந்த நள்ளிரவு நேரத்தில் இருட்டுக்குள் அதுவும் சனநடமாட்டமே இல்லாத இடத்தில் தனித்திருக்க என்மனம் ஒப்பவில்லை.

நான் சொன்னேன். "கதிர்காமத்தம்பி! போறெண்டா நாம ரெண்டுபேரும் போவம். இல்லாட்டி விடியுமட்டும் ரெண்டு பேரும் "லொறி"க்குள்ளேயே இரிப்பம். விடிஞ்சாப் புறகு பாப்பம் என்ன செய்யிறண்டு. ஆளையாள் தனிய உட்டுட்டுப் போறவேலயெல்லாம் வேணாம்".

கதிர்காமத்தம்பிக்கு என் சொல்லைத் தட்ட முடியவில்லை. "அப்படி யெண்டா சேர்! றோட்டுக் கொஞ்சம் முன்னால இறக்கமாகத்தான் இரிக்கி. நான் கதவத் துறந்து வைச்சுக்கொண்டு ஒரு கையால `ஸ்ரியறிங்க´ப் புடிச்சிட்டு மத்தக் கையால `லொறி´யத் தள்ளிறன்.

நீங்க `லொறி´க்குப் பின்னால போய்த் தள்ளுங்க. ஒரு மாதிரித் தாண்டியடிக் கடயடிக்குப் போய்த்தமெண்டாப் புறகு மிச்சத்தப் பாக்கலாம்" என்றான் கதிர்காமத்தம்பி.

கதிர்காமத்தம்பியின் யோசனை எனக்குச் சரியாகப்பட்டது. உடனே நான் `லொறி´யை விட்டுக் கீழிறங்கிப் பின்பக்கம் சென்று இரு கைகளாலும் `லொறி´யைத் தள்ள ஆரம்பித்தேன்.

அப்போது எனக்குப் பக்கத்தில் கறுப்பு நாயொன்று நிற்பதைக் கண்டேன். அந்தக் கும்மிருட்டிலும் அது கறுத்த நாயென்பது எனக்குத் தெரிந்தது.

"அடி.." என்றேன். சுற்றுத் தள்ளிப்போய் நின்றது. மீண்டும் நான் "லொறி"யைத் தள்ளத் தொடங்கிய போது மீண்டும் அந்த நாய் எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் வந்தது. மீண்டும் "அடி.." என்றேன். இப்படி நான் "அடி.." என்று சத்தமிடுவதும்அந்நாய் சற்றுத் தள்ளிப்போய் நிற்பதும் மீண்டும் என்னருகில் வருவதும் நான் மீண்டும் "அடி.." என்பதும் இரண்டு மூன்று தடவைகள் நடந்தன. எனது சத்தத்தைக் கேட்ட கதிர்காமத் தம்பி "என்ன சேர் சத்தம்?" என்றான் .

"ஒரு நாயிராப்பா. திரத்த திரத்த வந்து நிக்கிது" என்றேன்.

"எங்க சேர்" என்று கேட்டுக் கொண்டு என்னருகில் வந்தான்.

"அந்தா நிக்கிது" என்று சொல்லி நாயைக் காட்டினேன்.

கதிர்காமத்தம்பி ஓரிரு நிமிடம் அமைதியாக இருந்து விட்டு "அடி!" என்று சத்தமிட்டு விட்டு "அது ஓடித்து சேர்! நீங்க தள்ளுங்க" என்றான்.

நான் பின்பக்கம் இரு கைகளாலும் `லொறி'யைத் தள்ள முன்பக்கம் கதிர்காமத்தம்பி `ஸ்ரியறிங்'கை ஒரு கையால் பிடித்துக் கொண்டு மறு கையால் `லொறி'யைத் தள்ள `லொறி' நத்தை வேகத்தில் ஊரத் தொடங்கியது.

அப்போது, `லொறி'யின் பின்பக்கம் என்னுடன் சேர்ந்து இன்னும் ஓரிருவர் தள்ளுவதைப் போல ஒரு அசுப்பை உணர்ந்தேன். வயல் மற்றும் சேனைப் பயிர்செய்கைக்குக் காவலுக்குப் போகவந்தவர்கள் அல்லது சற்றுத் தூரத்தில் உள்ள காட்டுக்குள் வேட்டையாடச் செல்பவர்கள் அல்லது வேறு காரணங்களுக்காகக் காட்டுக்குள் சென்று திரும்புபவர்கள் எவராவது தானாகவந்து உதவுகிறார்களாக்கும் என்று நான் நினைத்துக் கொண்டேன். இருட்டில் அவர்களின் முகம் தெரியவில்லையென்றே எடுத்துக் கொண்டேன். ஏனோ தெரியவில்லை. அப்போது எந்த மனப் பயமும் என்னிடம்எழவில்லை. பயம் ஏற்பட்டிருந்தால் `லொறி'யை விட்டுக் கீழே இறங்கியிருக்கவே மாட்டேன்.

`லொறி' முன்னே மெதுவாக உருளத் தொடங்கிச் சிறிது நேரத்தில் எதிர்த்திசையில் மட்டக்களப்பிலிருந்து தெற்கு நோக்கிப் பொத்துவிலுக்குச் செல்லும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான கடைசி `பஸ்' `லொறி'யை அண்மித்ததும் நிறுத்தப்பட்டது. அதிலிருந்து எமது திணைக்களத்தில் பொத்துவில் பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் அபுசாலி இறங்கிவந்து, "என்ன கோபால் பிரச்சினை?" என்றார்.

நான் நடந்தவற்றைச் சொன்னேன். நாய்க் கதையையோ அல்லது அசுப்புக் கதையையோ நான் சொல்லவில்லை. அதைச் சொல்ல வேண்டும்போல் அப்போது எனக்குப் படவுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் அபுசாலி `பஸ்' சாரதியுடன் கதைத்து `பஸ்' பயணிகள் சிலர் இறங்கி `லொறி'யைத் தள்ளிக் கொண்டுபோய்த் தாண்டியடிக் கடைவரை சேர்த்து உதவியபின்தான் பொத்துவில் பயணத்தைத் தொடர்ந்தனர். அதுவரை `பஸ்' சாரதி `பஸ்'ஸை நிற்பாட்டியிருந்தான்.

நானும் கதிர்காமத்தம்பியும் ஆசனத்தில் அமர்ந்திருந்தபடியே அன்றிரவை `லொறி'க்குள்ளேயே கழித்தோம். இருவருக்கும் அன்று சிவராத்திரிதான்.

விடிந்ததும் கதிர்காமத்தம்பியை `லொறி'யுடன் தாண்டியடியிலேயே விட்டுவிட்டு நான் தனியே `பஸ்'ஸில் கல்முனை சென்று அலுவலகம் போய் `மெக்கானிக்' ஒருவரை ஏற்பாடு செய்து சில உதவியாளர்களுடன் எமது திணைக்கள `ஜீப்' வண்டியில் தாண்டியடிக்கு அனுப்பிவிட்டு எனது வழமையான அலுவலக வேலையில் மூழ்கிவிட்டேன்.

பின்னேரம் மூன்றுமணி போல் கதிர்காமத்தம்பி `லொறி'யுடன் அலுவலகம் வந்து சேர்ந்தான். என்னிடம் வந்தவன்.

"சேர்! உங்களிட்ட ஒண்டு கேட்கணும்" என்றான்.

"சரி! கேளு" என்றேன்.

"சேர்! நீங்க இரவு `லொறி'யப் பின்பக்கம்போய்த் தள்ளக்குள்ள வேற ஆரும் சேந்து தள்ளிறாப்போல அசுப்புத் தெரிஞ்சதா?" என்றான்.

எனக்கு ஆச்சரியமாகவிருந்தது. அது எப்படி இவனுக்குத் தெரியும். நான் அதைப்பற்றி இவனிடம் சொல்லவேயில்லையே என்று நினைத்துக் கொண்டு "அதெப்படி உனக்குத் தெரியும்" என்றேன்.

"எனக்கும் அந்த அசுப்புத் தெரிஞ்சதான் சேர். ஆனா நீங்க பயந்திடுவீங்கெண்டுதான் அப்ப நான் சொல்லல்ல. கறுப்பு நாய் வந்ததும் உண்மதான் சேர்." என்றான்.

அவனை நான் ஆச்சரியமாகப் பார்த்தபடி மௌனமாக இருக்க, அப்போது நிலவிய அமைதியை அவனது வார்த்தைகள் கிழித்துக்கொண்டு வந்தன.

"சேர், நீங்க கல்முனைக்கு வந்திட்டீங்க. தாண்டியடி ஊராக்கள் வந்து எல்லாக் கதயும் சொன்னாங்க" என்று கூறிக் கதையைக் கூறிமுடித்தான்.

அவன் கூறிமுடித்த ஊராட்கள் சொன்ன கதையின் சாராம்சம் இதுதான். லொறி 'ஸ்ராட்' நின்ற இடத்தில் சில மாதங்களுக்கு முன் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவன் விபத்தில் சிக்கி இறந்திருந்தான். அதன்பின்பு அவ்விடத்தில் இப்படியான மறிப்பு நிகழ்வுகள் அடிக்கடி நடக்கும். ஒரு சிலர் 'பேய்' அடித்தும் இறந்துள்ளனர். இன்னும் சிலர் தப்பிவந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் காய்ச்சல் வந்து பலநாட்கள் படுத்த படுக்கையுமாகியுமுள்ளனர். நல்லகாலம் நாம் தப்பி வந்துவிட்டோமென்று ஊராட்கள் கூறியுள்ளார்கள். நான் பயப்படாமல் இருந்தது நல்லதாகப் போய்விட்டதாம்.

இதை நம்புவதா? இல்லையா? என்பது எனக்குத் தெரியவில்லை. வழமையாகப் பேய்-பிசாசு-பில்லி-சூனியம் என்பவற்றில் எல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. கதிர்காமத்தம்பி மீண்டும் கதையைத் தொடர்ந்தான்.

"சேர்! நமக்குத் தெரியாம நாம ஆபத்தில இரிக்கக்கொள்ள சில நல்ல ஆவிகள் நமக்கு உதவ வருங்கள். கெட்ட ஆவியிலிருந்து நம்மளக் காப்பாத்தத்தான் அந்த நல்ல ஆவிகள் வாற. அந்தக் கறுப்புநாய் உங்களுக்கு உதவத்தான் வந்தது சேர்" என்றான்.

இதுவரைக்கும் எழுதிமுடித்த நான் சிறுகதையை எப்படி நிறைவு செய்வதென்று சிந்தித்தேன். கதிர்காமத்தம்பி மட்டக்களப்பு களுதாவளை ஊரைச்சேர்ந்தவன். அவனது ஊர் மாந்திரீகத்துப் பேர்போனது. தனக்கும் ஓரளவு மந்திரம்தெரியுமென்று முன்பொரு தடவை பேச்சுவாக்கில் என்னிடம் கூறியுமிருக்கிறான். மந்திரம் சொல்லித்தான் கறுப்புநாயை விரட்டியிருப்பானோ? உதவி செய்யவந்த நாயை ஏன் விரட்டப்போகிறான்? இல்லை! என் கண்களுக்குக் கறுப்பு நாயை மந்திரம் சொல்லி மறைத்திருப்பானோ? ஓரிருநிமிடங்கள் அமைதியாக இருந்தபோது வாய்க்குள் ஏதோ முணுமுணுத்த பின்தானே என்னிடம் "நாய் ஓடிற்று" என்றவன். நான் பயந்து விடக்கூடாதென்று நினைத்திருப்பான்.

இப்படியாக என் சிந்தனை குறுக்குமறுக்கும் ஓடிற்று. பின் சிறுகதையைப் பின்வருமாறு முடித்தேன்.

கதிர்காமத்தம்பி கூறியதை நம்புவதா? இல்லையா? என்று எனக்குக் குழப்பமாயிருந்தது. ஆனால், நான் அடைந்த அனுபவம் உண்மையானது.


கதையின் கடைசிவரிகளை இவ்வாறு எழுதி முடித்தபின் கீழே கதை எழுதப்பட்ட தாளின் வலதுபுற ஓரத்தில் அடைப்புக்குறிக்குள் 'யாவும் கற்பனையல்ல' என்று போட்டேன். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற நூல்கள்




| | |
|---|---|
| நூல் | : தமிழர் அரசியலில் மாற்றுச் சிந்தனைகள் |
| வகை | : அரசியல் கட்டுரைகள் |
| மொழி | : தமிழ் |
| வெளியீட்டாளர் | : 'பொதுவெளி' |
| பதிப்பகம் | : 'குமரன் புத்தக இல்லம்', கொழும்பு |
| வெளிவந்த ஆண்டு | : 2016 |
| பக்கங்கள் | : 108 |
| ISBN | : 978- 955-7264-00-4 |




| | |
|---|---|
| நூல் | : விளைச்சல் |
| வகை | : குறுங்காவியம் |
| மொழி | : தமிழ் |
| வெளியீட்டாளர் | : 'செங்கதிர்' இலக்கிய வட்டம், மட்டக்களப்பு |
| பதிப்பகம் | : 'குமரன் புத்தக இல்லம்', கொழும்பு |
| வெளிவந்த ஆண்டு | : 2017 |
| பக்கங்கள் | : 100 |
| ISBN | : 978-955-7409-00-9 |




| | |
|---|---|
| நூல் | : சமம் |
| வகை | : உருவகக் கதைகள் |
| மொழி | : தமிழ் |
| வெளியீட்டாளர் | : 'செங்கதிர்' இலக்கிய வட்டம், மட்டக்களப்பு |
| பதிப்பகம் | : 'வணசிங்க பிரிண்டர்ஸ்', மட்டக்களப்பு |
| வெளிவந்த ஆண்டு | : 2022 |
| பக்கங்கள் | : 84 |
| ISBN | : 978- 624-6177-03-4 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கதிரோன் எழுதியுள்ள **"யாவும் கற்பனையல்ல"** என்ற இச் சிறுகதைத் தொகுப்பு சமகால ஈழத்து இலக்கியச் செல்நெறியிலிருந்து விலகிநிற்கின்ற வித்தியாசமான செல்நெறிசார்ந்த தொகுப்பாகின்றது.

சமூக, போராட்ட, அரசியல் சார்ந்த முக்கியமான சில விடயங்களைத் துணிவுடன் ஆரோக்கியமான விமர்சனக் கண்ணோட்டத்தில் சிறுகதைகளாக 'ராஸ்கல்ஸ்', 'சகோதரத்துவம்', 'ஊர்மானம்', 'துரோகி' ஆகிய சிறுகதைகள் காணப்படுகின்றன. இத்தகைய அணுகுமுறையில் எழுதுகின்ற எழுத்தாளர்கள் சிலரேயுள்ள வரிசையில் இப்போது செங்கதிரோனும் இச் சிறுகதைகளூடாக இணைந்து கொள்கிறார்.

**பேராசிரியர்.செ.யோகராசா**
மேனாள் மொழித்துறைத் தலைவர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனுபவம் நிறைந்த படைப்பாளி. சமூகப் பொறுப்புடன் பிரச்சினைகளை அணுகித் தீர்வோடு கதைசொல்லும் திறமை படைத்தவர். சமீப காலமாகத்தான் சிறுகதை மஞ்சரியோடு தன் தொடர்புகளை விஸ்த்தரித்துக் கொண்டவர். இதுவரை மூன்று சிறுகதைகள் எமக்காக எழுதியுள்ளார்.

**சிறுகதை மஞ்சரி**
**இதழ் - 30**

சிறுகதை என்ற சொல்லுக்கு அகராதிப் பொருள்போல, 13 சிறுசிறு, கதைகளைத் தந்துள்ள இந்தப் படைப்பாளியின் எழுத்தில், ஆங்காங்கே தூவப்பட்டுள்ள ஏதோ ஒரு மந்திரப்பொடி நம்மை அவரின் எழுத்தின் மீது வசியம்செய்து இடையறாது வாசிக்கவும் இவருடனே வசிக்கவும் செய்து விடுகிறது. தேர்ந்த கதைக் கருக்களை நேர்த்தியான முறையில் வடிவமைத்து, தன் நிர்மாணங்களைத் தகுந்த முறையில் கட்டமைத்து வாசகர்முன் வைப்பதில் வெற்றி பெற்றிருக்கிறார் இந்த எழுத்து எந்திரி.

எழுத்தூழியத்தில் நீண்டகால அனுபவச் செழுமை காரணமாக தன் கதைகளை மிகவும் இலாவகமாகச் சொல்லிச் செல்லும் இந்தக் கதைசொல்லியின் வாழ்வியலின் பல்வேறுபட்ட அனுபவக் கூறுகளும், ஆழமான வாசிப்பின் அறிவுக் கூர்மையும், இத் தொகுப்பில் விரவிக்கிடப்பதை நம்மால் உணரக்கூடியதாக உள்ளது. இந்தக்கதைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பிரித்து ஆராய்ந்து, அவற்றின் வார்ப்புத் திறன், சொல்முறைமை, கையாண்ட உத்திகள் எனப் பேசிச்செல்ல எத்தனையோ விடயங்கள் உள்ளன. அகண்ட தமிழிலக்கியப் பரப்பில் அவைபற்றிப் பேசப்படவேண்டிய அவசியமும் உள்ளது. தவிரவும், இவருக்குள் இயங்கும் ஒரு சமூகப் போராளியின், ஆக்ரோஷ வெளிப்பாடு, சில கதைகளில் முனைப்புக் காட்டுகிறது. அதே சமயம் அவர் அக்கதைகளை ஒரு, தீவிரப் போக்கில் சொல்லுகிற தன்மை, செங்கதிரோனின் சமுக அக்கறையை வெளிக்காட்டுகிறது.

தீரன்.ஆர்.எம்.நௌஷாத்.

Price LKR 500

காந்தள் அச்சகம் - புதுக்குடியிருப்பு
0652226722, 0752221444

9 786249 313705

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org